# உதயன்

54 பக்கங்கள்

விலை ரூபா 25.00

www.onlineuthayan.com

சுடர் 28 கதிர் 093 வள்ளுவர் ஆண்டு 2044 மாசி 15 புதன்கிழமை (27/02/2013) UTHAYAN - A Lively National Tamil Daily




பக்கம் 8 — 'ஸ்லீப்பர் தீவிரவாதிகள் 200 பேர் இந்தியாவுக்குள்





பக்கம் 9 — அமெ.-இஸ்ரேல் ஏவுகணை சோதனை


பக்கம் 13 — கல்வியே எமது இருப்பை தக்கவைக்கும்





பக்கம் 23 — ஆசியை தோற்கடித்தது இந்தியா




## இந்தியாவுடன் சமரசத்துக்கு இலங்கை கடும் பிரயத்தனம்

### புதுடில்லியின் சமிக்ஞைக்காகக் காத்திருப்பு

கொழும்பு,பெப்.27

வன்னிப் போரின் இறுதிக்கட்டத்தில் இலங்கைப் படைகளால் இழைக்கப்பட்ட போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் குறித்து, விசாரணை நடத்தக் கொழும்புக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் ஜெனிவாவில் அமெரிக்கா தீர்மானம் கொண்டு வருவதற்கு முன்னதாக, இந்தியாவுடன் சமரசம் செய்து கொள்வதற்கு இலங்கை அரசு கடும் பிரயத்தனங்களை மேற்கொண்டுவருவதாகத் தெரியவருகிறது.

ஜெனிவாவில் ஏற்படவுள்ள அழுத்தங்களில் இருந்து இலங்கையைக் காப்பாற்றக் கூடிய நிலையில் இந்தியாவே இருப்பதால், அதனுடன் பேசி, ஓர் இணக்கப் போக்கை ஏற்படுத்த இலங்கை அரசு முயற்சிப்பதாகக் கொழும்பு இராஜதந்திர வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது.

இலங்கையின் நிலைப்பாட்டைப் புதுடில்லிக்கு விளங்கப்படுத்தி, அதன் ஆதரவைத் திரட்டுவதற்காக

பார்க்க பக்கம் 04

## ஜெனிவாவில் இன்று உரையாற்றுகிறார் மஹிந்த சமரசிங்க

ஜெனிவா,பெப். 27

ஜெனிவாவில் ஆரம்பமாகியுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவை 22ஆவது கூட்டத் தொடரில் இலங்கையின் மனித உரிமை நிலைமைகள் குறித்து அமைச்சர் மஹிந்த சமரசிங்க இன்று புதன்கிழமை விசேட உரையாற்றவுள்ளார்.

அமைச்சர் மஹிந்த சமரசிங்க தலைமையில் இலங்கைக் குழுவினர் ஜெனிவா

பார்க்க பக்கம் 04

### விடுதலைப் புலிகள் பற்றிய தகவல்களைப் பெறுவதற்கு

# படையினரின் ஆயுதம் பாலியல் வன்புணர்வு


### ஆதாரங்களை நேற்று வெளியிட்டது மனித உரிமைகள் கண்காணிப்பகம்

கொழும்பு, பெப்ரவரி 27

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புடன் தொடர்பிருக்கலாம் என்ற சந்தேகத்தின்பேரில் போர்க் காலத்தில் கைதுசெய்யப்பட்ட பலரை இலங்கை இராணுவத்தினர் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தியுள்ளனர் என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் நேற்று தெரிவித்தது.

இதனை இலங்கை இராணுவம் ஆதாரமற்ற குற்றச்சாட்டு என மறுத்தாலும், பாதிக்கப்பட்டவர்களிடம் இரகசியமாக விசாரணை நடத்தப்பட்ட பின்னரே தகவல் வெளியிடப்பட்டுள்ளது என மனித உரிமைகள் கண்காணிப்பகம் உறு

பார்க்க பக்கம் 04




## பான் – கீ மூனின் கருத்து விரைவில்

நியூயோர்க்,பெப். 27

இலங்கை குறித்து ஐக்கிய நாடுகள் சபை பொதுச் செயலாளர் பான் -கீ மூன் விசேட அறிவிப்பொன்றை வழங்கவுள்ளார்.

ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே ஐ.நா. பொதுச் செயலாளர் பான் -கீ மூனின் ஊடகப் பேச்சாளர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஐ.நா. எவ்விதமான நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக ஊடகவியலாளர் ஒருவர் கேள்வி எழுப்பினார்.

இலங்கை மனித உரிமை மீறல்கள் குறித்து எழுந்துள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபை விசேட கவனத்தைச்

பார்க்க பக்கம் 04

## இதுவும் புலிகளின் தாக்குதலாம்

கொழும்பு,பெப். 27

இலங்கை தகவல் ஊடகத்துறை அமைச்சின் இணையத்தளம் மீது மேற்கொள்ளப்பட்ட சைபர் தாக்குதலை, வெளிநாடுகளில் உள்ள விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களே மேற்கொண்டதாக இலங்கை அரசு குற்றஞ்சாட்டியுள்ளது.

ஊடக அமைச்சின் செயலர் சரித்த ஹேரத் இது தொடர்பாகதெரிவிக்கையில்-

இதனை நாம் ஒரு சைபர் தீவிரவாத நடவடிக்கையாகவே பார்க்கிறோம். இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ள நேரம் முக்கியமானது.

ஜெனிவாவில், ஐ.நா. மனித உரிமைகள் சபை

பார்க்க பக்கம் 04

## குற்றச்சாட்டை அடியோடு மறுக்கிறது இராணுவம்

கொழும்பு, பெப்.27

மனித உரிமைகள் கண்காணிப்பகம் அதன் புதிய அறிக்கையில் குற்றஞ்சுமத்துவதைப்போல தமிழீழ விடுதலைப் புலிகள் உறுப்பினர்களோ, ஆதரவாளர்களோ பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்படவில்லை. இந்த அவதானிப்பு மையத்தின் குற்றச்சாட்டுகளை இலங்கை இராணுவம் அடியோடு மறுக்கின்றது.

- இவ்வாறு இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய ஆணித்தரமாகக் குறிப்பிட்டுள்ளார்.

மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் புதிய

பார்க்க பக்கம் 04

## படையினர் சுட்டதில் 2 பேர் சாவு

மட்டக்களப்பு,பெப். 27

இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இருவர் உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். அந்த இருவரும் புலி ஆதரவாளர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வாழைச்சேனை, புணாணை பிரதேசத்தில்வைத்துக் காரொன்றைக் கடத்திச்செல்வதற்கு முயன்ற வேளையில் பொலிஸாரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் படுகாயமடைந்து இந்த இருவரும் தப்பிச் சென்று விட்டனர். இதனையடுத்து திம்புலாகல மலையில் இராணுவத்தினர் தேடு

பார்க்க பக்கம் 04

## புனர்வாழ்வு முகாம்களைப் பார்க்க செஞ்சிலுவைக் குழுவுக்கு அனுமதி

கொழும்பு,பெப். 27

விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகளுக்கு புனர்வாழ்வு அளிக்கப்பட்டு வரும் முகாம்களைப் பார்வையிடுவதற்கு செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவுக்கு இலங்கை அரசு அனுமதி அளித்துள்ளது. மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர், இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் பிரதிநிதிகள் குழுவொன்று கடந்த 22 ஆம் திகதி மருதமடுவில் உள்ள புனர்வாழ்வு முகாமுக்குச் சென்று அங்குள்ள போராளிகளைப் பார்வையிட்டுள்ளதாக இராணுவத்தின் புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் பிரிகேடியர் தர்சன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

2010ஆம் ஆண்டு தொடக்கம் புனர்வாழ்வு முகாம்களுக்குச் சென்று பார்வையிடுவதற்கு செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அனுமதிக்கப்படவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

பார்க்க பக்கம் 04

## 'போர் தவிர்ப்பு வலயம்' ஜெனிவாவில் திரையிடுவதற்கு இலங்கை எதிர்ப்பு

ஜெனிவா,பெப்.27

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில், சனல் - 4 தொலைக்காட்சி தயாரித்துள்ள "போர் தவிர்ப்பு வலயம்:சிறிலங்காவின் கொலைக்களங்கள்' என்ற ஆவணப் படத்தை திரையிடுவதற்கு இலங்கை கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

ஜெனிவாவில், நேற்று முன்தினம் தொடங்கிய ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 22 ஆவது கூட்டத்தொடரின் ஓரங்க நிகழ்வாக, இந்த ஆவணப்படத்தை எதிர்வரும் மார்ச் முதலாம் திகதி திரை

பார்க்க பக்கம் 04

## ஜெனிவாப் பிரேரணைக்கு இலங்கை ஒத்துழைக்கும்

### நம்பிக்கை வெளியிடுகிறது அமெரிக்கா

ஜெனிவா, பெப்.27

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 22 ஆவது கூட்டத்தொடரில் சமர்ப்பிக்கப்படவுள்ள பிரேரணைக்கு இலங்கை அரசு ஒத்துழைப்பு வழங்குமென அமெரிக்கா நம்பிக்கை கொண்டுள்ளது. சர்வதேச விவகாரங்களுக்

பார்க்க பக்கம் 04

## புனர்வாழ்வை உறுதி செய்தாலே உண்ணாவிரதத்தைக் கைவிடுவேன்

### தமிழ்க் கைதி சட்ட மா அதிபருக்கு கடிதம்

யாழ்ப்பாணம், பெப். 27

தமிழ் அரசியல் கைதிகள் அனைவருக்கும் அரசு, 8 மாதங்களுக்கு முன்னர் அளித்த உறுதிமொழிக்கு அமைய அனைவருக்கும் புனர்வாழ்வு வழங்குவதற்கான நடவடிக்

பார்க்க பக்கம் 04

## 2 கிலோ கஞ்சாவுடன் ஒருவர் கைது

யாழ்ப்பாணம்,பெப்.27

சுமார் 2 கிலோகிராம் கஞ்சா போதைப் பொருளுடன் யாழ்.நகரில் வைத்து ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார். அவரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்.நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது என்று யாழ். பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் பொலிஸாரும் விசேட அதிரடிப்படையினரும் இணைந்து யாழ்.நகரைச் சேர்ந்த ஒருவரைக் கைது செய்துள்ளதாகவும் அவரிடமிருந்து ஒரு கிலோ 900 கிராம் கஞ்சா போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளதாகவும் இது தொடர்பில் தாம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் யாழ். பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-4)

## யாழ்.அரச அதிபரின் கருத்துக்கு வலி.வடக்கு பிரதேச சபை கண்டனம்

### கூட்டத்தில் ஏகமனதாக தீர்மானம் நிறைவேறியது

யாழ்ப்பாணம்,பெப்.27

யாழ்.மாவட்டத்தில் மீளக்குடியமர வேண்டிய மக்கள் தொடர்பான புள்ளி விவரங்கள் தன்னிடமில்லை என்று யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமை நாயகம் தெரிவித்த கருத்தைக் கண்டித்து வலி. வடக்கு பிரதேச சபையில் தீர்மானமொன்று ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

வலி.வடக்கு பிரதேச சபையின் மாதாந்த அமர்வு நேற்று மாலை, தவிசாளர் சோ. சுகிர்தன் தலைமையில் பிரதேச சபையின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

யாழ்.மாவட்டத்தில் இன்னும் எத்தனை குடும்பங்கள் மீளக்குடியமர்த்தப்பட வேண்டும் என்ற புள்ளி விவரங்கள் இல்லை என்று யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்திருந்தார்.

**முன்னர் இருந்த அரச அதிபரினால் மீளக்குடியமர வேண்டிய மக்கள் தொடர்பான புள்ளி விவரங்கள் சரியாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன.**

இவரது கருத்து நீண்ட காலமாக இடம்பெயர்ந்து அல்லற்பட்டுக் கொண்டிருக்கும் மக்களுக்கு மன வேதனையை ஏற்படுத்துகின்றது. இவருக்கு முன்னர் இருந்த அரச அதிபரினால் மீளக்குடியமர வேண்டிய மக்கள் தொடர்பான புள்ளி விவரங்கள் சரியாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த நிலையில் தற்போதைய அரச அதிபர் புள்ளி விவரங்கள் இல்லை என்று சொல்லியிருப்பது எமக்கு மனவேதனையளிக்கின்றதுடன், மீள்குடியமர்வை எதிர்பார்த்திருக்கும் மக்களுக்கு ஏமாற்றத்தை அளிக்கின்றது.

எனவே அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகத்தின் கருத்தைக் கண்டிக்க வேண்டும் எனத் தெரிவித்து சபையின் ஆளுங் கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதேச சபை உறுப்பினர் வ.முருகேசு தீர்மானத்தை முன்மொழிய ஆளுங்கட்சியைச் சேர்ந்த பொ.செல்வராஜா வழிமொழிந்தார்.

இந்தத் தீர்மானத்தை சபையின் எதிர்க்கட்சியான ஈ.பி.டி.பி. உட்பட ஆளும் கட்சியைச் சேர்ந்த அனைவரும் ஏகமனதாக ஏற்றுக் கொண்டனர். (ஐ-5)

## நாளந்தம் 30 பேர் நாய்க் கடிக்கு இலக்கு

யாழ்ப்பாணம்,பெப்ரவரி.27

யாழ்.குடாநாட்டில் நாய்க்கடிக்கு இலக்காகி தினமும் 30 பேர் வரை சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்படுகின்றனர். வளர்ப்பு நாய்களால் கடிபட்டோரே அதிகமானோர் சேர்க்கப்பட்டுள்ளனர் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

குடாநாட்டில் நாய்க்கடிக்கு ஆளாகுவோரின் எண்ணிக்கை தினமும் 30 பேராகக் காணப்படுகிறது. இது தவிர முன்னர் நாய்க்கடிக்கு இலக்காகியோரில் மேலதிக சிகிச்சைக்காக தினமும் 20 பேர் வரை யாழ்.போதனா வைத்தியசாலைக்குச் சென்று வருகின்றனர்.

வளர்ப்பு நாய்களுடன் பழகும் போது அவை விளையாட்டாக கையிலோ, காலிலோ பற்களால் கௌவுகின்றன. அப்படிக் கௌவும் போதே அநேகமானவர்களுக்கு காயம் ஏற்பட்டுவிடுகிறது.

பல இடங்களில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுகின்றன. நாய்க்கடிக்கு உள்ளானோர் அருகில் உள்ள வைத்தியசாலைகளில் சிகிச்சைக்காக சென்றால் சிகிச்சை அளிக்காது திருப்பி அனுப்பப்படுவதாகவும், இதனால் பெரும் சிரமங்களுக்கு மத்தியில் வேறு வைத்தியசாலைகளை நாட வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. சில வேளைகளில் சிலர் சிகிச்சை பெறாமலேயே இருந்து விடுகின்றனர்.

இது தொடர்பில் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரனுடன் தொடர்பு கொண்டு கேட்ட போது, சில வைத்தியசாலைகளைச் சேர்ந்த வைத்தியர்களே நோயாளர்களை அவ்வாறு திருப்பி அனுப்புகின்றனர். ஆகவே அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். (ஐ-4-14)

## பிரதம நீதியரசருக்கு எதிரான வழக்கு மீண்டும் தள்ளுபடி

கொழும்பு,பெப் 27

இலங்கையின் புதிய பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸுக்கு எதிராகத் தொடுக்கப்பட்டு, முன்பு நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்ட மோசடிக் குற்றச்சாட்டு தொடர்பான வழக்கொன்றை மீண்டும் விசாரிக்குமாறு தாக்கல் செய்யப்பட்ட மனு ஒன்றை நேற்று செவ்வாய்க்கிழமை உயர் நீதிமன்றம் நிராகரித்தது.

பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் சட்ட மா அதிபராக இருந்தபோது, சுங்கவரி மோசடி தொடர்பான வழக்கொன்றில், தனியார் நிறுவனத்துக்கு ஆதரவாக, வழக்கை சட்டவிரோதமான முறையில் திரும்பப் பெற்றதன் மூலம் அரசுக்கு சுமார் 600 மில்லியன் இலங்கை ரூபா நட்டத்தை ஏற்படுத்தியதாக அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

எனவே இந்த வழக்கைத் திரும்பப் பெற்றதன் மூலம், அவர் அரசியல் சட்டத்தை மீறிச்செயல்பட்டார் என்று அறிவிக்குமாறு நாகாநந்த கொடித்துவக்கு என்ற வழக்கறிஞரால் தொடுக்கப்பட்ட இந்த வழக்கில் கோரப்பட்டிருந்தது.

அண்மையில் இந்த வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம், இந்த மனுவில் கூறப்பட்டிருக்கும் விடயங்கள் அடிப்படையற்றவை என்று குறிப்பிட்டிருந்தது. இந்த வழக்கை ஐந்து நீதிபதிகள் கொண்ட புதிய ஆயம் ஒன்று விசாரிக்க வேண்டும் என்று கொடித்துவக்கு கோரியிருந்தார்.

ஆனால், ஷிராணி திலகவர்த்தன உட்பட மூன்று நீதியரசர்கள் அடங்கிய குழு, இந்த வழக்கை மீண்டும் விசாரிக்க அரசியல் சட்டத்தில் இடமில்லை என்று தெரிவித்தனர். (த)

## போர்க்குற்றம் குறித்து விசாரிக்க இலங்கை ஆர்வம் காட்டவில்லை

### அமெரிக்கா கூறியதாக விக்கிலீக்ஸ் தகவல்

லண்டன்,பெப் 27

போர்க்குற்றச் செயல்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதில் இலங்கை உரிய ஆர்வம் காட்டவில்லை என அமெரிக்கா கருதியதாக விக்கிலீக்ஸ் குறிப்பிட்டுள்ளது.

2010ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் போதும் போர்க் குற்றச் செயல்கள் தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்படவில்லை என அப்போதைய அமெரிக்கத் தூதுவர் பற்றிசீயா புட்டினிஸ் தெரிவித்துள்ளார்.

ஆட்சி செய்யும் அரசின் உயர் அதிகாரிகள் படையினருக்கு எதிராகத் தாமே விசாரணை செய்யும் நடவடிக்கையானது சிக்கல்களை ஏற்படுத்தும்.

**அரசின் உயர் அதிகாரிகள் படையினருக்கு எதிராகத் தாமே விசாரணை செய்யும் நடவடிக்கையானது சிக்கல்களை ஏற்படுத்தும்.**

போர்க்குற்றச் செயல்கள் தொடர்பில் விசாரணை நடத்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவினை நியமித்துள்ளார்.

எனினும் இந்த ஆணைக் குழுவின் பணிகள் 2009ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் முடிவுக்கு கொண்டு வரப்பட வேண்டுமென முன்னர் அறிவிக்கப்பட்ட போதிலும் அதற்கு, 2010ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வரையில் மேலதிக தவணைக் காலம் வழங்கப்பட்டது.

போர்க்குற்றச் செயல்கள் தொடர்பில் வலியுறுத்துவதன் மூலம் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளில் விரிசல் ஏற்படக் கூடிய அபாயம் நிலவுகின்றது.

இறுதிக்கட்டப் போரின் போது தமிழீழ விடுதலைப் புலிகள் அதிகளவு குற்றச் செயல்களில் ஈடுபட்டதாக பல்கலைக்கழக ஆசிரியர் ஒன்றியமும், அமெரிக்க இராஜாங்கத் திணைக்களமும் சுட்டிக் காட்டியுள்ளன. அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்துக்கு அனுப்பி வைத்த இரகசிய குறிப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். (த)

## அட்டவணைப்படுத்தப்படாத வெற்றிடங்களை நிரப்பும் சுற்றறிக்கையை மீளாய்வு செய்ய வலியுறுத்து

யாழ்ப்பாணம்,பெப்.27

உள்ளூராட்சி நிறுவனங்களில் அட்டவணைப்படுத்தப்படாத பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புதல் குறித்து வெளியான வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் சுற்றறிக்கையில் பதவி நிலைகளின் கல்வித் தகைமை மற்றும் நியமனங்கள், நேர்முகத் தேர்வுகள் தொடர்பான விவரங்களை மீளாய்வு செய்யுமாறு வலி.வடக்கு பிரதேச சபையின் தவிசாளர் சோ. சுகிர்தன் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்கு அவர் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அட்டவணைப் படுத்தப்படாத பதவிகளுக்கான கல்வித்தகைமைகளைப் பொறுத்தவரையில் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் தமிழ்/சிங்களம் உள்ளடங்கலாக இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் ஆகக் குறைந்தது ஆறு பாடங்களில் சித்தியடைந் திருத்தல் வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும் இத்தரங்களின் அடிப்படைத் தகைமையாகத் தரம்-8 அல்லது தரம்-9 ஆம் ஆண்டு சித்தியடைந்திருக்க வேண்டும் என்று உள்ளூராட்சி சேவை ஆணைக் குழுவின் செயலாளரின் 01/1986 ஆம் இலக்க சுற்றறிக்கை, 06/2006 ஆம் இலக்க பொதுநிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரின் சுற்றறிக்கை, வடமாகாண சபையின் உள்ளூராட்சி அதிகார சபை அட்டவணைப்படுத்தப்படாத ஊழியர் சேவைப் பிரமாணக் குறிப்பின் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் வடமாகாணம் தவிர்ந்த ஏனைய உள்ளூராட்சி மன்றங்கள் இந்தப் பதவிகளுக்கான கல்வித் தகைமையை தரம்-8 என்று நிர்ணயித்தே விளம்பரப் படுத்தியுள்ளன.

எனவே வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் சுற்றறிக்கையில் அட்டவணைப்படுத்தப்படாத அடிப்படை தரப் பதவிக்கான கல்வித் தகைமையை தரம்-8 அல்லது தரம்-9 எனத் திருத்தம் செய்ய வேண்டும். ஏற்கனவே தற்காலிக, சமயாசமய பதிவேடு, தன்னார்வ சேவை செய்யும் ஊழியர்கள் மற்றும் ஒப்பந்தப் பணியாளர்களாக உள்ளவர்க்கு முன்னுரிமை வழங்குவதற்கும் நிரந்தர ஊழியர்களுக்கு பதவியுயர்வுகளை வழங்குவதற்கும் ஏற்ற வகையில் தங்கள் பணிப்புரைகளை வழங்குமாறு கோருகின்றேன்.

இந்தப் பதவிகளுக்கான நேர்முகப் பரீட்சைக்குழு நியமனம், ஊழியர் நியமனம் பற்றி இறுதித் தீர்மானம் எடுத்தல் என்பன தெரிவு செய்யப்பட்ட சபைகளுக்கே உரியன. இதனை மீறும் வகையில் உள்ளூராட்சி அமைச்சின் ஆணையாளராலும் செயலாளராலும் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சின் செயலாளரின் 01/1986 ஆம் ஆண்டு இலக்க சுற்றறிக்கை, பிரதேச சபைகள் சட்டத்தின் பிரிவு 19(11) ஐயும், நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 36(2) பிரிவையும், அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தில் 9ஆம் அட்டவணையில் நிரல் 1 இல் 4,3 இல் குறிப்பிட்ட அதிகாரங்களையும் மீறுகின்றன. எனவே மேற்படி விடயத்தை கவனத்தில் கொண்டு சுற்றறிக்கையை மீளாய்வு செய்ய வேண்டும்- என்றுள்ளது. (த-5)

## ஆசிரிய இடமாற்றம் குறித்த முறைப்பாடுகள் விசாரணைக்கு

### நாளை மனித உரிமைகள் ஆணைக்குழு யாழ்.அலுவலகத்தில்

யாழ்ப்பாணம்,பெப்.27

இடமாற்றத்தால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு ஆசிரியர்கள் 94 பேர், மனித உரிமை ஆணைக்குழுவில் நேற்று முறைப்பாடு செய்தனர். இந்த நிலையில் இடமாற்றம் தொடர்பான முறைப்பாடுகள் அதிகளவில் பதிவு செய்யப்பட்டுள்ளதால் அனைத்தையும் நாளை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளவுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக் குழு முடிவு செய்துள்ளது.

இந்தத் தகவலை இலங்கை மனித உரிமை ஆணைக் குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் தெரிவித்தார்.

2005 ஆம் ஆண்டுக்கு முன்னர் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆசிரியர் நியமனம் பெற்றுக்கொண்டோம். 8 வருடங்களுக்கு மேலாக போர்க் காலத்திலும் முல்லைத்தீவு மாவட்டத்தில் சேவையாற்றினோம். இந்த நிலையில் யாழ். மாவட்டத்திற்கு இடமாற்றம் கோரி விண்ணப்பித்த போதும் எங்களுக்கு இடமாற்றம் வழங்கப்படவில்லை.

இது தொடர்பில் நாங்கள் மேன்முறையீடு செய்துள்ள போதும் அது நிராகரிக்கப்பட்டதா அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்டதா என்பதைக் கூட இதுவரையில் அறியத்தரவில்லை. எனவே எமக்கு வழங்கப்பட வேண்டிய இடமாற்றத்தைப் பெற்றுத்தர வேண்டும் என்று கோரியே 94 ஆசிரியர்கள், இலங்கை மனித உரிமை ஆணைக் குழுவின் யாழ்.பிராந்தியக் கிளையில் நேற்று முறைப்பாடு செய்துள்ளனர்.

இடமாற்றம் தொடர்பில் அதிகளவான முறைப்பாடுகள் இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய கிளைக்கு கிடைத்திருப்பதால் எல்லா முறைப்பாடுகளையும் ஒன்றாக நாளை வியாழக்கிழமை விசாரிக்க இலங்கை மனித உரிமை ஆணைக்குழு தீர்மானித்துள்ளது. (ஐ-5)

# பாதிக்கப்படும் விவசாயிகளின் கடன்களுக்கு உரிய சலுகை

## வழங்குவதற்கு மத்திய வங்கி அங்கீகாரம்

அச்சுவேலி,பெப்.27

*வறுமை ஒழிப்புத் திட்டத்தின் கீழ் வங்கிகளில் பயிர்ச்செய்கை நடவடிக்கைக்கு கடன்பெற்ற விவசாயிகளுக்கு அவர்களின் பயிர்கள் அழிவடையும் வேளையில் அல்லது உரிய விளைச்சலைப் பெற்றுக் கொள்ள முடியாத சந்தர்ப்பத்தில் கடனைச் செலுத்துவதில் சலுகைகள் வழங்கப்படும்.*

இந்த வகையில் பெற்ற கடனை இரண்டு வருட காலத்தில் நான்கு தடவைகளில் செலுத்தவும், உரிய முறையில் தொடர்ந்து பயிர்ச்செய்கைக்கான கடனை வழமை போல பெற்றுக் கொள்ளவும் முடியும்.

இவ்வாறு இலங்கை மத்திய வங்கியின் வறுமை ஒழிப்பு கடன்திட்ட ஆலோசகரும், குழுக்களின் தலைவருமான ஆர்.ஸ்ரீபத்மநாதன் தெரிவித்தார்.

காலம் தப்பிய மழை, வெள்ளம் போன்ற நிலையினால் பயிர்ச்செய்கை பாதிக்கப்படுவதாலும், உரிய முறையில் விளைச்சலைப் பெறமுடியாமல் இருப்பதாலும் வங்கிகளில் பெற்றுக் கொண்ட கடன் தொகையை மீளச் செலுத்துவதில் விவசாயிகள் பெரும் இடரை எதிர் கொண்டு வருகின்றனர்.

இது குறித்துக் கேட்ட போதே மத்திய வங்கியின் கடன் திட்ட ஆலோசகர் ஸ்ரீபத்மநாதன் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

விவசாயிகள், தொழிலாளிகள் வறுமை ஒழிப்புத் திட்டத்தின் கீழ் பெற்றுக் கொண்ட கடன்களை மீளச் செலுத்தமுடியாத நிலை ஏற்படும்போது அவர்கள் மேலும் இடர்படுவதையோ, பெற்ற கடனைச் செலுத்தாமைக்காக மேலதிக வட்டிக்குக் கடன்பெற்று துன்பப்படுவதையோ இலங்கை மத்திய வங்கி அனுமதிக்கவில்லை. இதற்காக பல்வேறு செயற்றிட்டங்களை வறுமை ஒழிப்பு கடன் திட்டத்தில் மத்திய வங்கி அறிமுகம் செய்துள்ளது.

மேற்படி சலுகைகள், வசதிகளை உரிய முறையில் நடைமுறைப்படுத்துவதில் தனிப்பட்ட சிரமங்கள் மற்றும் வேலைப்பளுக்களை கருத்தில் கொண்டு அதிகாரிகள் தயங்குகின்றனர். விவசாயிகளும், தொழிலாளர்களும் இந்த விடயத்தில் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் தெரியாத நிலையில் கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கு மேலதிக கடன்களை பெற்றுத் துன்பப்படுகின்றனர்.

இயற்கை இடர்காலநிலை முரண்பாடுகள் உள்ளிட்ட நிலைமைகளினால் பாதிப்படைவதை மதிப்பீடு செய்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கு இலங்கை வங்கியின் பிராந்திய உதவி முகாமையாளர், மக்கள் வங்கியின் பிராந்திய உதவி முகாமையாளர், கமநல சேவைகள் பிராந்திய ஆணையாளர் ஆகிய மூவர் கொண்ட குழுவுக்கு இலங்கை மத்திய வங்கி அதிகாரம் வழங்கியுள்ளது.

கடன்பெற்ற பயனாளி பாதிப்படைந்து கடனை திருப்பிச்செலுத்த முடியாத நிலை தொடர்பாக அவர் தான் கடன் பெற்றுக் கொண்ட வங்கி முகாமையாளருக்கு எழுத்து மூலம் விண்ணப்பிக்க வேண்டும். அல்லது விவசாய சம்மேளனங்கள் மற்றும் நலன்புரி அமைப்புக்கள் தமது உறுப்பினர்களின் நிலைமை தொடர்பாக வங்கி முகாமையாளருக்கு தெரியப்படுத்த வேண்டும்.

வங்கி முகாமையாளர் தனது மேலிடத்துக்கு அதனைத் தெரியப்படுத்துவதன் மூலம் மூவர் அடங்கிய மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை பெறப்பட்டு அவர்களின் அறிக்கைக்கு அமைய சலுகைகள் வழங்கப்படும்.

★கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கு இரண்டு வருட கால அவகாசம் உரிய வட்டி (எட்டு வீதம்) வீதத்துடன்-

★நான்கு தடவை களுக்கு மேற்படாமல் இரண்டு வருடங்களுக்குள் கடனைத் திருப்பிச் செலுத்துதல்,

★வழமை போல பயிர்ச்செய்கைக்கான கடன் உதவியை தொடர்ந்து பெற்றுக் கொள்ளுதல் ஆகிய சலுகைகள் இதன் போது வழங்கப்படும்- என்றார். (த-11)

# மீளக்குடியமர்ந்த மக்களுக்கு பல்வேறு உதவிகள் வழங்கல்

யாழ்ப்பாணம்,பெப்.27

யாழ். மாவட்டத்தில் மீளக் குடியமர்வதற்காக அனுமதிக்கப்பட்ட பிரதேசங்களில் குடியமர்ந்த மக்களுக்கு பல்வேறுபட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட செயலகத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் 35 ஆயிரத்து 140 குடும்பங்களைச் சேர்ந்த 96 ஆயிரத்து 883 பேர் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

அண்மையில் தெல்லிப்பழை, சங்கானை மற்றும் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுகளில் மீள்குடியமர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் போது ஆயிரத்து 326 குடும்பங்களைச் சேர்ந்த 4 ஆயிரத்து 724 பேர் மீளக்குடியமர்ந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மீளக் குடியமர்ந்த மக்களுக்கு 11 வகையான பல்வேறுபட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

5 ஆயிரம் ரூபா பணம், 25 ஆயிரத்து 390 குடும்பங்களுக்கும், தற் காலிக கொட்டகைக்கான 20 ஆயிரம் ரூபா பணம் ,26 ஆயிரத்து 182 குடும்பங்களுக்கும், 11 ஆயிரத்து 121 குடும்பங்களுக்கு தகரமும், 26 ஆயிரத்து 302 குடும்பங்களுக்கு உணவல்லாத பொருள்களும், 13 ஆயிரத்து 428 குடும்பங்களுக்கு விவசாய உபகரணங்களும், 22 ஆயிரம் குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகளும், 18 ஆயிரத்து 473 குடும்பங்களுக்கு சிமெந்துப் பைகளும், 31 ஆயிரத்து 140 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருள்களும்-

2 ஆயிரத்து 348 பேருக்கு இந்திய வீட்டுத்திட்ட உதவிகளும், 3 ஆயிரத்து 100 குடும்பங்களுக்கு வேறு வீட்டுத் திட்ட உதவிகளும், தற்காலிகக் கூடாரங்கள் 3 ஆயிரத்து 500 குடும்பங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

மேலும் மக்கள் மீளக்குடியமர்ந்துள்ள பகுதிகளில், 705.51 ஹெக்ரேயர் நிலப் பரப்பில் காடுகள் வெட்டுவதற்கும், 213 கிலோ மீற்றர் நீளமான 20 பங்கர்களை அகற்றுவதற்குமாக 44.99 மில்லியன் ரூபா செல விடப்பட்டுள்ளது. இதனை விட காசுக்கான வேலை யின் கீழ் 7 பிரதேச செயலர் பிரிவு களில் 5 ஆயிரத்து 96 குடும் பங்களுக்கு 47.78 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-5)

## படையினரால் போதையில் மீட்கப்பட்ட வயோதிபர் சாவு

வடமராட்சி,பெப்.27

மது போதையில் உழன்ற நிலையில் காட்டுக்குள் இருந்து படையினரால் மீட் கப்பட்ட வயோதிபர் சிகிச் சைக்காக பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மரணமானார்.

மந்துவிலைச் சேர்ந்ததாகக் கூறப்படும் இந்த வயோதிபரை கரவெட்டி கப்பூது காட்டிலிருந்து படையினர் மீட்டிருந்தனர்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பயனளிக்காத நிலையில் மரணமடைந்த இவரது சடலம் உறவினர்களின் வருகைக்காக பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (த-8)

# பாலங்களைப் புனரமைக்க இப்போது நிதியில்லை

## கைவிரித்து விட்டாராம் ஜனாதிபதி

யாழ்ப்பாணம், பெப்.27

யாழ். மாவட்டத்தின் இணைப்புப் பாலங்களான அராலிப் பாலம் மற்றும் காரைநகர்-ஊர்காவற்றுறைப் பாலம் என்பவற்றைப் புனரமைப்பதற்கு ஆயிரத்து 200 மில்லியன் ரூபா தேவை என்று மதிப்பிடப்பட்டு ஜனாதிபதியிடம் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இதனை உடனடியாகப் புனரமைப்பது சாத்தியமற்றது என்று ஜனாதிபதி கையை விரித்துவிட்டார் என்று வீதி அபிவிருத்தி அதிகாரசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ். மாவட்டத்துக்கு இரண்டுவாரங்களுக்கு முன்னர் ஜனாதிபதி வருகைதந்த போது வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் தேவைப்பாடுகள் குறித்த அறிக்கை மாவட்ட விசேட அபிவிருத்திக் குழுக்கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

அராலிப்பாலம் புனரமைப்பதற்கு 700 மில்லியன் ரூபா நிதி தேவை. இந்தப் பாலம் அமைக்கப்படுவதன் மூலம் வலிகாமத்துக்கும் தீவுப்பகுதிக்குமிடையிலான போக்குவரத்து இலகுவாக்கப்படும். மீன்பிடி கைத்தொழில் முன்னேற்றமடையும். உள்ளூர் உற்பத்திப் பொருள்களை இலகுவாகச் சந்தைப்படுத்தக் கூடியதாக இருக்கும்.

நாகதீப விகாரைக்குப் பக்தர்கள் செல்வதற்கு இலகுவான மாற்றுவழியாகவும், காங்கேசன்துறை துறை முகத்திலிருந்து தீவுப்பகுதிக்கான குறைந்த தூரப் பாதையாகவும் இந்தப் பாலம் அமையும். மேலும் ஒரு லட்சம் பேர்வரையில் இந்தப்பாலம் அமைக்கப்பட்டால் நேரடியாக நன்மை அடைவார்கள்.

காரைநகர்- ஊர்காவற்றுறைப் பாலம் புனரமைப்பதற்கு 500 மில்லியன் ரூபா நிதி வரை தேவை என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இந்தப் பாலம் அமைப்பதனால் காரைநகருக்கும் ஊர்காவற்றுறைக்குமான பாதை இலகுவாக்கப்படுவதுடன் இதனால் இரண்டு லட்சம் பேர் வரையில் பயன் அடைவார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கோரிக்கைகள் ஜனாதிபதியிடம் முன்வைக்கப்பட்டுள்ள போதும், மிகப் பெரியளவிலான தொகை செலவுசெய்யப்பட வேண்டியிருப்பதால் உடனடியாகப் புனரமைப்பு வேலைகள் செய்யமுடியாதெனவும், காலப்போக்கில் அதனைச் செய்துகொள்ளலாம் எனவும் ஜனாதிபதி தெரிவித்ததாகக் கூறப்பட்டது. (த-5)



சாவகச்சேரி பிரதேச சபையின் வரணி பொது நூலகத்துக்கு கனடாவில் இயங்கும் வரணி ஒன்றியத்தின் தலைவர் க. சந்திரசேகரமுதலி கணினி மற்றும் உபகரணங்களைக் கையளித்தார். இந்த நிகழ்வு கடந்த 22ஆம் திகதி இடம்பெற்றது. (த-9)

## நிகழ்வுகள் இன்று

**பொதுக்கூட்டம்**

யாழ்.மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்கத்தின் பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும் காலை 9 மணிக்கு யாழ்.ப.நோ.கூ.சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சங்கத்தலைவர் அ.அல்பேட் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் இந்து கருணாரட்ணா, யாழ்.மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி பி.எச்.ரி.ஜீவநாதன் ஆகியோர் கலந்துகொள்வர். (த-14)

**சாதனையாளர் கௌரவிப்பு**

வடமாகாண இலங்கை தேசிய பார்வையற்றோர் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் சாதனையாளர் கௌரவிப்பும் பயனாளிகள் நலன் பேண் நிகழ்வும் காலை 9.30 மணிக்கு பலாலி வீதி, கோண்டாவிலில் உள்ள சந்தி சேவாலங்கா மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (த-14)

# விபத்தில் முதியவர் சாவு: சாரதிக்கு விளக்கமறியல்

தென்மராட்சி, பெப்.27

சாவகச்சேரி ஏ-9 வீதியில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற வீதி விபத்தில் முதியவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பாக வாகன சாரதியை மார்ச் 7ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டார்.

சாவகச்சேரி பெரியமாவடி, உப்புக்கேணியைச் சேர்ந்த சுப்பிரமணியம் லோகநாதன்(வயது-60) என்பவரின் மரணம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸார் நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்தனர். இதனையடுத்து நீதிவான் சம்பவ இடத்தையும் பார்வையிட்டு சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை சவச்சாலையில் வைக்கப்பட்டிருந்த சடலத்தையும் பார்வையிட்டார்.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை பொறுப்பதிகாரி மூலம் உடற்கூற்றுப் பரிசோதனை நடத்தி நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்யுமாறும் உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலத்தை உறவினரிடம் ஒப்படைக்குமாறு பொலிஸாரைப் பணித்தார்.

உடற்கூற்றுப் பரிசோதனையில் வாகனம் உடல்மீது ஏறியதில் சிறுநீரகம் சிதைவடைந்ததால் மரணம் சம்பவித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் நடைபெற்ற பின்னர் கைதுசெய்யப்பட்ட சாரதி நீதிமன்றில் முற்படுத்தியபோது மார்ச் 7ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (த-9)

# சங்கிலி அறுத்த இளைஞர்கள் வசமாய் மாட்டினர் பொலிஸில்

யாழ்ப்பாணம், பெப். 27

பெண்ணின் தங்கச் சங்கிலியை அறுத்துக் கொண்டு தப்பி ஓடியவர்கள் பொலிஸாரிடம் வசமாக மாட்டிக் கொண்டனர்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை பன்னாலை கொல்லங்கலட்டிக்கு அண்மையில் இடம் பெற்றது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது :

பெண்ணொருவர் பஸ்ஸிலிருந்து இறங்கி வீடு நோக்கிச் சென்றுகொண்டிருந்தபோது மோட்டார் சைக்கிளில் வந்த இரு இளைஞர்கள் அவரின் தங்கச் சங்கிலியை அறுத்துக் கொண்டு தப்பி ஓடியுள்ளனர்.

சம்பவம் தெல்லிப்பழைப் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தப்பட்டது. விரைந்து செயற்பட்ட பொலிஸார் குறித்த இளைஞர்களை அளவெட்டியில் வைத்து மடக்கிப் பிடித்தனர்.

அவர்களிடமிருந்து நகை மீட்கப்பட்டதுடன், இரு இளைஞர்களும் பொலிஸாரினால் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அளவெட்டி வடக்கு பத்தானையைச் சேர்ந்த சுரேஷ், சுன்னாகம் பொலிஸ் பிரிவைச் சேர்ந்த ரமணன் ஆகிய இருவரே மேற்படி சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ளதாக தெல்லிப்பழை பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-16-4)

## அடிக்கல் நடும் நிகழ்வு

கட்டைக்காடு கடற்கரையில் அமைந்துள்ள கப்பலேந்தி மாதா கோயிலுக்கான அடிக்கல் நடும் நிகழ்வு இன்று மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளது. அடிக்கல்லை யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை நட்டு வைப்பார்.

இந்த ஆலயம் சுனாமி மற்றும் போர் காரணமாக அழிவடைந்த நிலையில் தற்போது அது புதிதாக அமைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இதுவும்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
யின் கூட்டத்தொடர் ஆரம்பமாகும் தருணத்திலேயே இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

அவர்கள் பலமுனைகளில் இலங்கைக்கு எதிராகச் செயற்படுகிறார்கள். இப்போது சைபர் தாக்குதல்களையும் மேற்கொள்கின்றனர் -என்றார் ஹேரத்.

முன்னதாக, ஊடகத்துறை அமைச்சின் இணையத்தளம் மீது கடந்த ஞாயிற்றுக் கிழமை சைபர் தாக்குதல் நடத்தப்பட்டு, போரின் இறுதிக்கட்டத்தில் இலங்கைப் படைகளால் இழைக்கப்பட்ட போர்க்குற்றங்களை வெளிப்படுத்தும் காணொலி இணைக்கப்பட்டிருந்தது.

அத்துடன், இந்த சைபர் தாக்குதலை நடத்தியவர்கள், அப்பாவித் தமிழர்களின் கொலைகளை நிறுத்தும்படியும், அல்லது தம்மிடம் இருந்து தாக்குதல்களுக்குத் தயாராகும்படியும் எச்சரிக்கை விடுத்திருந்தனர்.

அதேவேளை, இந்தத் தாக்குதலை நடத்தியவர் தன்னை ஒரு பாகிஸ்தானியர் என்று இனங்காட்டியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (த)

## குற்றச்சாட்டை...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
அறிக்கை ஆதாரங்களற்றது. ஜெனிவாவில் இடம்பெறும் ஐ.நா.வின் மனித உரிமைகள் பேரவையின் அமர்வை நோக்காகக்கொண்டு இந்த அமைப்பால் உருவாக்கப்பட்ட மற்றுமொரு 'சிருஷ்டி'இதுவாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தக் குற்றச்சாட்டுகளை நாம் அடியோடு நிராகரிக்கின்றோம். தடுப்புக்காவலில் வைக்கப்பட்டோர் சித்திரவதைக்கோ, பாலியல் வன்முறைக்கோ உட்படுத்தப்பட்டனர் என்பதை ஒருபோதும் இலங்கை பாதுகாப்புப் படை ஏற்றுக்கொள்ளாது என்றும் பிரிகேடியர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆதாரங்களின்றி குற்றச்சாட்டுகளை அடுக்குவதால் எந்த அர்த்தமும் கிடையாது. இந்த நாட்டில் வலிமையான சட்டமுறைமைகளையும், ஒழுங்குவிதிகளையும் நாம் கொண்டுள்ளோம். இத்தகைய குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரமிருந்தால், பொலிஸுக்கு அறிவிக்கலாம். விசாரணை நடத்தப்படும் - என்றும் இராணுவப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார். (த-சி)

## ஜெனிவாவில்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
சென்றடைந்துள்ளனர். இந்நிலையில், அமைச்சர் மஹிந்த சமரசிங்க. இன்று விசேட உரையாற்றவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் ஆரம்பமான மனித உரிமைகள் சபைக் கூட்டத் தொடரில், இலங்கையில் பெரும் போர் மீறல்கள் இடம்பெற்றுள்ளதாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை குற்றஞ் சுமத்தியிருந்தார்.

அத்துடன், பிரிட்டன் மற்றும் தென்னாபிரிக்கா நாடுகள், இலங்கை தனது கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த வேண்டும் என வலியுறுத்தியிருந்தன.

இவை எல்லாவற்றுக்கும் பதில் அளிக்கும் வகையில் மஹிந்த சமரசிங்க இன்று விசேட உரை நிகழ்த்தவுள்ளார். (த)

## ஜெனிவாப்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
கான அமெரிக்காவின் உதவி வெளிவிவகார அமைச்சர் எஸ்தர் பிரிமீர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 22 ஆவதுக் கூட்டத்தொடரில் நேற்று உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

''இலங்கையில் நீண்டகாலமாக தேக்க நிலையில் இருந்துவரும் நல்லிணக்கப்பாட்டு அமுலாக்கம், பொறுப்புக்கூறும் கடப்பாடு ஆகியவற்றை இலங்கை துரிதமாக மேற்கொள்ள இப்புதிய தீர்மானம் ஓர் உந்துசக்தியாக அமையும்.

''அதேவேளை, இந்த நீண்டகாலப் பணிகளை காலதாமதமின்றி மேற்கொள்ள சர்வதேச கண்காணிப்பாளர்களின் உதவியும் ஒத்தாசையும் இதன் மூலம் இலங்கைக்குக் கிடைக்கும்.

இலங்கை அரசு தான் நியமித்து அறிக்கை பெற்றுள்ள நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளை அமுல்படுத்தவேண்டும். அத்துடன்,

நீண்டகாலமாக நிலவிவரும் இனப்பிரச்சினைக்கும் தீர்வுகாணப்படவேண்டும். அதுவரை இலங்கை தொடர்பில் இந்தப் பேரவையின் செயற்பாடுகள் முடிவடைந்துவிட்டன என ஏற்றுக்கொள்ளமுடியாது.

அதேவேளை, கடந்தமுறை ஐ.நா. மனித உரிமை பேரவைக் கூட்டத்தொடரில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம், சிவில் சமூகம் சார்ந்த பொறுப்புகளை தொடர்ந்தும் மேற்கொள்ள ஊக்குவித்துள்ளது.

நல்லிணக்கத்தை ஏற்படுத்தி பொறுப்புக் கூறும் தன்மையை வெளிப்படுத்துவதற்கு இந்த தீர்மானம் உந்து சக்தியாக அமையும் என நாம் கருதுகின்றோம் - என்றும் அவர் கூறினார். (த)

## இந்தியாவுடன்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
விரைவில், இலங்கை அரசின் உயர்மட்டக் குழு அல்லது பிரதிநிதி இந்தியா செல்லலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

அண்மையில் புதுடில்லி சென்ற இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸினால், புதுடில்லியை வளைத்துப் போட முடியாததால், மீண்டும் அவர் அங்கு அனுப்பப்படுவதற்கு வாய்ப்புகள் இல்லை என்றும் தெரிகிறது.

ஜனாதிபதியின் செயலர் லலித் வீரதுங்க அல்லது பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ அல்லது இவர்களை உள்ளடக்கிய குழுவொன்றே புதுடில்லிக்கு அனுப்பப்படலாம் என்று தகவல்கள் கசிந்துள்ளன.

இது தொடர்பாக, புதுடில்லியின் சாதகமான சமிக்ஞைக்காகக் கொழும்பு காத்திருப்பதாகவும் இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அதேவேளை, இலங்கையின் இந்தத் திட்டத்தை உறுதிப்படுத்தும் வகையில், ஜெனிவாவில் அமெரிக்கத் தீர்மானம் வாக்கெடுப்புக்கு விடப்படுவதற்கு முன்னதாக, இந்தியாவுடன் பேச்சு நடத்தப்படும் என்று இலங்கை நம்புவதாக, ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார்.

போருக்குப் பின்னர் எட்டப்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்து இந்தியாவிடம் இலங்கை எடுத்துக் கூறும்.நாம் இந்தியாவிடம் முறையிடப் போவதில்லை.

ஆனால், புனர்வாழ்வு, மீள்குடியமர்வு, உட்கட்டுமான மீளமைப்புகளில் நாம் எட்டியுள்ள சாதனைகள் குறித்து அவர்களுக்கு எடுத்துக் கூறுவோம் என்று அவர் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

## புனர்வாழ்வு...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
கடந்த 22ஆம் திகதி மருதமடு முகாமுக்குச் சென்ற செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினர் சுமார் 3 மணிநேரமாக, அங்குள்ள வசதிகள் குறித்து ஆராய்ந்ததாகவும் பிரிகேடியர் தர்சன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத் தொடர் ஆரம்பமாவதற்கு முன்னதாக இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.இது ஜெனிவாவில் அழுத்தங்களைக் குறைத்துக் கொள்வதற்கு இலங்கை அரசு கையாளும் உத்தி என்று அரசியல் அவதானிகள் கூறியுள்ளனர். (த)

## புனர்வாழ்வை...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
கையை உறுதிசெய்தால் மாத்திரமே எனது உண்ணாவிரதப் போராட்டத்தைக் கைவிடுவேன்.

இவ்வாறு புதிய மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தியாகராஜா பிரபாகரன் (வயது-25) என்ற தமிழ் அரசியல் கைதி நிபந்தனையை முன்வைத்துள்ளார்.

கடந்த 20 ஆம் திகதி முதல் அவர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றார்.

இது குறித்து அவர் சட்டமா அதிபருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது :-

கடந்த வருடம் ஜூன் மாதம் 23 ஆம் திகதி மகசின் சிறைச்சாலைக்கு வருகைதந்த ஆணையாளர் காமினி குலதுங்க, நீண்டகாலம் சிறைவைக்கப்பட்டிருக்கும் அனைவரையும் புனர்வாழ்வுத் திட்டத்தில் இணைக்க அரசு. திட்டமிட்டுள்ளதாகவும், அதற்கு ஒவ்வொருவரும் தனித்தனியாக புனர்வாழ்வு கோரி கடிதமொன்றைச் சிறைச்சாலை அத்தியட்சகர் ஊடாக அரசுக்கு அனுப்பி வைக்குமாறும் தெரிவித்திருந்தார்.

வாக்குறுதி வழங்கியதற்கு அமைவாக இதுவரையில் எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. இதனாலேயே உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றேன். கடந்த 7 நாள்களாக உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றபோதும் மேற்படி கோரிக்கையை நிறைவேற்ற இதுவரையில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

எனவே இதுதொடர்பில் சட்டமா அதிபர் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் - என்றுள்ளது. (த-5)

## பான்-கீ...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
செலுத்தியுள்ளதாக பான் - கீ மூனின் பேச்சாளர் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் ஜெனிவாவில் இடம்பெறும் ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத் தொடரில் விரிவாக ஆராயப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் தொடர்பில் ஐ.நா. பொதுச் செயலாளர் விசேட அறிவிப்பொன்றை வழங்குவார் என பான் கீ - மூனின் பேச்சாளர் மேலும் தெரிவித்தார். (த)

## படையினர்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
தல் நடத்தியதுடன் தப்பியோடுவதற்கு முயன்ற இருவர் மீதும் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டதாகப் பொலிஸார் கூறியுள்ளனர்.

அந்தத் துப்பாக்கிப் பிரயோகத்திலேயே இருவரும் உயிரிழந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.அவர்கள் இருவரும் கொள்ளைக் கோஷ்டியின் உறுப்பினர்கள் என்றும் நகைகள் மற்றும் பணங்களை கொள்ளையடித்து வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அவ்விருவரும் வெளிநாட்டுக்குச் செல்வதற்காகவே காரைக் கடத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.இந்தச் சுற்றிவளைப்பு தேடுதலில் நூற்றுக்கணக்கான இராணுவத்தினரும் பொலிஸாரும் ஈடுபடுத்தப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (த)

## போர் தவிர்ப்பு...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
யிடுவதற்கு சர்வதேச மன்னிப்புச் சபை, மனித உரிமைகள் கண்காணிப்பக்ம் ஆகியன ஏற்பாடு செய்துள்ளன.

இந்த ஆவணப்படம் உறுதிப்படுத்தப்படாத- ஆதாரமற்ற, நம்பகமற்ற காட்சிகளைக் கொண்டுள்ளதாக, ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் தலைவரான றெமிஜியஸ் ஆச்சிலெஸுக்கு அனுப்பி வைத் துள்ள கடிதத்தில் ஜெனிவாவுக்கான இலங்கை வதிவிடப் பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்க தெரிவித்துள்ளார்.

மனித உரிமைக் குழுக்களின் கூட்டத்தில் இந்த ஆவணப்படம் திரையிடப்படுமானால், ஐ.நாவே அதன் சட்டங்களை மீறியதாகிவிடும் என்றும் அவர் தனது கடிதத்தில் எச்சரித்துள்ளார். (த)

## படையினரின்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
தியாகக் கூறுகின்றது.

ஐ.நா. மனித உரிமை பேரவைக் கூட்டத் தொடர் நடைபெற்றுக்கொண்டிருக்கும் நேரத்தில் சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் விடுத்துள்ள அறிக்கை இலங்கைக்கு ஜெனிவாவில் பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கைப் படைகளின் பாலியல் கொடுமைகள் தொடர்பான 75 பேரின் சாட்சியங்கள் அடங்கிய விரிவான 140 பக்க அறிக்கையை மனித உரிமைகள் கண்காணிப்பகம் நேற்று வெளியிட்டுள்ளது.

அந்த ஆய்வறிக்கையில், 2006 ஆம் ஆண்டிலிருந்து 2012ஆம் ஆண்டு வரை, இலங்கை அரசின் சிறைகளில் வைக்கப்பட்டிருந்த தமிழ் ஆண்கள், பெண்கள் மற்றும் சிறார்கள் பலர் பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர் என்று கூறப்பட்டுள்ளது.

அத்துடன், இந்தக் குற்றச்சாட்டுகள் குறித்து இலங்கை குற்ற விசாரணைகளை நடத்தவேண்டும் என்றும் அந்த அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

இதுதொடர்பில் மனித உரிமைகள் கண்காணிப்பகம் விடுத்துள்ள 141 பக்கங்கள் கொண்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

இலங்கை படையினரால் நடத்தப்பட்ட பாலியல் வன்முறைகள் 2006 இற்குப் பின்னரான கால கட்டத்தில் மிகவும் அதிகரித்துக் காணப்பட்டன. இதில் பெரும்பான்மையான வன்முறைகள் அரசியல் ரீதியான நோக்கங்கள் கொண்டவை .

இதுகுறித்து 75 சம்பவங்களை மனித உரிமைகள் கண்காணிப்பகம் ஆராய்ந்திருக்கின்றது. இதில் பாதிக்கப்பட்ட 31 ஆண்கள், 41 பெண்கள் மற்றும் மூன்று சிறார்களிடம் நாம் இரகசியமாக விசாரணைகளை நடத்தியிருக்கின்றோம்.

இந்த விசாரணைகள் ஒரு வருட காலகட்டத்தில், ஆஸ்திரேலியா, ஐக்கிய இராச்சியம், இந்தியா, ஜேர்மனி, மலேசியா மற்றும் இந்தோனேஷியா ஆகிய நாடுகளில் வசிக்கும் பாதிக்கப்பட்ட நபர்களிடையே நடத்தப்பட்டன.

சட்ட விரோத ஆயுதமாக...

பாலியல் வன்புணர்வை, இலங்கைப் படையினரும் பொலிஸாரும், போரின் போதும் போருக்குப் பின்னரும், விடுதலைப் புலிகள் குறித்த தகவல்களைப் பெறுவதற்கு ஒரு சட்டவிரோதமான ஆயுதமாகவே பயன்படுத்தினர்.

இந்த ஆய்வு, அரச கட்டுப்பாடுகள் காரணமாக, முன்னர் கைதுசெய்யப்பட்டு தற்போது விடுதலையான நபர்களிடையே மட்டுமே நடத்தப்பட்டது. தற்போதும் அரசின் சிறைகளில் இருப்பவர்களின் நிலை மிகவும் கவலை அளிப்பதாகவே இருக்கின்றது.

இந்தக் குற்றச்செயல்களில் அரச படையினர் மற்றும் பொலிஸார் தவிர, அரசுக்கு ஆதரவான துணை இராணுவக்குழுக்களும் (ஆயுதக்குழுக்கள்) ஈடுபட்டன என்று நேரில் கண்டவர்களின் சாட்சியங்க்ள் அடிப்படையில் இருந்து தெரியவருகின்றது.

இந்த எல்லாச் சம்பவங்களிலும் , பாலியல் வன்முறை தவிர, இவர்கள் மற்ற வகை சித்திரவதைகள், மனித கண்ணியத்துக்கு கீழான வகையில் நடத்தப்படுதல் போன்றவற்றுக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள் .

இலங்கை அரசு இந்தச் சம்பவங்கள் குறித்து சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய நியாயமான முறையில் விசாரணைகளை நடத்தி, சம்பவங்களுக்கு பொறுப்பானவர்களைத் தண்டிக்கவேண்டும்.

மேலும், குற்றச்சாட்டுக்கள் பதியப்படாமல் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்கள் மற்றும் விசாரணைகள் இன்றி தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்கள் அனைவரையும் விடுதலை செய்யவேண்டும்.

மனித உரிமைக்குழுக்களுக்கு நாட்டின் வட பகுதிக்கு செல்ல அனுமதி வழங்க வேண்டும். அவசரகால மற்றும் பயங்கரவாத சட்டங்களின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும்.

- இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-சி)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# இலங்கை திருந்தாதவரை ஐ.நா.ஓயப்போவதில்லை

கடந்த வருடம் மார்ச் மாதம் நடந்து முடிந்த ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் எவ்வாறு இருந்தது என்றால், தன்முனைப்பாக பாடசாலையில் குழப்படி செய்யும் மாணவனைப் பார்த்து ''நீ நல்ல பிள்ளை இனிமேல் குழப்படி செய்யக்கூடாது, ஏனைய மாணவர்களுக்கும் முன்மாதிரியாக திகழ வேண்டும்'' என்று கூறி வகுப்பாசிரியர் அவன் தலையில் தடவிவிட்டு வகுப்பறையில் அமரச் செய்வது போன்று அமைந்தது.

ஆனால் குழப்படி செய்த மாணவன் திருந்தியதாகத் தெரியவில்லை; நான் இப்படித்தான் செய்வேன்; நீ என்ன எனக்கு சொல்வது என்பது போல் திமிறிக்கொண்டு வகுப்பாசிரியரை மட்டுமல்ல, பாடசாலை அதிபரையும் எதிர்த்துக் கொண்டு மீண்டும் குழப்படி செய்வதுடன், நல்லது சொன்ன பெரியவர்களுக்கும் சவால் விட்டுக்கொண்டு கீழ்ப்படிய மறுத்திருந்தால் எப்படி இருக்கும்? அந்த நிலைதான் இன்று இலங்கைக்கு ஏற்பட்டுள்ளது.

அமெரிக்கா கொண்டுவந்த தீர்மானத்தை இந்தியா முயன்று தணியவைத்தது. நல்லிணக்க ஆணைக்குழு தெரிவித்த பரிந்துரைகளில் ஆக்கபூர்வமானவைகளை செயற்படுத்துங்கள். அதன் மூலம் இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துங்கள் என்று ஆலோசனைகளும் தெரிவிக்கப்பட்டிருந்தன.

அவற்றைச் செய்து முடிக்கவென ஒருவருட அவகாசமும் வழங்கப்பட்டது. நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்றுவதற்கென தேசிய செயற்றிட்டம் ஒன்றை உருவாக்கி மனித உரிமைப் பேரவைக்கு இலங்கை அரசு சமர்ப்பித்திருந்தது.

அந்த செயற்றிட்டம் முக்கியமான அம்சங்களை உள்ளடக்கவில்லை. குறைபாடுகளுடன் காணப்படுகிறது என்று மனித உரிமைகள் பேரவை ஆணையாளர் பேரவைக்கு தாக்கல் செய்த அறிக்கையில் சுட்டிக்காட்டியிருந்தார். இப்பொழுது, கடந்த திங்கட் கிழமை ஆரம்பமான பேரவைக் கூட்டத்தில் தொடக்க உரையாற்றியுள்ள ஆணையாளர் நவநீதம்பிள்ளை மீண்டும் இலங்கை மீதான குற்றச்சாட்டுகளை வலியுறுத்தி மிக காரசாரமான கருத்துக்களை முன்வைத்திருக்கிறார்.

இங்குள்ளவர்கள் தம்மை சீண்டும் வகையில் கருத்துக்கள் விடுத்தார்கள் என்பதற்காக நவநீதம்பிள்ளையும் தமது பதவிக்குரிய தரத்தில் இருந்து இறங்கி , அரசியல் வாதிகள் போன்று கருத்து வெளியிடுவார் என்றோ, தமது நிலைப்பாட்டை பழிவாங்கும் விதத்தில் மாற்றிக்கொள்வார் என்றோ கருத இடமில்லை.

அவ்வாறு செய்வதற்கு அவர் சாதாரண அரசியல் வாதியும் அல்லர். ஆனால் சர்வதேச மட்டத்தில் நிலைமைகளை, ஐ.நா.கோட்பாடுகளுக்கு அமைவாக சீர்தூக்கிப் பார்ப்பதும், அதற்கேற்ப கருத்துக்களை வெளியிடுவதும், பேரவைக்கு பரிந்துரைகளை வழங்குவதும் அவருடைய கடமை என்பதை எவரும் மறுக்கவோ அல்லது எதிர்க்கவோ முடியாது. அந்த வகையில் தான் பேரவையின் 22 ஆவது மாநாட்டை ஆரம்பித்து வைத்து அவர் உரை நிகழ்த்தியுள்ளார்.

தமது ஆரம்ப உரையில் இலங்கையில் இறுதிப் போரின் போது இடம்பெற்றவை மிக மோசமான வன் செயல்கள்; அவற்றுக்குப் பொறுப்புக் கூற வேண்டிய கடப்பாடு அந்த நாட்டு அரசுக்கு இருக்கிறது. அதனை இலங்கை அரசு சரியாக செய்ய வேண்டியதுடன் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை செயற்படுத்தவும் வேண்டும் என்று இடித்துக் கூறியிருக்கிறார்.

போர்க் குற்றங்கள் புரிந்துள்ளதாக குற்றஞ் சாட்டப்படுகின்ற பல நாடுகளிலும் கட்டளையிடும் அதிகாரத்தில் உள்ள அநேகர் பாரதூரமான குற்றச் செயல்கள், மனித உரிமை மீறல்கள் ஆகியவற்றுக்கு தண்டனை பெறாமல் நீதியின் பிடியில் இருந்து தப்பிக்கொள்கின்றனர் என்பதாக அவர் குறிப்பிட்டிருப்பது இலங்கையில் இடம்பெற்றுள்ள பல சம்பவங்களுக்கு பொருத்தமாக இருக்கின்றன.

இலங்கையில் போர் முடிந்து நான்கு ஆண்டுகள் ஆகப் போகின்றன. விடுதலைப் புலிகள் இயக்கம் முற்றாக ஒழிக்கப்பட்டு விட்டது என்று பறைசாற்றப்படுவது மட்டுமன்றி பயங்கரவாதத்தை ஒழிப்பது எப்படி என்பதற்கு வெளிநாடுகளுக்கும் பாடம் நடத்த அதிகாரிகள் தயாராய் இருப்பதாகவும் கூடக் கூறப்படுகின்றது.

போரின் போது 55 ஆவது படையணிக்குத் தலைமை வகித்தவரும் இப்போது ஐ.நா.வுக்கான பிரதித் தூதுவருமான ஷவேந்திர சில்வா அமெரிக்கப் படையணி ஒன்றுக்கு பயங்கரவாத ஒழிப்புப் பற்றி பாடம் நடத்தியிருப்பதாகச் செய்தி வந்துள்ளது.

ஆனால் பயங்கரவாதத் தடுப்பு சட்டம் இன்னமும் உயிர்ப்புடன் நடைமுறையில் இருக்கிறது. இந்தச் சட்டத்தின் கீழ் இடம்பெற்றுள்ள பல வன்செயல்களில் சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை ஏதும் எடுக்கப்பட்டதாகத் தகவல்கள் இல்லை. ஆங்காங்கே இந்த சட்டத்தின் கீழ் அவ்வப்போது அரசு விரும்பாத செயலில் ஈடுபடுபவர்கள் கைது செய்யப்பட்டு விசாரணை இன்றி காவலில் வைக்கப்படுகின்றனர். இதற்கு அண்மையில் நடந்த யாழ்.பல்கலைக்கழக சம்பவமும், மாணவர் கைதும் உதாரணமாகும். இந்த வகையில் இன்னும் பலவற்றைப் பட்டியலிடலாம்.

இம்மாதிரியான குற்றச்சாட்டுகள் எழாத வகையில் அரசும் அதிகாரிகளும் நடந்துகொள்ளாத வரை மனித உரிமைப் பேரவையும், நவநீதம்பிள்ளை போன்ற ஐ.நா. அதிகாரிகளும் ஓயமாட்டார்கள்.

அமெரிக்காவின் இரண்டாவது தீர்மானம் இன்னும் சில தினங்களில் பேரவையில் விவாதிக்கப்பட விருக்கின்றது. இம்முறையும் வாக்குறுதிகள் வழங்கி இலங்கை அவகாசம் கேட்கப்போகிறதா அல்லது பேரவை இடக்கூடிய அறிவுறுத்தல்களை ஏற்றுக்கொண்டு திருந்தப் போகிறதா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

# அட்டவணைப்படுத்தப்படாத பதவிகளில் மாற்றுவலுவுள்ளோரையும் நியமிக்குக

வடமராட்சி, பெப்.27

வடக்கு மாகாண உள்ளூராட்சி சபைகளால் நிரப்பப்படவுள்ள அட்டவணைப்படுத்தப்படாத பதவிகளுக்கு மாற்று வலுவுள்ளோரையும் நியமிக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அட்டவணைப் படுத்தப்படாத பதவிகளுக்கு உள்ளூராட்சிச் சபைகளால் ஆள்சேர்ப்புச் செய் வதற்கான விண்ணப்பங்கள் மாகாண சபையின் சுற்றறிக்கைக்கு அமைய கோரப்பட்டு வருகின்றன.

அரச சேவையில் மாற்று வலுவுள்ளோருக்கு நியமனங்களில் மூன்று வீதம் வழங்கப்பட வேண்டும் என பல ஆண்டுகளுக்கு முன்னர் வெளிவந்த சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

ஏற்கனவே மத்திய, மாகாண அரச நிறுவனங்களில் சிற்றூழியர் பதவிகளுக்கு மாத்திரமின்றி உத்தியோகத்தர் தரத்திலான பதவிகளிலும் மாற்றுவலுவுள்ளோர் அமர்த்தப்பட்டு அவர்கள் சிறப்பான சேவைகளை வழங்கி வந்துள்ளனர்.

வடக்கில் போரினால், பிறப்பால் பாதிக்கப்பட்ட மாற்றுவலுவுள்ளவர்கள் ஆயிரக் கணக்கில் உள்ளனர்.

இவர்களின் வாழ்க்கை முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு உள்ளூராட்சிச் சபைகளில் ஏற்பட்டுள்ள அட்டவணைப்படுத்தப்படாத பதவி வெற்றிடங்களுக்கும் குறிப்பிட்ட வீதம் நியமனம் இவர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

உள்ளூராட்சிச் சபைகளால் அட்டவணைப்படுத்தப்படாத பதவிகளுக்கு கோரப்படும் விண்ணப்பத்தில் மாற்றுவலுவுள்ளோர் குறித்து எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

அட்டவணைப்படுத்தப்படாத பதவி நியமனத்தில் அவர்களுக்கும் நியமனம் வழங்க மாகாண சபை விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என மாற்றுவலுவுள்ளோர் கோரியுள்ளனர். (த-8)

## நாடாளுமன்ற ஆசனங்கள் ஒதுக்கீட்டில் மாற்றங்கள்

கொழும்பு, பெப்.27

கடந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்ட நாடாளுமன்றத் தேர்தல் தொகுதிப் பட்டியல் மீளாய்வுக்கமைய நுவரெலியா மாவட்டத்துக்கான நாடாளுமன்ற உறுப்பினர்களின் தொகை ஏழில் இருந்து எட்டாக அதிகரிக்கப்பட்டுள்ளது. அதே சமயம், பதுளை மாவட்டத்துக்கென ஒதுக்கப்பட்டிருந்த நாடாளுமன்ற உறுப்பினர்களது எண்ணிக்கை ஒன்பதிலிருந்து எட்டாகக் குறைக்கப்பட்டுள்ளது.

எந்தவொரு மாவட்டத்திலும் வாக்களிக்கும் வாக்காளர்களின் வாக்குகளின் மொத்த எண்ணிக்கையின் அடிப்படையிலேயே இத்தகைய அதிகரிப்பு மற்றும் குறைப்பு மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவித்த தேர்தல் செயலர் அலுவலகம், கடந்த 2011 ஆம் ஆண்டில் இத்தகைய அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட தேர்தல் தொகுதிப் பட்டியல் மீளாய்வின் போது வன்னி மாவட்டத்துக்கான நாடாளுமன்ற உறுப்பினர் ஆசனமொன்று குறைக்கப்பட்டு, மொனராகலை மாவட்டத்துக்கான ஆசனமொன்று அதிகரிக்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளது

(த)

## இராணுவத்தினருக்கு தமிழ்மொழி பாடநெறி

கொழும்பு,பெப்.27

வடக்கு மாகாணத்தில் கடமையாற்றும் இராணுவத்தினருக்கான தமிழ்மொழித் தேர்ச்சிப் பாடநெறி பூர்த்தி தொடர்பான வைபவமொன்று கிளிநொச்சி மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி உதய பெரேராவின் தலைமையில் கிளிநொச்சி இராணுவத் தலைமையகத்தில் அண்மையில் இடம் பெற்றது.

சுமார் மூவாயிரம் இராணுவத்தினர் குறிப்பிட்ட ஒரு மாத கால பாடநெறியைப் பூர்த்தி செய்திருப்பதுடன் ஏற்கனவே ஒன்பதாயிரம் இராணுவத்தினர் இந்த தமிழ் மொழித் தேர்ச்சிப் பாடநெறியில் இணைந்து தமிழ்மொழி கற்றிருப்பதாகவும் கிளிநொச்சி மாவட்ட கட்டளைத் தளபதி தெரிவித்தார்.

வடபகுதியில் சேவையாற்றும் இராணுவத்தினரின் மொழிச் சிக்கலுக்குத் தீர்வு காணும் நோக்கில் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டதாகவும் இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்களுக்கு சிங்கள மொழித் தேர்ச்சிப் பாடநெறியை நடத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (த)

## பெண்கள் மீதான வன்முறை குறித்து 1929, 119 க்கு முறையிட ஏற்பாடு

யாழ்ப்பாணம், பெப்.27

பெண்கள் மற்றும் சிறுவர்கள் மீது மேற்கொள்ளப்படும் வன்முறைகள் தொடர்பாக 1929, 119 ஆகிய தொலைபேசி இலக்கங்கள் ஊடாக முறைப்பாடுகளை தெரிவிப்பதன் மூலம் வன்முறைகளை புரிபவர்களுக்கு உடனடித் தண்டனைகளைப் பெற்றுக் கொடுக்க முடியுமென சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக இந்த அமைச்சு மேலும் தெரிவித்துள்ளதாவது:-

சிறுவர்களுக்கு பாதுகாப்பும், அரவணைப்பும் வழங்கப்பட வேண்டியது கட்டாயமாகும். இவ்வாறு இவர்களுக்கான உரிமைகள் கிடைக்கப்பெறாவிட்டால் அது பெரிய குற்றமாகக் கொள்ளப்படுகிறது. அத்துடன் பெண்கள் பாலியல் ரீதியாகவும், வீட்டு வன்முறைகளாலும் பாதிக்கப்படும் போது அத்தகையை குற்றங்களை இழைப்பவர்கள் தண்டிக்கப்பட வேண்டும்.

எனவே சிறுவர் மற்றும் பெண்கள் மீது நிகழ்த்தப்படுகின்ற வன்முறைகள் சட்ட ரீதியாக சமுதாயத்துக்கு தெரியப்படுத்தப் படும்போது குற்றங்களை நிகழ்த்துபவர்களுக்கு உரிய தண்டனைகள் பெற்றுக் கொடுக்கப்படும்.

இதற்கென மாவட்ட ரீதியாக சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர்கள், இணைப்பு மகளிர் உத்தியோகத்தர்கள் கடமைக்கு அமர்த்தப்பட்டுள்ளார்கள். இவர்களால் இனங்காணப்படாத வன்முறைகள் தொடர்பான தகவல்களை 1929 , 119 எனும் தொலைபேசி இலக்கங்கள் ஊடாக தெரிவிக்கும் போது குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய குற்றத்தை நிகழ்த்தும் நபர்களுக்கு சட்ட ரீதியாகத் தண்டனை பெற்றுக் கொடுக்க முடியும்-என்றுள்ளது (த-14)

## கொடுத்த பணத்தைக் கேட்ட மருமகனை வெட்டினார் மாமியார்

தென்மராட்சி, பெப்.27

கத்திவெட்டு மற்றும் இனந்தெரியாதோரின் தாக்குதல் ஆகியவற்றுக்கு இலக்கான மூவர் நேற்றுமுன்தினம் இரவு சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மாமியிடம் கொடுத்த பணத்தைக் கேட்கச் சென்ற மருமகனை மாமியார் கத்தியால் வெட்டியதில் கையில் காயமேற்பட்ட கைதடி-நுணாவிலைச் சேர்ந்த கிருஷ்ணமூர்த்தி நிதர்சன் (வயது-23 ) என்பவரும்

நண்பரின் பிறந்த தின நிகழ்வுக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பிய வேளையில் இடைநடுவில் இனந்தெரியாதோர் வழி மறித்துத் தாக்கியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த சாவகச்சேரி டச்சு வீதியைச் சேர்ந்த சிவராசா திருமாறன் (வயது-21), தேவாலய வீதியைச் சேர்ந்த இராசேந்திரம் சத்தியஜெயந்தன் (வயது-27) ஆகியோரும் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த இரு சம்பவங்கள் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த-9)

## சட்டவிரோதமான செயற்பாடுகளுக்காக 2012 இல் 1062 பேர் சந்தேகத்தில் கைது

கொழும்பு, பெப்.27

கடந்த ஆண்டில் நாடு முழுவதிலும் சட்டவிரோதமாக புதையல் தோண்டியமை மற்றும் தொல்லியல் பொருள்களை அழிவுக்குள்ளாக்கியமை போன்ற சம்பவங்கள் தொடர்பாக ஆயிரத்து 62 சந்தேகநபர்கள் தொல்பொருள் பாதுகாப்புப் பொலிஸ் பிரிவால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தொல்பொருள் பாதுகாப்புப் பிரிவின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சமன் ரத்நாயக்க இந்த விடயம் குறித்துத் தெரிவிக்கையில்-

கடந்த ஆண்டில் இந்த விடயங்கள் சம்பந்தமாக 370 முறைப்பாடுகள் இந்தப் பிரிவுக்குக் கிடைத்திருந்தன. அத்தோடு அவற்றுள் 205 முறைப்பாடுகள் விசாரிக்கப்பட்டுள்ளன.

புதையல்களைத் தோண்டுதல் மற்றும் தொல்பொருள்களை அழித்தல் சம்பந்தமாக அதிகளவிலான முறைப்பாடுகள் அனுராதபுரம், பொலனறுவை, கண்டி, மாத்தளை, தங்காலை, காலி, அல்பிட்டிய மற்றும் சியாம்பலாண்டுவ ஆகிய பிரதேசங்களிலிருந்தே கிடைத்துள்ளன. - என்று கூறினார். (ம-22)

# வீடுகள் உடைக்கப்பட்டு பொருள்கள் திருட்டு

வவுனியா,பெப்.27

வவுனியாவில் இரண்டு வீடுகள் உடைக்கப்பட்டு சுமார் நான்கு லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன. இவ்வாறு தெரிவித்துள்ளார் யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபரான இந்து கருணாரத்ன.

அவர் இது தொடர்பாக மேலும் தகவல் தருகையில்:- வவுனியா மெனிக்பாம் வலயத்தினுள் உள்ள வீடு ஒன்று உடைக்கப்பட்டு ஒரு இலட்சத்து 83 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

மேலும் செட்டிகுளம் பகுதியை அண்மித்துள்ள வீடு ஒன்று உடைக்கப்பட்டு 2 லட்சத்து 19 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

இந்த இரண்டு திருட்டுச் சம்பவங்கள் தொடர்பாக மெனிப்பாம் முகாமைச் சேர்ந்த இருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் வவுனியாவில் 2 லட்சத்து 41 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகளை மோசடி செய்த குற்றச்சாட்டின் பேரில் இரண்டு பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார். (க-4)

# மண் அணைகள், பதுங்குகுழிகளை அகற்றுவதற்கு 14 மில்லியன் ரூபா

## கிளிநொச்சி செயலக கூட்டத்தில் மதிப்பீடு

கிளிநொச்சி,பெப்.27

போரின்போது கிளிநொச்சி மாவட்டத்தில் அமைக்கப்பட்ட மண் அணைகள் மற்றும் பதுங்குகுழிகளை அகற்றுவதற்கு சுமார் 14 மில்லியன் ரூபா நிதி தேவையென மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

கிளிநொச்சி அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்திலேயே இந்த விவரம் தெரிவிக்கப்பட்டது.

போரின்போது கிளிநொச்சி மாவட்டத்தில் அமைக்கப்பட்ட மண் அணைகளை அகற்றுவது பற்றி ஆராயும் கூட்டம் ஒன்று இடர் முகாமைத்துவ அமைச்சின் ஏற்பாட்டில் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் கடந்த வாரம் இடம்பெற்றது.

**போரின்போது ஏற்படுத்தப்பட்ட மண் அணைகளும் பதுங்கு குழிகளும் நீர் வடிகாலமைப்பையும் நில அமைப்பையும் பாழாக்கியுள்ளன.**

போரின்போது ஏற்படுத்தப்பட்ட மண் அணைகளும் பதுங்கு குழிகளும் நீர் வடிகாலமைப்பையும் நில அமைப்பையும் பாழாக்கியுள்ளன. இதனால் மழையினால் ஏற்படும் வெள்ளம் பல இடங்களிலும் தேங்கி, மக்களின் வாழ்விடங்களையும் பயிர்ச்செய்கைப் பரப்புகளையும் பாதிப்புக்குள்ளாக்கியுள்ளன.

எனவே இந்த மண் அணைகளையும் பதுங்கு குழிகளையும் அகற்றிச் சீர்ப்படுத்துவதன் மூலமாக பாதிப்புகளைத் தவிர்த்துக் கொள்ளலாம் என்ற நோக்குடனேயே இந்தக் கூட்டம் நடத்தப்பட்டது.

சுமார் 43 கிலோ மீற்றர் நீளமான மண் அணைகளை அகற்றிச் சீர்ப்படுத்துவதற்குச் சுமார் 14 மில்லியன் ரூபா நிதி தேவை என இங்கு மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கைக்கு உதவியாக படையினரின் உதவியைப் பெற்றுக்கொள்வது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் இடர் முகாமைத்துவ அமைச்சின் பணிப்பாளர் நாயகம் மேஜர் ஜெனரல் காமினி ஹெட்டியாராய்ச்சி, மேலதிக மாவட்ட அரச அதிபர் எஸ்.சீறினிவாசன் உட்பட பலர் கலந்து கொண்டனர். (க-எ)

# கிராமங்கள் தோறும் 200 வீட்டுத் தோட்டங்கள்

## விவசாய அமைச்சின் மேலதிக செயலர் தகவல்

வவுனியா, பெப்.27

ஒவ்வொரு கிராமத்திலும் 200 வீட்டுத் தோட்டங்கள் உருவாக்கப்படும். இவ்வாறு தெரிவித்துள்ளார் விவசாய அமைச்சின் மேலதிக செயலாளர் எம்.எஸ். இமிடியகொட.

வாழ்வு எழுச்சித் திட்டத்தின் கீழ் மரக்கன்றுகளை செய்கை பண்ணுவது தொடர்பான முதற்கட்ட கலந்துரையாடல் ஒன்று வவுனியா மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் மாவட்ட அரச அதிபர் பந்துல ஹரிச்சந்திர தலைமையில் இடம்பெற்றபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

வாழ்வு எழுச்சித் திட்டத்தின் முதற்கட்டப் பணிகளை வவுனியா மாவட்டத்தில் ஆரம்பிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்டத்தில் மரக்கன்றுகளின் செய்கையை நாம் முதலில் ஆரம்பிக்கவுள்ளோம். அதனைத் தொடர்ந்து ஏனைய வடமாகாணத்திலுள்ள மாவட்டங்களுக்கும் இது நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. அத்துடன் ஒவ்வொரு கிராமத்திலும் 200 வீட்டுத்தோட்டங்களை உருவாக்குவதற்கும் அதன் ஊடாக நச்சுத்தன்மையற்ற உற்பத்திப் பொருள்களை சந்தைப்படுத்தவும் எண்ணியுள்ளோம் எனவும் அவர் கூறினார்.

பிரதேச மட்டத்தில் இவ்வாறான செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு விவசாய அமைச்சு உதவிகளை வழங்கும். இதன்போது ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தேவையான மரக்கன்றுகள் தொடர்பாகத் தகவல் சேகரிக்கப்பட்டு அவற்றின் தேவைகள் குறித்துக் கலந்துரையாடப்பட்டதாகவும் விவசாய அமைச்சின் மேலதிக செயலாளர் எம்.எஸ்.இமிடியகொட தெரிவித்தார்.

இந்த கலந்துரையாடலில் விவசாய அமைச்சின் பணிப்பாளர் கிரன் பீரிஸ், வடமாகாண விவசாய அமைச்சின் அதிகாரிகள், மாவட்ட விவசாய திணைக்கள அதிகாரிகள், விவசாய அமைப்பினர் எனப் பலரும் கலந்து கொண்டனர். (க-எ)

# டெங்கு தொடர்பான தெருநாடகம்



வவுனியா,பெப்.27

டெங்கு தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் தெரு நாடகம் வவுனியாவில் கடந்த சில தினங்களாக இடம்பெற்று வருகின்றது.

வவுனியா நகரசபை எல்லைக்குட் பட்ட பிரதேசங்களில் ''சேவாலங்கா'' நிறுவனத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்று வரும் இந்த நாடகத்தில் டெங்குநோயினால் ஏற்படும் தாக்கங்கள், அதனைக் கட்டுப் படுத்தும் வழிவகைகள் தொடர்பாக விளக் கங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

வவுனியா நகரப் பகுதியில் உள்ள சந்திப் பகுதிகளில் இந்த நாடகம் இடம்பெறுவதால் அதிகளவு மக்கள் அதனைப் பார்வையிட்டுச் செல்வதை அவதானிக்க முடிகின்றது. (க-எ)

# மெய்வன்மைப் போட்டிகள்

கிளிநொச்சி,பெப்.27

கிளிநொச்சி மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று பிற்பகல் ஒரு மணியளவில் ஆரம்பமாகி இடம்பெறவுள்ளன.

பாடசாலை அதிபர் மு.ரவீந்திரன் தலைமையில் இடம்பெறவிருக்கும் இந்த நிகழ்வின் முதன்மை விருந்தினராக பாடசாலையின் பழைய மாணவனும் பொறியியலாளருமான க.கடம்பசீலன் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக விடியல் அமைப்பின் பொது முகாமையாளர் ஆ.விஜேநாதன், உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.விந்தன், பழைய மாணவனும் பொறியியலாளருமான என்.நவப்பிரசாத் ஆகியோர் கலந்து கொள்வர்.

★ ★ ★

கிளிநொச்சி மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் நாளை பிற்பகல் 1.30 மணியளவில் பாடசாலை அதிபர் அ.பங்கயற்செல்வன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இதில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் கே.சத்தியபாலன் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக பழைய மாணவனும், வவுனியா மாவட்டச் செயலகத்தின் பொறியியலாளருமாகிய கே.சிவநாதன், கிளிநொச்சி மாவட்ட பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் என்.சுதாகரன், பாடசாலை வேலைப் பகுதி பொறியியலாளர் எஸ்.ரவீந்திரன் ஆகியோர் கலந்து கொள்வர். (க-405)





மன்னார் வேப்பங்குளம் அரசினர் முஸ்லிம், கலவன் பாடசாலையில் அமைக்கப்பட்ட பாடசாலைக் கட்டடத்தை இதற்கான நிதியை வழங்கிய ஜெர்மன் நாட்டில் இயங்கி வரும் தோமஸ் குக் மற்றும் வெல்த் கங்கர் நிறுவனங்களின் பிரதிநிதிகள் திறந்து வைப்பதையும், பாடசாலைக் கட்டடத்தையும் காணமுடிகின்றது. (க-எ)

# பின்தங்கிய பகுதி மாணவர்களின் கற்றல் நடவடிக்கையில் சிரமங்கள்

## ஊற்றுப்புலத்தில் கல்வியைத் தொடரமுடியாத நிலை

கிளிநொச்சி,பெப்.27

கிளிநொச்சியின் பின் தங்கிய பகுதிகளைச் சேர்ந்த மாணவர்கள் கற்றல் நடவடிக்கைகளில் சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சியிலுள்ள வன்னேரிக்குளம், ஆனைவிழுந்தான், யூனியன்குளம், கோணாவில், ஊற்றுப்புலம், புதுமுறிப்பு, கல்லாறு, மயில்வாகனபுரம், பிரமந்தனாறு, கண்ணகைநகர், தட்டுவன்கொட்டி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மாணவர்களே தமது கல்வியைத் தொடர்வதில் பல்வேறு சிரமங்களை எதிர் கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பகுதிகளிலுள்ள அனேக பாடசாலைகளில் உயர்தர வகுப்புக்கள் இல்லாத நிலையே காணப்படுகின்றது. இதனால் இப் பகுதிகளைச் சேர்ந்த உயர்தர வகுப்பு மாணவர்கள் வேறு பகுதிகளைச் சேர்ந்த பாடசாலைகளுக்கே செல்ல வேண்டிய நிலையில் இவர்கள் உள்ளனர். ஆனால் போக்குவரத்து வசதிகள் இல்லாததால் இவர்கள் இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

கிளிநொச்சி ஊற்றுப்புலம் கிராமத்தில் உள்ள பாடசாலையில் தரம் 9 வரையான வகுப்புகளே உள்ளதால் தரம் 10 இல் கல்வியைத் தொடர வேண்டிய எட்டு மாணவர்கள் வேறு இடங்களுக்குச் செல்ல முடியாத நிலையில் தமது கல்வியை இடைநிறுத்தியுள்ளனர்.

இந்த மாணவர்கள் தமது கல்வியைத் தொடர்வதாயின் 10 கிலோ மீற்றருக்கும் அப்பால் உள்ள பாடசாலைக்கே செல்ல வேண்டும். ஆனால் இதற்கான போக்குவரத்து வசதிகள் இல்லாத காரணத்தாலேயே அவர்கள் தமது கல்வியை கைவிட்டுள்ளதாகக் கூறப்பட்டது. (க-6)

# அதிபர்களுக்கான கூட்டம்

கோப்பாய் கல்விக் கோட்ட அதிபர்களுக்கான கூட்டம் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடை பெறவுள்ளது ஏற்கனவே இந்தக் கூட்டம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்ததாகவும் அன்றைய தினத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும் கோப்பாய் கோட்டக் கல்வி அதிகாரி வே.பாலசுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

# சதுர்த்தி பூஜை நிகழ்வு

யாழ்ப்பாணம், பெப்,27

யாழ்.வண்வடகிழக்கு கலட்டி ஸ்ரீவீரகத்தி விநாயகர் தேவஸ்தானத்தில் சங்கடஹர சதுர்த்தி விரதத்தை முன்னிட்டு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு விசேட அபிஷேகம் ஆரம்பமாகி மூலமூர்த்தி பூஜை,வசந்த மண்டபப் பூஜையுடன் விநாயகப்பெருமான் திருவீதிவலம் வருதலும் இடம்பெறவுள்ளது எனவே அடியார்கள் பங்குபற்றி விநாயகப் பெருமானின் அருளைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.(16)


Diploma in Pharmacy

Leading To Bsc Pharmacy

2 Years Course
CMCC Syllabus
Full Practical

Addmissions Open

Monthly Rs.3000/= ONLY

*Initial Payment Rs.20000/-

Visalam Wide and Beyond

Visalam MINDS
127/1 Temple Road Jaffna
021 221 9695 075 979 9695
Email: admin@visalamholdings.com


## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



மண்மகிழ
05.10.1939

கண்நேகிழ
29.01.2013

## சின்னத்தம்பி காசிநாதன்

எமது குடும்பத்தலைவரின் அமரத்துவம் அடைந்த செய்தி கேட்டு நேரில் வந்தும் தொலைபேசி வாயிலாகவும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி பிரசுரம் வெளியிட்டவர்களுக்கும் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவிகள் புரிந்த அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்வதுடன் இன்று 27.02.2013 புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்
திரு.கா.பிரதீபன்(பிரான்ஸ்)
திருமதி.ராஜ்குமார் குமுதினி (நோர்வே).

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

(33866) (8,16)

## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் லோகநாதன்



பெரியமாவடி, சாவகச்சேரியைச் சேர்ந்த சுப்பிரமணியம் லோகநாதன் நேற்று முன்தினம் (25.02.2013) திங்கட்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனைகள் இன்று (27.02.2013) புதன்கிழமை மு.ப.10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று சாவகச்சேரி கண்ணாடிப் பிட்டி சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பிரகாஸ்(மகன்)
முழங்காவில்.

பெரியமாவடி,
சாவகச்சேரி.

## மரண அறிவித்தல்

### திருமதி பரமேஸ்வரி பொன்னுத்துரை



இணுவிலைப் பிறப்பிடமாகவும் சித்தன்கேணியைப் புகுந்த இடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி பொன்னுத்துரை நேற்று (26.02. 2013) செவ்வாய்க்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரையின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சு. இராமலிங்கத்தின் (வைத்தியர்) மருமகளும் காலஞ்சென்ற சரோஜினி தேவி மற்றும் சிதம்பரநாயகி (கனடா), இராசநாயகி (சித்தன் கேணி), இரட்ணேஸ்வரி (கனடா), கணேசமூர்த்தி (கனடா), குகதாசன் (கனடா), கணேஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் ஸ்ரீரஞ்சன் (கனடா), காலஞ்சென்ற தேவராசா மற்றும் சீனிவாசகம் (கனடா), சாவித்திரி (கனடா), பபி (கனடா), சற்குணராசா (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் பாபு (வினிதா), ராஜன், மோகன், அனுஷா (விஜயகாந்த்), டர்ஷன், டர்ஷி, ஸ்ரீரஜனி (ஜீவானந்தா), சுஜனி (சுதர்சன்), குமரன் (தர்சினி), றஜீபன், செந்தூரன், நிவேதா, அபிராம், அபீனா, அர்ச்சுன், கௌதம், கிசோக் ஆகியோரின் பேர்த்தியும் வர்கின், வாசிகா, வர்சணா, அக்சயா, விபிசா, தருண், கானுஜன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.02.2013) வியாழக்கிழமை கனடாவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தொலைபேசி
0014165363714 (கனடா)
0217913185 (சித்தன்கேணி)

தகவல்
திருமதி தே. இராசநாயகி (மகள்)
சனா , றஜீபன் (பேரன்)

(இ/6686)(2,6,7)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
23 ★ 06 ★ 1933

மறைவு
27 ★ 02 ★ 2010

## அமரர் கனகர் துரைராசா

அன்புக்கு அடிச்சுவடாய் இல்வாழ்வில் இமயமாய் குடும்பத்தில் ஒளிவிளக்காய் ஊர்போற்றும் கடமை வீரனாய் எம்மை அன்புக் கரங்களால் வாழவைத்த அன்புத் தந்தைக்கு ஆத்மா சாந்தி பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

377/1,ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

(27867)(3.6.7)

## வாகனம் விற்பனைக்கு

மிகவும் நல்ல நிலையில் உள்ள மிற்சுபிசி வடிக் கன்டர் விற்பனைக்கு உள்ளது.

தொடர்பு
0776545116
0756701519

## நினைவுகளுடன்.......

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி





மண்ணில் 21.01.1930 — விண்ணில் 09.03.2012

**சுப்பையா ஐயாத்துரை**

திதி: துதியை

மண்ணில் 10.05.1940 — விண்ணில் 27.01.2011

**ஐயாத்துரை பரமேஸ்வரி**

திதி: அபரபக்க அட்டமி

ஆண்டு ஒன்று போனாலும் உங்கள் நினைவுகள் என்றும் நீங்காது எம் மனதினில் இருக்கும் உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்

குறிப்பு:- தவிர்க்க முடியாத காரணத்தினால் இன்று நடைபெறவிருந்த மதிய போசன நிகழ்வு நாளைய தினம் 28.02.2013 (வியாழக்கிழமை) அன்று நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.


கே.கே.எஸ்.வீதி,
இணுவில் மேற்கு, இணுவில்.

(33859)(2.6.7)

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி சபாரட்ணம்



அனலைதீவைப் பிறப்பிடமாகவும் புளியங்கூடலை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சபாரட்ணம் கடந்த (22.02.2013) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் சின்னத்தம்பி - தங்கமுத்து தம்பதியரின் அன்பு மகனும் துரையப்பா-பார்வதிப் பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் பிறேமாவதியின் அன்புக் கணவரும் அருட்குமரன், உமாதேவி, அரிகரன், ஸ்ரீதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜீவனா, நந்திவர்மன், சுகிதா, மதிவண்ணன் ஆகியோரின் அன்பு மாமனும் அஸ்வின், பிரியந்த், யசிந்த், மர்விந், டிலானி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.02.2013) வியாழக்கிழமை மு.ப.10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சுருவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
சபாரத்தினம் அருட்குமரன் (மகன்).
077 465 9394
077 247 4257

புளியங்கூடல்,
ஊர்காவற்றுறை.

(33861)(5.6.7)

# நன்றி நவிலல்



## தம்பு சிவஞானசுந்தரம்

எங்கள் குடும்பத்தின் தலவிருட்சமாய் இருந்து கடந்த 27.01.2013 அன்று எம்மை மீளாத்துயரில் ஆழ்த்திவிட்டு முருகனின் பாதங்களைப் பற்றி கொண்ட எங்கள் குடும்ப விளக்கு தம்பு சிவஞானசுந்தரம் அவர்களின் மரணச் செய்தி கேட்டவுடன் நாம் என்ன செய்வது எனத் திகைத்து நின்ற வேளை ஓடோடி வந்து உற்ற உதவிகளைச் செய்தவர்களுக்கும் அன்னாரின் இறுதி மரண ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்களுக்கும் மற்றும் மரணச் சடங்கில் கண்ணீர்த் துண்டுப் பிரசுரங்களை அச்சிட்டு வெளியிட்டவர்களுக்கும் மற்றும் மலர் வளையங்கள் சாத்தி அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் நேரடியாகவும் தொலைபேசி ஊடாகவும் ஆறுதல் கூறியவர்களுக்கும் தொடர்ந்து அன்னாரின் ஆத்ம சாந்தி வேண்டி கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்ற சமயக் கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து அன்னாரின் இல்லத்தில் நேற்று (26.02.2013) நடைபெற்ற 31 ஆம் நாள் நினைவஞ்சலியிலும் கலந்து சிறப்பித்த உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் சிரம் தாழ்த்தி இரு கரம் கூப்பி எமது கோடான கோடி நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

குறிப்பு:- இந்த நன்றி நவிலலில் யாருக்காவது நாம் நன்றிகள் கூறத் தவறியிருப்பின் அதனை மன்னித்து உதவுமாறு தாழ்மையுடன் வேண்டி நிற்கின்றோம்.

" செய் நன்றி மறந்தவர்களுக்கு உய்வில்லை.

தகவல்

மனைவி, மகன் (ஸ்ரீமுருகதாஸ்- ஜேர்மனி) குடும்பத்தினர்.

தொ.பே.: 021 373 7992, 004917321277724

வழாலை
கிழக்கு,
சுழிபுரம் [illegible]

## பிக்கப் மோதி முதியவர் சாவு

கிளிநொச்சி, பெப்ரவரி.27

கிளிநொச்சியில் இடம்பெற்ற வீதி விபத்தில் முதியவரொருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

சைக்கிளில் சென்ற இவரை பின்னால் வந்த பிக்கப் வாகனம் மோதியே விபத்து இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று முற்பகல் 11.30 மணியளவில் கிளிநொச்சி நீதி மன்றுக்கு முன் வீதியில் இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

கிளிநொச்சி வன்னேரிக்குளத்தைச் சேர்ந்த சோமசுந்தரம் கனகராஜ்(வயது-73) என்ற வயோதிபரே உயிரிழந்தவராவார். விபத்து தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன் பிரேத பரிசோதனைக்காக சடலத்தை கிளிநொச்சி ஆதார வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர்.

(16-6)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு:
advt@uthayan.com
0215671111

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/நீர்வேலி றோ.க.த.க பாடசாலையின் அதிபராக சேவையாற்றிக் கொண்டிருக்கும்

## திரு.சி.தர்மரத்தினம்

அவர்கள் அதிபர் தரம் II-2 ற்கு பதவி உயர்வு பெற்றமையையிட்டு எமது பாடசாலைச் சமூகம் பெருமகிழ்வடைவதுடன் அவர் பணி மேலும் சிறக்கவும், பல பதவி உயர்வுகள் பெறவும் வாழ்த்துகின்றோம்.

Best Wishes

யா/நீர்வேலி றோ.க.த.க. பாடசாலை. பாடசாலைச் சமூகம்.

# மரண அறிவித்தல்

## திருமதி திலகவதி இராசரத்தினம்



இணுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி திலகவதி இராசரத்தினம் நேற்று (26.02.2013) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம் - அன்னமுத்து தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற இராசரத்தினத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற போகம்மா மற்றும் உத்திரம், கந்தசாமி ஆகியோரின் சகோதரியும் தயாநிதி தேவி, நிருபாகரன், தர்சினி, ஜெயந்தி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்ற நவரத்தினம் மற்றும் தயாநிதி, சிவகுமாரன் (மாகாண நீர்ப்பாசனத் திணைக்களம், வவுனியா), கதிர்காமநாதன் ஆகியோரின் அன்பு மாமியும் பிரகாஷ், பிரதீபன் (பிரான்ஸ்), தர்மகுமார் (பிரான்ஸ்), நளினி (பிரான்ஸ்), பிரசன்னா, லக்ஸ்மன், தர்சிகா, கபிலக்ஷன், லதுசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் மதுசனின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.02.2013) புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெற்று பூதவுடல் காரை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

கே.கே.எஸ். வீதி,
இணுவில் சந்தி.

தகவல்
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## திருமதி இராஜேஸ்வரி ஏகாம்பரநாதன்



வரணியைப் பிறப்பிடமாகவும், மிருசுவில் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராஜேஸ்வரி ஏகாம்பரநாதன் நேற்று முன்தினம் (25.02.2013) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-சரஸ்வதிப்பிள்ளை தம்பதியரின் சிரேஸ்டபுதல்வியும், காலஞ்சென்றவர்களான விநாசித்தம்பி- தையல்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், ஏகாம்பரநாதனின் அன்பு மனைவியும், ரவிச்சந்திரகுமார், காலஞ்சென்ற பாலச்சந்திரகுமார் மற்றும் குகச்சந்திரகுமார்(கனடா), சிவச்சந்திரன்(இலங்கை) ஆகியோரின் அன்புத் தாயும், தயாழினி(கனடா), நர்மதா (இலங்கை), பத்மலோஜினி(கனடா) சிவநந்தினி(இலங்கை) ஆகியோரின் அன்பு மாமியும், ராகவி(கனடா), ஆத்மிகா, கவீனா, காவியா (கனடா) ஆகியோரின் ஆசைப்பேர்த்தியும், காலஞ்சென்ற இராஜகோபால்(இலங்கை) மற்றும் துரைராஜா(சுவிஸ்), இராசநாயகம் (கனடா), சிவராசா(ஜேர்மனி), நாகேஸ்வரி(கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.02.2013) வியாழக்கிழமை மு.ப. 10.00மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மிருசுவில் பெரியானோடை இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மிருசுவில் வடக்கு,
மிருசுவில்
07777 86765
077 0759595

தகவல்:
குடும்பத்தினர்.

வெள்ளத்தின் மத்தியில் அறுவடை செய்த நெல்

## நெல்லை வீதிகளில் பரப்பி உலரவைக்கும் விவசாயிகள்



நவாலி,பெப்.27

நவாலி ஆனைக்கோட்டைப் பகுதி வயல்களில் வெள்ளத்தின் மத்தியில் அறுவடைசெய்த நெற்கதிர்களை விவசாயிகள் ஈரத்துடன் எடுத்து வந்து பிரதான வீதியோரமும்,

மற்றும்குறுக்கு வீதிகளில் படங்குகள், உரப்பைகளை விரித்து அவற்றின் மீது நெல்லைப் பரப்பி வெய்யிலில் உலர வைக்கின்றனர்.

பல்லாயிரம் ரூபா செலவு செய்து விதைத்த நெல் நன்றாக விளைந்தும் உரிய காலத்தில் அதனை அறுவடை செய்ய விடாமல் தொடர்ந்து பெய்த மழையால் பெரும்பாலான வயல்களில் அவை வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

தற்போது அவற்றை வெள்ளத்தில் நின்று கூலி ஆள்கள் மூலம் அறுவடை செய்து வாகனங்களில் ஏற்றி வந்து உலர வைத்துள்ளனர். வெள்ளத்தால் ஈரமடைந்து வீதியில் உலர வைத்த நெல்லைக் கடந்து செல்ல முடியாமல் பாடசாலைப் பிள்ளைகளை ஏற்றி வந்த ஓட்டோ வீதியோரம் நிறுத்தப் பட்டுள்ளதையே காண்கிறீர்கள். (வ-100)

## பாலைதீவு அந்தோனியார் திருவிழா 3 ஆம் திகதி

யாழ்ப்பாணம், பெப்.27

பாலைதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழா திருப்பலி பூசையை இந்த வருடமும் சிறப்பாக நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

எதிர்வரும் 3 ஆம் திகதி காலை 6 மணிக்கு முதல் திருப்பலியும் காலை 7.00 மணிக்கு இரண்டாவது திருப்பலியும் இடம்பெறவுள்ளன.

திருவிழாவுக்கான ஆயத்த வழிபாடுகள் மார்ச் முதலாம் திகதி வெள்ளிக்கிழமையும் மார்ச் 2 ஆம் திகதி சனிக்கிழமையும் இடம்பெறவுள்ளன.

மேற்படி திருப்பலி பூசையில் யாழ். கரையோரப் பகுதியை சேர்ந்த பெரும் எண்ணிக்கையான மக்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

கடற்படையினரின் அனுமதியுடன் இந்த வாரத்தில் விசேட குழு ஒன்று பாலைதீவு சென்று திருவிழா, திருப்பலி பூசைக்கான முன்னேற்பாடுகளை மேற்கொள்ளவுள்ளது.

கடந்த வருட திருவிழாவின் போதும் பல நூற்றுக் கணக்கான மக்கள் பாலைதீவு புனித அந்தோனியார் ஆலயத்துக்கு வழிபாட்டுக்குச் சென்றிருந்தமை குறிப்பிடத் தக்கது. (ம-17-51)

# நெல்சிப் வேலைத் திட்டங்களை நாங்களே மேற்கொள்ளவுள்ளோம்

## கூட்டமைப்பின் பிரதேச சபைகளுக்குள் அவசரமாக ஓடித் திரியும் அரச தரப்பினர்

யாழ்ப்பாணம்,பெப்.27

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிர்வாகத்தின் கீழுள்ள உள்ளூராட்சிச் சபைகளுக்கு ஒதுக்கப்பட்ட 'நெல்சிப்' நிதியைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படவுள்ள வேலைத் திட்டங்களை இனங்கண்டு கொள்வதில் அரசதரப்பு உள்ளூராட்சிப் பிரதிநிதிகள் ஆர்வம் காட்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிர்வாகத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகளுக்கு ஒதுக்கப்பட்ட 'நெல்சிப்' நிதி, உள்ளூராட்சித் திணைக்களத்தினால் மீளபெறப்பட்டிருந்தது. இதுகுறித்து கூட்டமைப்பின் உள்ளூராட்சி உறுப்பினர்கள் அண்மையில் யாழ்ப்பாணம் வந்திருந்த ஜனாதிபதி மஹிந்தராஜ பக்ஷவிடம் சுட்டிக்காட்டியிருந்தனர். இதனையடுத்து அந்த நிதியை மீள வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி பணித்திருந்தார்.

இந்த நிலையில் அந்த நிதியைப் பயன்படுத்தி வேலைத்திட்டங்களைத் தாங்களே மேற்கொள்ள விருப்பதாகக் கூறிக் கொண்டு அரச தரப்புப் பிரதிநிதிகள் வேலைத் திட்டங்களை இனங்காண்பதற்கு முண்டியடித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

'நெல்சிப்' திட்ட வேலைகளைத் தாங்களே மேற்கொள்ளவிருப்பதாகவும், அதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் நிறைவடைந்திருப்பதால் உள்ளூரில் மேற்கொள்ள வேண்டிய வேலைத் திட்டங்களை இனங்காண முயல்வதாகக் கூறி அரச தரப்புப் பிரதி நிதிகள் கூட்டமைப்பின் கீழ் உள்ள பிரதேச சபைகளுக்குள்ளும் அவசர அவசரமாக ஓடித்திரிவதாகவும், வடக்கு மாகாணத் தேர் தலை இலக்கு வைத்தே இவர்கள் இவ்வாறு நடந்து கொள்வதாகவும் கூட்டமைப்புப் பிரதிநிதிகள் தெரிவிக்கின்றனர்.

யாழ்.மாவட்ட விசேட அபிவிருத்திக் கூட்டத்தில் கலந்து கொண்ட ஜனாதிபதி 'நெல்சிப்' நிதியை மீண்டும் உள்ளூராட்சி சபைகளிடம் கையளிக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் பணித்திருந்தார். ஆயினும் இதுவரை உள்ளூராட்சி திணைக் களத்தினால் அந்த நிதி உள்ளூராட்சிச் சபைகளுக்குக் கையளிக்கப்படவில்லை. இது தொடர்பான சுற்றறிக்கை எதுவும் இதுவரை வெளிவரவுமில்லை.

நீண்டகாலமாக திருத்தப் படாத வீதிகள் மற்றும் வேலைத் திட்டங்களை நிறைவு செய்யும் விடயத்தில் அரச தரப்பினர் இப்போது அதிக ஆர்வம் காட்டுவது வடக்கு மாகாணத் தேர்தலுக்கான ஒரு பிரசார உத்தியே எனத் தெரிவிக்கப்படுகிறது. (த-11)

## இருளில் மூழ்கும் பண்ணை வீதி பயணிப்போர் பெரும் சிரமத்தில்

யாழ்ப்பாணம், பெப்.27

பண்ணை வீதி இருளில் மூழ்கியுள்ளதால் இரவு வேளையில் இந்த வீதியூடாகப் பயணிக்கும் வாகனச் சாரதிகள் மற்றும் பொதுமக்கள் பெரும் சிரமங்களுக்குத் முகம் கொடுத்து வருகின்றனர்

தீவுப் பகுதிக்கான பிரதான வீதியாக உள்ள இந்த வீதிக்கு இதுவரையில் வீதி விளக்குகள் பொருத்தப்படவில்லை.

குறிப்பாக பண்ணைப் பாலதுக்கு அப்பால் வீதி விளக்குகள் எவையும் இதுவரைக்கும் பொருத்தப்படாதனால் இரவில் பயணிக்கும் வாகனங்கள் பெரும் சிரமங்களுக்கு மத்தியில் பயணத்தை மேற்கொள்கின்றன.

இரு பக்கமும் கடல் சூழ்ந்த இந்த வீதிக்கு அவசரமாக வீதி விளக்குகள் பொருத்தி இரவில் பயணிக்கும் மக்கள் தமது போக்குவரத்தை பாதுகாப்பாக மேற்கொள்வதற்கு சம்பந்தப்பட்ட தரப்பினர் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது குறித்து மின்சார சபை அதிகாரி ஒருவரிடம் தொடர்பு கொண்டு கேட்ட போது; இந்தப் பிரதான வீதிக்கு மின்சார விளக்குகளை அமைப்பது தீவுப் பகுதி பிரதேச சபைகளின் கடமையாகும்.

பிரதேச சபைகள் வீதி விளக்குகளை பெற்றுத் தந்தால் வீதிக்குரிய மின் விநியோகத்தை வழங்க முடியும்.

அவசரமாக இந்த பிரதான வீதிக்கு, வீதி விளக்குகள் ஒளிரவிடுவதன் அவசியத்தையும், அந்த அதிகாரி வலியுறுத்திக் கூறினார். (ம-17)

## இந்தியப் புடைவை வியாபாரம் வடமராட்சியில் நிறுத்தப்பட்டது

வடமராட்சி, பெப்.27

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் இந்திய புடைவை வியாபாரிகளின் வியாபாரம் முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது என்று பருத்தித்துறைப் பொலிஸ் நிலைய தலைமையகப் பொறுப்பதிகாரி ஜகத் அபயக்கோன் தெரிவித்தார்.

சிவில் பாதுகாப்புக் கூட்டத்தில் வைத்து இதனைத் தெரிவித்த அவர் இந்திய வியாபாரிகள் மீண்டும் இந்தப் பிரதேசத்தில் வியாபாரம் மேற்கொண்டால் அது குறித்து தகவல் தருமாறும் தெரிவித்துள்ளார். (ம-8)

## கட்டாக்காலிகளாலேயே தீவில் பயிர்கள் அழிவு

யாழ்ப்பாணம், பெப்.26

தீவுப் பகுதியில் கட்டாக்காலியாக நடமாடும் கால்நடைகளால்தான் அங்கு பயிர்ச்செய்கை பாதிக்கப்படுகின்றது என்று விவசாய சம்மேளனத்தின் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

இந்தப் பிரதேசத்தில் கட்டாக்காலியாக நடமாடும் இந்தக் கால்நடைகள் விவசாய நிலங்களில் அத்துமீறிச் சென்று பயிர்களை அழித்து வருகின்றன.

குறிப்பாக அல்லைப்பிட்டி, மண்டைதீவு பிரதேசங்களில் சுமார் 25 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கட்டாக்காலி கால்நடைகள் நடமாடி வருகின்றன.

இந்தக் கால்நடைகளை கட்டுப்படுத்துவதற்கு எந்த அமைப்புகளும் முன்வரவில்லை.

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட பெரும்போக நெற்செய்கையின் போது நெற்கதிர்கள் பால் கட்டும் தறுவாயில் கால்நடைகள் பயிர்களை மேய்ந்து சின்னா பின்னமாக்கி விட்டன.

அநேகமான வயல் நிலங்களுக்குப் பாதுகாப்பு வேலிகளும் போடப்பட்டிருந்தன. எனினும் கட்டாக்காலிகள் பாதுகாப்பு வேலியையும் பிரித்து உள்ளே சென்று பயிர்களை மேய்ந்து சென்றுள்ளன.

அண்மையில் பெய்த மழையால் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் கட்டாக்காலி கால்நடைகள் போன்றவற்றால் குறைந்தது ஐம்பது வீதமான பயிர் அழிவு ஏற்பட்டுள்ளது.

இந்தப் பயிர் அழிவால் தீவுப் பகுதி விவசாயிகள் இந்த முறை நெற்செய்கையில் பெரும் நட்டத்தை எதிர்நோக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-17)

## சட்டவிரோத விற்பனையாளர்கள் இழந்தனர் 41 ஆயிரம் ரூபாவை

வடமராட்சி, பெப்.27

வடமராட்சிப் பிரதேசத்தில் கடந்த ஜனவரி மாதம் சட்ட விரோதமாக கள், சாராயம், பீடி, சிகரெட் வகைகளை விற்பனை செய்த குற்றச் சாட்டின் பேரில் 11 பேர் 41 ஆயிரம் ரூபாவை குற்றப் பணமாகச் செலுத்தினார்கள்.

புலோலி தெற்கு, அல்வாய் கிழக்கு, அல்வாய் மேற்கு, கரவெட்டி மேற்கு ஆகிய இடங்களைச் சேர்ந்த 6 பேர்களும், கரவெட்டி மேற்கைச் சேர்ந்த ஒருவர் அரச சாராயத்தையும் சட்ட விரோதமாக விற்பனைக்காக தமது வீடுகளில் வைத்திருந்ததாகவும்-

கரவெட்டி மத்தி, கலிகைச் சந்தி, நெல்லண்டை, தும்பளை ஆகிய இடங்களில் உள்ள கடைகளில் வைத்து 4 பேர் பீடி, சிகரெட்டுக்களை சிறார்களுக்கு விற்பனை செய்ததாகவும்- பருத்தித்துறை மது வரித் திணைக்களப் பொறுப்

**மதுவரி உத்தியோகத்தர்கள் நடத்திய சோதனையின்போது கண்டு பிடிக்கப்பட்டது.**

பதிகாரி தா.அசோகரட்ணம் தலைமையிலான மதுவரி உத்தியோகத்தர்கள் நடத்திய சோதனையின்போது கண்டு பிடிக்கப்பட்டது.

இவர்களில் கள் விற்பனை செய்த 6 பேரில் 3 பேருக்கு தலா 3 ஆயிரம் ரூபாவும், மற்றைய மூவருக்கு தலா ஆயிரம் ரூபாவும், சாராயம் விற்பனை செய்தவருக்கு 25 ஆயிரம் ரூபாவும், பீடி, சிகரெட்டுக்கள் விற்பனை செய்த 4 பேருக்கு தலா ஆயிரம் ரூபா வீதமும் அபராதமாக விதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-8)

## மனிதாபிமானத்துடன் உதவியவர்களுக்கு நேர்ந்த இக்கட்டு

யாழ்ப்பாணம்,பெப்.27

வீதியில் மயங்கிய நிலையில் காணப்பட்ட நபரொருவரை மனிதாபிமான முறையில் வாகனத்தில் ஏற்றி வந்து வைத்திய சாலையில் ஒப்படைத்தவர்களை பொலிஸார் கடுமையான விசாரணைக்குட்படுத்தியமை குறித்து கவலை தெரிவிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் கொடிகாமம் ஏ-9 வீதியில் நாவலடிப் பகுதியில் வீதியோரத்தில் மயங்கிய நிலையில் காணப்பட்ட நபரொருவரை, வீதியில் வாகனத்தில் சென்றவர்கள் பலர் கவனிக்காமல் சென்ற போதிலும் புத்தளத்தில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த சிலர் மனிதாபி மானத்துடன் தமது வாகனத்தில் ஏற்றி வந்து சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் ஒப்படைத்தனர்.

அவ்வாறு ஏற்றி வந்த சாரதி மற்றும் அந்த வாகனத்தில் வந்தவர்களை சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் வைத்து பொலிஸார் பொதுமக்கள் முன்னிலையில் கடுமையாக விசாரித்ததால், அவர்கள் பெரும் சங்கடத்துக்கு ஆளாகினர் என்று தெரிவிக்கப்பட்டது.

மயங்கிய நிலையில் காணப்பட்ட நபர் உடனடியாக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் இருந்து அவசரமாக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்

கொடிகாமம் நாவலடியைச் சேர்ந்த மாணிக்கராஜா ஜெயரஞ்சிதகுமார் (வயது -33) என்பவரையே வாகனத்தில் வந்தவர்கள் மீட்டு வைத்தியசாலையில் சேர்த்திருந்தனர். இவர் விபத்து ஒன்றில் சிக்கியிருக்கலாம் என்று கூறப்பட்டது. அவருக்கு உதவியவர்களுடன் பொலிஸார் நடந்து கொண்ட விதம் அங்கு நின்ற பொதுமக்களை முகஞ் சுழிக்க வைத்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

## மகாராஷ்டிராவில் நிலநடுக்கம்



சென்னை, பெப்.27

மகாராஷ்டிரா மாநிலம் தானேயில் நேற்று முன் தினம் இரவு 11 மணியளவில் இலேசான நில நடுக்கம் ஏற்பட்டது. இதனால் நித்திரையில் இருந்த மக்கள், தங்களின் வீடுகளை விட்டு அலறியடித்துக் கொண்டு வெளியேறினர்.

சில வினாடிகள் நீடித்த நடுக்கத்தால் மக்கள் அன்றிரவு நில தூக்கமிழந்து தவித்தனர். இதை ஜவஹர் நகர் பொலிஸாரும் உறுதி செய்துள்ளனர். (வ)



டில்லி வந்துள்ள ஜப்பான் கடலோர தற்காப்புப் படையின் தளபதிக்கு நினைவு பரிசில் வழங்குகிறார் மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ஏ.கே.அந்தோனி. (வ)

## போர்ப் பயிற்சியை வேவு பார்த்த பாகிஸ்தான் உளவாளி சிக்கினார்

ராஜஸ்தானில் இந்திய இராணுவத்தினர் நடத்திய போர் பயிற்சியை வேவு பார்த்த பாகிஸ்தான் உள வாளி கைது செய்யப்பட்டார்.

ராஜஸ்தான் மாநிலம் பொக்ரான் பாலைவனப் பகுதியில் இந்திய இராணுவத்தினர் மற்றும் விமானப் படையினர் போர் பயிற்சியில் ஈடுபடுகின்றனர். அண்மையில் விமானப்படையினர் 'இரும்புக் கரம்'' என்ற பெயரில் போர் பயிற்சி மேற்கொண்டனர்.


இந்த நிலையில், பொக்ரானில் இருந்து பாகிஸ்தானுக்கு அடிக்கடி தொலை பேசி அழைப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதை உளவுத் துறையும், இராணுவ உளவுப் பிரிவும் கண்டுபிடித்தன.

அதையடுத்து அடிக்கடி பாகிஸ்தானுக்கு தொலைபேசியில் பேசிய சுமீர் கான் (வயது 34) என்பவரைக் கடந்த ஞாயிற்றுக் கிழமை கைதுசெய்து விசாரித்தனர். அப்போது பாகிஸ்தானின் உளவுப் பிரிவான ஐ.எஸ்.ஐ.இற்கு உளவாளியாக அவர் செயற்பட்டது தெரிய வந்தது. பாகிஸ்தானில் அவரது உறவினர் ஒருவர் ஐ.எஸ்.ஐ. உளவாளியாக இருக்கிறார். அவர் மூலம் இந்திய இராணுவ இரகசியங்களை ஐ.எஸ்.ஐ.இற்கு கடந்த 2 ஆண்டுகளாக அனுப்பிவந்துள்ளார்.

பொக்ரானில் இந்திய இராணுவ பயிற்சிகள் மற் றும் மேற்கு பிராந்தியத்தில் உள்ள இராணுவ நிலையங்கள் குறித்த வரை படங்கள் உள்ளிட்ட விவரங்களை அவர் பாகிஸ்தானுக்கு அனுப்பியது விசாரணையில் தெரியவந்துள்ளது. (வ)

## வெற்றிகரமாக விண்ணில் பாய்ந்தது 'சரள்' விண்கலம்

### இந்தியாவின் 23 ஆவது ரொக்கெட்



இந்திய விண்வெளி ஆய்வு அமைப்பின் பி.எஸ். எல்.வி-சி 20 ரொக்கெட் ஆந்திரா மாநிலம், ஸ்ரீஹரிகோட்டாவில்உள்ள ஏவுதளத்தில் இருந்து நேற்று முன்தினம் திங்கட்கிழமை விண்ணில் ஏவப் பட்டது.

பிரான்ஸ் நாட்டு சி.என்.ஈ.எஸ். எனப்படும் விண்வெளி ஆய்வமைப்புடன் இணைந்து இஸ்ரோ உருவாக்கியுள்ள சரள் எனப் படும் விண்கலம், கடல் வளங்கள், பருவநிலை மாற்றத்தால் உயர்வடைந்து வரும் கடல் நீர் மட்டம் ஆகியவை குறித்து நடத்தப்படும் ஆய்வுப் பணிகளுக்கு உதவும்.

சரள் விண்கலத்திலேயே பிரிட்டன், ஆஸ்திரியா, டென்மார்க் மற்றும் கனடா ஆகிய நாடுகள் உருவாக்கிய சிறியவகை செயற்கைக் கோள்கள் ஆறும் இடம்பெற்றிருக்கின்றன. சரள் விண்ணில் செலுத் தப்படுவதை ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி, ஆந்திர மாநில முதலமைச்சர் கிரண்குமார் ரெட்டி உள்ளிட்டோர் நேரில் பார்வையிட்டனர்.

பி.எஸ்.எல்.வி. வரிசையில் இஸ்ரோ ஏவும் 23 ஆவது ரொக்கெட் இது என்பதும் இங்கே குறிப்பிடத்தக்கது.

# 'ஸ்லீப்பர் செல்' தீவிரவாதிகள் 200 பேர் ஹைதராபாத்தில் ஊடுருவல்

### உளவுத்துறை தகவல்

ஹைதராபாத், பெப்.27

'ஸ்லீப்பர் செல்' எனப்படும் இரகசியமாக செயற்படும் தீவிரவாதிகள் 200 பேர் ஹைதராபாத்தில் ஊடுருவியுள்ளதாக உளவுத்துறை தகவல் வெளியிட்டுள்ளது.

அவர்களை இந்தியன் முஜாகிதீன் என்ற அமைப்பை ஒத்த தீவிரவாத அமைப்புகள் வழி நடத்துகின்றன என்றும் உளவுத்துறை அதிர்ச்சிகரமான தகவலை வெளியிட்டுள்ளது.

ஹைதராபாத் நகரில் நடந்த இரட்டைக் குண்டு வெடிப்பில் 17 பேர் உயிரிழந்தனர். 130 பேர் காயம் அடைந்தனர். எப்போதும் பரபரப்பாகக் காட்சி அளிக்கும் தில்சுக் நகர் பகுதியில் இடம் பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்துக்கு எந்தவொரு தீவிரவாத அமைப்பும் இது வரை பொறுப்பேற்கவில்லை என்றாலும் இது ஸ்லீப்பர் செல்களின் வேலைதான் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



இந்திய முஜாகிதீன் என்ற தீவிரவாத அமைப்புத்தான் இதனைச் செயற்படுத்தி இருக்க வேண்டும் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது. அவர்கள் மக்களோடு மக்களாக வசிப்பார்கள். வழக்கமான தங்கள் தொழிலில் ஈடுபடுவார்கள். யாருக்கும் சந்தேகம் ஏற்படாத வகையில் சதிச் செயல் இருக்கும். இப்படி 200 ஸ்லிப்பர் செல் தீவிரவாதிகள் ஹைதராபாத்தில் இருப்பதாக உளவுத் துறை தகவல் வெளியிட்டுள்ளது. அவர்களை இந்தியன் முஜாகிதீன் போல் உலக நாடுகளில் செயற்படும் 10 தீவிரவாத அமைப்புகள் வழி நடத்துகின்றன. வழிமாறும் இளைஞர்கள் படித்த, வேலை இல்லாத ஏழை இளைஞர்களை பண ஆசை காட்டி தங்கள் வலையில் வீழ்த்தும் தீவிரவாதிகள், பின்னர் டுபாயில் வேலை தருவதாக அழைத்துச் செல்வார்கள். அங்கிருந்து பாகிஸ்தானுக்கு அனுப்பி அங்கு அவர்களை மூளை சலவை செய்து தீவிரவாத பயிற்சி நடவடிக்கைகளுக்கான அளிக்கின்றனர். குஜராத், பஞ்சாப், ராஜஸ்தான் எல்லை வழியாக திருட்டுத்தனமாக பாகிஸ்தானுக்கு அழைத்துச் சென்றும் பயிற்சி அளிக்கப்படுகிறது. பங்களாதேஷிலும் இந்தப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இவ்வாறு பயிற்சி பெற்றவர்கள் இந்தியா திரும்பி மக்களோடு மக்களாக இருந்து கொண்டு தலைமை சொல்லும் கட்டளையை செயற்படுத்துவார்கள்.

இத்தகைய ஸ்லீப்பர் செல் தீவிரவாதிகளை கண்டு பிடிக்கும் முயற்சியில் பொலிஸார் ஈடுபட்டு உள்ளனர். (வ)

## காவிரி நதி நீர் விவகாரம் இறுதி விசாரணை ஓக.6



டில்லி, பெப்.27

காவிரி நதிநீர் விவகாரம் தொடர்பான பிரதான வழக்கின் இறுதி விசாரணை ஓகஸ்ட் 6 ஆம் திகதி நடைபெறும் என்று உச்சநீதி மன்றம் அறிவித்துள்ளது.

காவிரி நீர் தொடர்பான வழக்கு விசாரணை நேற்று முன்தினம் உச்சநீதிமன்றத்தில் நடைபெற்றது. அப்போது காவிரி நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பு அரசிதழில் வெளியிடப்பட்டதாக மத்திய அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது. அதன் பின்னர் காவிரி நீர் தொடர்பான அவதூறு வழக்குகள் உள்ளிட்டவை முடித்து வைக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

காவிரி நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பின்படி காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்கும் என்று நம்புவதாகவும் உச்ச நீதி மன்ற நீதிபதிகள் தெரிவித்தனர். அதேவேளை இதற்காக உத்தரவு எதுவும் தற்போது பிறப்பிக்க முடியாது என்றும் நீதிபதிகள் கூறினர்.

காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பை எதிர்க்கும் கர்நாடகத்தின் மனு மீதான விசாரணை, காவிரி நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பில் உள்ள சந்தேகங்களைத் தீர்ப்பது தொடர்பாக தமிழக மற்றும் கேரள அரசு தாக்கல் செய்த மனு மீதான விசாரணை ஆகியவை ஓகஸ்ட் 6 ஆம் திகதி நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

## டில்லியில் இரு இடங்களில் வெடிகுண்டுகள் கண்டுபிடிப்பு

### அங்கு பெரும் பதற்றம்

டில்லி, பெப்.27

டில்லியில் இரண்டு இடங்களில் குண்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளன. இது டில்லி மாநகரில் பெரும் பதற்றத்தை ஏற்படுத்தி உள்ளது.

ஹைதராபாத் குண்டு வெடிப்புக்கு இந்தியன் முகாஜீதீன் அமைப்பே காரணம் என்றும் சொல்லப்படுகிறது. இந்த நிலையில், இந்தியாவின் முக்கிய நகரங்களில் மேலும் குண்டு வெடிப்புகள் நிகழக் கூடும் என்று, மத்திய உளவுத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்தநிலையில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்ட நிலையில் டில்லி இராணுவ மருத்துவமனை அருகே வெடிக்காத குண்டுகள் சில கைப் பற்றப்பட்டு தேசிய பாதுகாப்பு படை வீரர்களால் அவை செயலிழக்கச் செய்யப்பட்டுள்ளன.

அடுத்த சில நிமிடங்களில் டில்லி யில் கிரேட்டார் கைலாஷ் சந்தை அருகே குண்டுகள் கண்டெடுக்கப்பட்டு, அவைகளும் செயலிழக்கச் செய்யப்பட்டுள்ளன. இதனால் டில்லியில் பதற்றம் நிலவி வருகிறது.

## 'ஜெ' மீதான சொத்து குவிப்பு வழக்கு விசாரணை நாளை நடைபெறும்




பெங்களூர், பெப்.27

தமிழக முதல்வர் ஜெயலலிதா மீதான சொத்து குவிப்பு வழக்கு விசாரணை நாளை வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

ஜெயலலிதா மீதான சொத்து குவிப்பு வழக்கை விசாரணை செய்து வரும் நீதிபதி எம்.எஸ்.பாலகிருஷ்ணா, கர்நாடக நீதித்துறை அக்டமி நடத்தி வரும் பயிற்சி முகாமில் கலந்துகொள்ள சென்றுள்ளதால் குறித்த வழக்கு சிட்டி சிவில் நீதிமன்றத்தின் 42 ஆவது சிட்டி சிவில் மற்றும் செசன்ஸ் நீதிமன்ற நீதிபதி பி.கே.நாயக் முன்னிலையில் நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தது. (வ)

## இன்று நடைபெறவிருந்த கூடங்குளம் முற்றுகைப் போராட்டம் ஒத்திவைப்பு



இடிந்தகரை, பெப்.27

கூடங்குளம் அணு உலையை மூட வலியுறுத்தி இன்று நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டிருந்த முற்றுகைப் போராட்டம் பிற்போடப்பட்டுள்ளதாகப் போராட்டக் குழுவினர் அறிவித்துள்ளனர்.

இதுதொடர்பாக அணு சக்திக்கு எதிரான மக்கள் இயக்க ஒருங்கிணைப்பாளர் எஸ்.பி.உதயகுமார் வெளியிட் டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

அணு உலை, அணுமின் நிலையம் தொடர்பாக எந்த வித தகவல்களையும் தராமலும், பேரிடர் மேலாண்மைப் பயிற்சி நடத்தப்படாமலும் மக்களைத் துச்சமாக நடத் தும் மத்திய, மாநில அரசுகளுக்கும், அணுசக்தித் துறைக்கும் எதிர்ப்பைத் தெரியப்படுத்தவும், கூடங்குளம் அணுமின் நிலையத்தை உடனடியாக மூடக் கோரியும் இன்று கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி ஆகிய மூன்று மாவட்டங்களிலும் முற்றுகைப் போராட்டம் நடத்துவது என முடிவு செய்திருந்தோம்.

ஆனால், அதே நாளில் கன்னியாகுமரி பகவதி அம்மன் கோயிலில் மகா கும்பாபிஷேகம் நடைபெற உள்ளதால் முற்றுகைப் போராட்டத்தைப் பிற்போட்டுள்ளோம்-என்றுள்ளது.(வ)

## பிரிட்டன் பிரதமரை சந்திக்கிறார் அமெ. வெளியுறவு செயலர் கெரி

வோஷிங்டன், பெப்.27

அமெரிக்க இராஜாங்க செயலாளர் ஜோன் கெரிக்கும் பிரிட்டன் பிரதமர் டேவிட் கமருனுக்கும் இடையே முக்கிய சந்திப்புக்கள் இடம்பெறவுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

லண்டனில் இடம்பெறவுள்ள அந்தச் சந்திப்பில் பிரிட்டன் வெளிவிவகாரச் செயலரும் இணைந்து கொள்ளவுள்ளார்.

புதிதாகப் பதவியேற்றுள்ள அமெரிக்க இராஜாங்க செயலாளரின் வெளிநாடுகளுக்கான பயணத்தின் ஒரு கட்டமாக பிரிட்டனுக்கான பயணம் அமைகிறது.

சிரிய விவகாரங்கள் மற்றும் பொக்லன்ட் தீவுகள் குறித்த சர்ச்சைகள் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் குறித்து அந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்படும் என்று தெரிகிறது. (ற)

# ஏவுகணைத் தாக்குதல்

## சிரியாவில் 70 குழந்தைகள் உட்பட 140 பேர் சாவு

## மனித உரிமை அமைப்பு தகவல்



பெய்ரூட், பெப்.27

சிரிய இராணுவம் அல்போ நகரில் கடந்த வார இறுதியில் மேற்கொண்ட ஏவுகணைத் தாக்குதலில் 140 பேர் உயிரிழந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. உயிரிழந்தவர்களில் 70க்கும் மேற்பட்டவர்கள் குழந்தைகள் என்றும் கூறப்படுகிறது.

அமெரிக்காவைத் தளமாகக் கொண்ட மனித உரிமை அமைப்புகளின் பிரதிநிதிகளைக் கொண்ட குழு கடந்த வாரம் அல்போ நகருக்கு பயணம் மேற்கொண்டிருந்தது. அந்தக் குழுவை மேற்கோள் காட்டியே இவ்வாறு தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

மக்கள் குடியிருப்புகள் நிறைந்த பகுதியில் ஜனாதிபதி அசாத் ஆதரவுப் படைகள் நடத்திய ஏவுகணைத் தாக்குதலில் 140 பேர் உயிரிழந்துள்ளனர். அவர்களில் 70 பேர் குழந்தைகள் என்று அறியப்படுகிறது.

குறைந்தது 4 ஏவுகணைகளாவது அந்தப் பகுதியில் வீழ்ந்துவெடித்துள்ளன. எனினும் தாக்குதல் நடத்தப்பட்ட பகுதியில் இராணுவ இலக்குகள் எதுவும் இருப்பதற்கான அறிகுறிகள் தென்படவில்லை- என்று அந்தக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

சிரியாவில் கடந்த 2 வருடங்களாக இடம்பெற்று வரும் மோதல்களில் 70 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ற)

## 'ஆர்கோ' திரைப்படத்துக்கு விருது; அரசியல் மயமாக்கப்பட்ட விடயம்

### குற்றஞ்சாட்டுகின்றது ஈரான்



தெஹ்ரான், பெப்.27

ஆர்கோ திரைப்படத்துக்கு ஒஸ்கார் விருது வழங்கப்பட்டமை அரசியல்மயமாக்கப்பட்ட விடயம் என்று ஈரான் குற்றஞ்சாட்டியுள்ளது.

ஈரானுக்கு எதிரான கருத்துக்களை ஆர்கோ திரைப்படம் கொண்டிருப்பதாலேயே அந்தத் திரைப்படத்துக்கு விருது கிடைத்துள்ளது என்றும் அது தெரிவித்துள்ளது.

இதுகுறித்து ஈரான் அரச ஊடகம் வெளியிட்டுள்ள குறிப்பில்:-

ஆர்கோ திரைப்படம் வரலாற்றை திரிபுபடுத்தியுள்ளது. அமெரிக்காவின் நோக்கிலேயே இந்தத் திரைப்படம் தயாரிக்கப்பட்டுள்ளது. அத்துடன் வரலாற்றில் முதன்முறையாக ஒஸ்கார் விருது வழங்கும் நிகழ்வில் அமெரிக்காவின் முதற்பெண்மணி மிச்செல் ஒபாமா திரையில் தோன்றி குறித்த திரைப்படம் தொடர்பான அறிவித்தலை வெளியிட்டமை அதை உறுதிப்படுத்தியுள்ளது- என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

ஈரானில் தடுத்துவைக்கப்பட்டுள்ள பணயக்கைதிகளை அடிப்படையாக வைத்தே ஆர்கோ திரைப்படம் தயாரிக்கப்பட் டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற)

## திருச்சபை குறித்து வதந்திகள்; கவலையில் வத்திக்கான்

வத்திக்கான், பெப்.27

பாப்பரசர் 16 ஆவது ஆசிர்வாதப்பர் பதவி விலகலை அறிவித்த பின்னர் கத்தோலிக்க திருச்சபை குறித்து பத்திரிகைகள் வதந்திகளைப் பரப்பி வருகின்றன என்று வத்திக்கான் கவலை வெளியிட்டுள்ளது.

இதுகுறித்து வத்திக்கான் அதிகாரி பெடரிக்கோ லொபர்டியோ கருத்துத் தெரிவிக்கும்போது:-

''பாப்பரசர் பதவி விலகுவது என்பது கடந்த 600 ஆண்டுகளாக நடக்காத ஒரு விடயம். அவரது முடிவு குறித்து ஊடகங்கள் அவதூறாக செய்திகள் வெளியிட்டு வருகின்றன. அவை திருச்சபைக்கு அதிக வருத்தத்தை ஏற்படுத்துகிறது''- என்றார்.

வத்திக்கானில் சில பாதிரியார்களது நடவடிக்கைகளில் அதிருப்தியடைந்ததால் தான் பாப்பரசர் பதவி விலகத் தீர்மானித்துள்ளார் என்றும் வத்திக்கானில் ஊழல் பெருகிவிட்டது என்றும் இத்தாலிய ஊடகங்கள் கருத்து வெளியிட்டிருந்தன. இந்த நிலையில் நாளை பாப்பரசர் தமது பதவியிலிருந்து விலகுகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (ற)

### அமெ.-இஸ்ரேல் கூட்டுத் தயாரிப்பான

# எதிர்ப்பு ஏவுகணை சோதனை வெற்றி



ஜெருசலேம், பெப்.27

இஸ்ரேலினதும் அமெரிக்காவினதும் கூட்டுத் தயாரிப்பான, ஏவுகணைகளை வானில் இடைமறித்துத் தாக்கியழிக்கும் எதிர்ப்பு ஏவுகணைச் சோதனை வெற்றிகரமாக நடத்தப்பட்டுள்ளது.

அதுகுறித்து இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில்-

மத்திய தரைக்கடல் பகுதியில் உள்ள ஏவுதளத்திலிருந்து கடந்த திங்கட்கிழமை நடத்திய ஏவுகணை சோதனை வெற்றிகரமாக அமைந்தது. அமெரிக்க மற்றும் இஸ்ரேல் ஏவுகணை நிறுவனங்களின் கூட்டு முயற்சியில் உருவான 'ஆரோ-3' என்ற இந்த ஏவுகணை, தொலைதூர ஏவுகணைத் தாக்குதல்களை முறியடிக்கும் திறன் கொண்டது.

இந்த ஏவுகணையை மேம்படுத்தும் வகையில் தொடர்ந்து பல்வேறு சோதனைகள் மேற்கொள்ளப்பட்ட பின்னர் அது செயற்பாட்டுக்கு வரும்.

மற்றைய நாடுகளின் அச்சுறுத்தல் அதிகரித்து வரும் நிலையில், இந்த ஏவுகணைச் சோதனை வெற்றி பெற்றிருப்பது எமது நாட்டின் பாதுகாப்பை உறுதி செய்ய உதவும்- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

# காஸாவில் இருந்து ரொக்கெட் தாக்குதல்

## குற்றஞ்சாட்டுகிறது இஸ்ரேல்

ஜெருசலேம், பெப்.27

காஸா பகுதியில் இருந்து தெற்கு இஸ்ரேல் நோக்கி ரொக்கெட் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று இஸ்ரேலியப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து இஸ்ரேலியப் பொலிஸ் பேச்சாளர் குறிப்பிடுகையில்-

காஸா பகுதியில் இருந்து தெற்கு இஸ்ரேலை நோக்கி நேற்று ரொக்கெட் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. வீதியில் வீழ்ந்து வெடித்த ரொக்கெட்டால் உயிரிழப்புகள் ஏதும் ஏற்படவில்லை. எனினும் வீதி மற்றும் கட்டடங்கள் சிறு சேதத்துக்கு உள்ளாகியுள்ளன.- என்று தெரிவித்தார்.

இஸ்ரேலிய சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த பலஸ்தீன இளைஞர் ஒருவர் கடந்த சில நாள்களுக்கு முன்னர் உயிரிழந்தார். அதையடுத்து, பலஸ்தீன ஆதரவாளர்கள் வெஸ்ற் பாங் நகரத்தில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தச் சூழ்நிலைகளின் பின்னணியிலேயே ரொக்கெட் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் இயக்கத்தினருக்கு இடையே கடந்த வருடம் நவம்பர் மாதம் முறுகல் நிலை ஏற்பட்டிருந்தது. அதையடுத்து இருதரப்பினரும் பரஸ்பரம் ரொக்கெட் தாக்குதல்களை மேற்கொண்டனர். அதில் நூற்றுக்கும் மேற்பட்ட பொது மக்கள் உயிரிழந்தனர். பின்னர் சர்வதேச நாடுகளின் தலையீட்டால் பேச்சு மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டது. அதன்பின்னர் நடத்தப்பட்ட முதலாவது ரொக்கெட் தாக்குதல் இது என்பது குறிப்பிடத்தக்கது. (ற)


## ஆளில்லா விமானத்தை கைப்பற்றியது ஈரான்?

தெஹ்ரான், பெப்.27

வானில் பறந்து வேவு பார்த்த ஆளில்லா விமானம் ஒன்றைத் தரையிறக்கி உள்ளதாக ஈரான் அறிவித்துள்ளது.

விமானத்தின் இயக்கத்தை மின்னணு வல்லுநர்கள் கட்டுப்படுத்தி சிர்ஜான் நகரில் உள்ள இராணுவ மையத்தில் அதை தரையிறக்கினர் என்று கூறப்படுகிறது.

எனினும் அது எந்த நாட்டு விமானம் என்பது பற்றி எதுவும் தெரிவிக்கப்படவில்லை. (ற)



*1946 ஆம் ஆண்டு ஜூலை 25 ஆம் திகதி நீருக்கு அடியில் நடத்தப்பட்ட அணுகுண்டுப் பரிசோதனையின் படங்களை வெளியிட்டுள்ளது அமெரிக்க பாதுகாப்பு அமைச்சு. கடலுக்கு அடியில் நடத்தப்பட்ட அணுகுண்டு சோதனையில் காளான் வடிவில் கடல்நீர் மேல் எழுகின்றது.*

# அமெரிக்கப் படையினர் மீதான குற்றச்சாட்டுக்கு ஆதாரமில்லை

## ஆப்கனுக்கான அமெரிக்க இராணுவத் தளபதி தெரிவிப்பு



காபூல், பெப். 27

ஆப்கனின் கிழக்கு மாகாணத்தில் ஆப்கன் குடிமக்களை அமெரிக்க சிறப்புப் படையினர் மோசமான முறையில் நடத்துகின்றனர் என்ற குற்றச்சாட்டுக்கு எந்தவிதமான ஆதாரங்களும் இல்லை என்று ஆப்கனுக்கான அமெரிக்க இராணுவத்தளபதி தெரிவித்துள்ளார்.

ஆப்கனின் கிழக்கு மாகாணங்களான வர்தாக் மற்றும் லோகர் பகுதிகளில் இருந்து அமெரிக்க சிறப்புப் படையினர் இரண்டு வார காலத்துக்குள் விலக வேண்டும் என்று ஆப்கன் ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

அங்குள்ள அமெரிக்க இராணுவத்தினர் மக்களை கடும் அழுத்தங்களுக்கு உள்ளாக்குகின்றனர் என்ற தொடர் குற்றச்சாட்டு எழுந்ததை அடுத்தே அவர் இவ்வாறு உத்தரவிட்டுள்ளார்.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவிக்கும்போதே ஆப்கனுக்கான அமெரிக்க இராணுவத் தளபதி மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிடுகையில்,

ஆப்கனில் உள்ள அமெரிக்கப் படையினர் அமைதியை நிலைநாட்டும் செயற்பாடுகளிலேயே ஈடுபட்டுள்ளனர். தீவிரவாதிகளுடனேயே போர் புரிகிறார்கள். கிழக்கு மாகாணங்களில் உள்ள பொது மக்கள் மீது அமெரிக்க இராணுவத்தினர் துன்புறுத்தல்களை மேற்கொள்கின்றனர் என்பதற்கு எந்த விதமான ஆதாரங்களும் இல்லை. குற்றச்சாட்டுகள் குறித்து அமெரிக்க இராணுவம் விசாரணைகளை மேற்கொள்ளும்.- என்று தெரிவித்துள்ளார். (ற)

# சிசுபாலனின் சிறிய புத்தி

சிசுபாலன் 'சேதி' நாட்டுக்கு மன்னன். யாதவ குலத்தைச் சார்ந்தவன். ஸ்ரீ கிருஷ்ணனுக்கு உறவினன். மிகச்சிறந்த வீரன். இருந்தபோதிலும் இவனிடம் சிறிய புத்தி ஒன்று இருந்தது.

ஸ்ரீகிருஷ்ணனை இவன் காரணமில்லாமல் நிந்தித்தான். தன்னை விரும்பாத ருக்மணியை மணமுடிக்க இவன் சூழ்ச்சிகள் செய்தான். அதனைக் கிருஷ்ணன் முறியடித்தார். இதை மனதில் வைத்துக்கொண்டு அவன் கிருஷ்ணனை நிந்தனை செய்வதை வழக்கமாகக் கொண்டிருந்தான்.

சிசுபாலனின் தாய் கிருஷ்ணனை அணுகி, ''என் பிள்ளை செய்யும் நூறு பிழைகளைப் பொறுக்க வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டாள். அதனால் சிசுபாலனின் நிந்தனைகளைக் கிருஷ்ணன் பொறுத்துக் கொண்டே வந்தார். இந்திரப்பிரஸ்தத்தில் பாண்டவர்கள் இராஜசூய யாகம் நடத்தியபோது அந்த யாகத்தில் கலந்து கொள்ள ஏனைய அரசர்களோடு சிசுபாலனும் வந்திருந்தான்.

''ஒருவருக்கு முதல் மரியாதையைச் செய்துவிட்டுத் தான் யாகத்தைத் தொடங்க வேண்டும் என்பதால் பீஷ்மர் தருமபுத்திரனைப் பார்த்து அதற்கான ஏற்பாடுகளைச் செய்'' என்றார்.

''தாங்களே முதல் மரியாதைக்குரியவரைக் கூறுங்கள்'' என்று தருமபுத்திரன் கேட்டான்.

''இந்தச் சபை ஸ்ரீகிருஷ்ணனின் வரவால்தான் சோபித்திருக்கிறது. அவருக்கே முதல் மரியாதையைச் செய்'' என்றார் பீஷ்மர்.

அதனை ஏற்றுப் பாண்டவர்கள் ஸ்ரீகிருஷ்ணனுக்கு முதல் மரியாதை செய்யத் தொடங்கினார்கள்.அதை ஏற்று மற்றைய அரசர்கள் அனைவரும் அமைதியாகவே இருந்தனர். ஆனால் 'சேதி' நாட்டு மன்னனான சிசுபாலன் அப்போது எழுந்து பலவாறு கிருஷ்ணனை நிந்திக்கத் தொடங்கினான். ''இங்கு எத்தனையோ புகழ் பெற்ற அரசர்கள் கூடியிருக்கிறார்கள். அவர்களையெல்லாம் விட்டு விட்டுக் கேவலம் இந்த இடையனுக்கு எப்படி நீ முதல் மரியாதை செய்யலாம்....?'' என்று அவன் கேட்டான்.

''தந்தை உயிருடன் இருக்கும் போது வெட்கம் இல்லாமல் இந்தக் கிருஷ்ணன் எப்படி முதல் மரியாதையை ஏற்றுக் கொள்ளலாம்...? சந்திர குலத்திற்கே திலகம் போல் பீஷ்மர் இருக்க... ஆச்சார்யார் இருக்க, மாமன்னன் துரியோதனன் இருக்க, கொடையாளி கர்ணன் இருக்க இந்தக் கிருஷ்ணன் எந்த வகையில் உயர்ந்தவன். ..?'' என்றெல்லாம் அவன் நிந்தனை செய்து கொண்டே போனான்.

அப்போது தருமபுத்திரன் அவனுக்குச் சமாதானம் கூறினார். ''பீஷ்மர் எங்கள் பாட்டனார். துரியோதனன் என் சகோதரன். இது நாங்கள் நடத்தும் யாகம். எங்களுக்கு நாங்களே முதல் மரியாதை செய்துகொள்வது முறையாகாது என்பதால்தான் ஸ்ரீகிருஷ்ணனுக்கு முதல் மரியாதை செய்தோம். அவர் எங்களுக்கு உறவினர் என்பதால் நாங்கள் இதனைச் செய்யவில்லை. தகுதியை வைத்தே செய்கிறோம்'' என்று சொன்னான்.

இதையெல்லாம் ஏற்காத சிசுபாலன் தொடர்ந்து கிருஷ்ணனை நிந்தனை செய்தான். பல அரசர்களைத் தூண்டிவிட்டுச் சபையிலிருந்து வெளியேறவும் தலைப்பட்டான். தருமபுத்திரன் திகைத்துப்போய் நின்றபோது பீஷ்மர் தருமபுத்திரரைப் பார்த்து... ''தருமபுத்திரா..! சிங்கத்தைப் பார்த்து நாய்கள் குரைப்பது போல், இந்த அரசர்கள் குலைக்கிறார்கள்.. சிசுபாலனைக் கிருஷ்ணன் கவனித்துக் கொள்வார்'' என்றார்.


சிசுபாலனின் தாய்க்குக் கொடுத்த வாக்குறுதிப்படி நூறு பிழைகளை அவர் பொறுத்துவிட்டார். ஆதலால் சிசுபாலனிடம் போர் செய்ய அவர் ஆயத்தமானார். இருவருக்கு இடையில் கடுமையான யுத்தம் நடந்தது. சிசுபாலன் சரமாரியாக அம்புகளைப் பொழிந்தான். அதனால் துன்பமடைந்த கிருஷ்ணனின் சாரதி ''பகவானே.. நான் களைத்துப் போனேன். சக்கராயுதத்தை மறந்தீரா...?'' இக் கொடியவனைக் கொல்லுங்கள் என்றான்.

ஸ்ரீகிருஷ்ணன் சுதர்சன சக்கரத்தை ஏவினார். சிசுபாலன் தலை அறுந்து விழுந்தது. ஸ்ரீகிருஷ்ணன் மீது இருந்த பொறாமையால் சிறிய புத்தியுடன் அவன் நடந்து கொண்டான். அதனால் சிசுபாலன் உயிரை இழந்தான். மதிக்கத் தகுந்த பெரியோர்களை நாம் எக்காரணம் கொண்டும் இகழுதல் கூடாது. அழிக்க வேண்டுமானால் ஒரே நொடியில் அதைச் செய்து முடிக்கும் ஆற்றல் பெரியோர்களுக்கு உண்டு.

ஆகவே எக்காரணம் கொண்டும் எவரும் தங்களது சிறிய புத்தியைப் பெரியோர்களிடம் காட்டி யமனை வலிய வரவழைத்துக் கொள்ளக்கூடாது.

இக்கதை உணர்த்தும் நீதி என்ன?

தன்னை விரும்பாத ருக்மணியை மணமுடிக்க சூழ்ச்சிகள் செய்தான் சிசுபாலன். அதைக் கிருஷ்ணன் முறியடித்தான். அந்தப் பழைய விரோதத்தை மனதில் வைத்துக்கொண்டு முதல் மரியாதையை ஏற்றுக் கொண்டிருந்த கிருஷ்ணனைச் சபையோர் முன்னிலையில் அவன் இகழ்ந்தான். அதனால் அவன் தலை அறுபட்டது. பெரியோர்களைக் காரணமின்றி இகழ்ந்தால் எவராக இருந்தாலும் ஆபத்துச் சூழும் என்பதை இக்கதை உணர்த்துகிறது.



பரமஹம்ஸ ஸ்ரீமத் பரத்வாஜ் ஸ்வாமிகள்



# 400 வருடகால பழைமை வாய்ந்த கல்வியங்காடு ஸ்ரீ பாலகதிர்காமம்



லக்ஸ்மன்

சங்கிலி மன்னன் ஆட்சி செய்த வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூரில் அதே மன்னன் வழிபட்ட சட்ட நாதர் ஆலயத்தின் மேற்குப் பகுதி வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ பாலகதிர்காமம் தேவஸ்தானம் நானூறு ஆண்டுகளுக்கு முந்தைய வரலாற்றுச் சிறப்புமிக்கதாகும்.

தியாகராஜா ஐயர் தனது நேர்த்திக் கடன்களை நிறைவேற்ற நடைபயணமாக, காட்டு வழியாக அடியார்கள் கூட்டத்துடன் கதிர்காமம் சென்றார். கதிர்காமத்தில் முருகப் பெருமானை வழிபட்டு தனது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றிய பின்னர் திரும்பவும் தனது சொந்த ஊருக்குத் திரும்பிச் செல்ல மனமின்றி கதிர்காமம் ஆலயத்தில் தங்கிவிட்டார். அதன்பின் பல வருடங்கள் கழித்து ஒரு நாள் முருகப் பெருமான் அவரது கனவில் தோன்றி 'அருள் அந்தணரே, இங்கு என் சந்நிதானத்தில் வேல் ஒன்றையும் பூசையில் வைத்து அதை எடுத்துச் சென்று உமது ஊரில் வைத்து வழிபடுவீராக' என்று கூறியருளினார். முருகப் பெருமானின் திருவுளப்படியே அந்த ஞானவேல் பொக்கிஷத்தை எடுத்து வந்து தன் வீட்டில் வைத்து ஆன்மார்க்க வழிபாடாக வழிபட்டு வந்தார் தியாகராஜா ஐயர். இது நானூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட வரலாறாகும்.இது 1630 களில் இடம் பெற்றதாகும்.

அந்த ஞானவேலைத் தனது வீட்டில் வைத்து வழிபட்டு வந்தவேளை சில காலம் கழித்து ஓர் இடத்தை ஒதுக்கி அங்கே ஒரு சிறிய கோயிலை அமைத்து ஞானவேலைப் பிரதிஷ்டை செய்து தினமும் தான் உண்ணும் உணவை நிவேதனமாக்கி வழிபட்டு வந்தார். அவரது இறுதிக் காலத்தின் பின் அவரது வழித்தோன்றல்கள் தொடர்ந்து அந்தச் சிறிய கோயிலைப் பராமரித்து வந்தனர் எனவும், தாங்கள் வழிபட்டு வந்த அந்தக் கோயிலைப் பொதுமக்களும் வழிபட வேண்டும் என்பதற்காக சிறிது சிறிதாக பொது மக்களை வழிபாட்டில் ஈர்க்கச் செய்துள்ளனர். இதையடுத்து 1978 ஆம் ஆண்டு கதிர்காமத் தலத்தில் இடம்பெறுவது போன்று முறைப்படி பூசைகளும் ஆராதனைகளும் இடம்பெறத் தொடங்கின. ஆலயமும் கதிர்காமம் போன்றே கட்டப்பட்டதுடன் உற்சவமும் கதிர்காமத்தை போன்றே இடம்பெறுகின்றது.

பரம்பரை பரம்பரையாக பூசைகளைச் செய்து வந்தவர்கள் வழியில் 1984 இற்கு முன்னர் பிரம்ம ஸ்ரீ குமாரசாமிக் குருக்கள் அர்ச்சகராக இருந்துள்ளார். 1984 இல் தற்போது ஆலய பொறுப்பாளராகவுள்ள பிரம்ம ஸ்ரீ குமாரக்குருக்கள் பூசையைத் தொடர்ந்து பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார்.

இது ஒரு சிறிய கோயிலாக இருந்தாலும், உற்சவம் சிறிய அளவிலேயே இடம் பெறுகின்ற போதிலும் யாழ். நகரின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து முருகப் பெருமானைத் தரிசிக்க மக்கள் கணிசமான அளவில் கூடுகிறார்கள். அப்போதெல்லாம் முருகப்பெருமான் வீதியுலா வருவதுடன் காவடியாட்டம் மட்டும் இடம்பெறுகின்றது.

போர் நடைபெற்ற வேளையிலும் இந்த ஆலயத்தில் இடம்பெற்று வந்த பூசைகளில் தடங்கல்கள் எது வும் இடம்பெறவில்லை. 1995 ஆம் ஆண்டில் ஏற்பட்ட இடப்பெயர்வும் அதனையடுத்த மீள் திரும்பலுக்கும் இடைப்பட்ட காலத்தில் மட்டுமே பூசைகள் இடம் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஆடிவேல் விழா உற்சவம் ஆரம்பமாகியதும், கதிர்காம முறைப் படி பதினொரு அடி உயரமுள்ள ஜரால தம்பானை வாகனத்தில் ஞானவேல் பொக்கிஷத்தை ஏற்றி சட்டநாதர் ஆலய வீதியூடாக ஊர் வலம் இடம்பெறும்.

ஆலயத்தில் மாணிக்கப் பிள்ளையார் சந்நிதானம் விபூதி மலைக் கந்தன் சந்நிதானம், வள்ளிமலை சரவணப் பொய்கையில் முருகன் அவதரித்த காட்சி, கதிரமலைக் கந்தன் சந்நிதானம் என்பன உள்ளன. இவைகள் கதிர்காமக் கந்தனை நினைவூட்டும் வகை யில் உள்ளன.

தீர்த்தத்திருவிழா தினத்தன்று காவடி, கற்பூரச் சட்டி, கரகம், குடைகொடி ஆலவட்டம் முதலிய மங்கல வாத்திய சகிதம் தமிழ்க் கலாசார முறைப்படி தீர்த்த உற்சவம் இடம்பெறுகின்றது. தீர்த்த உற்சவத்தைத் தொடர்ந்து மறுநாள் ஆடிவேல் விழா மூன்று தினங்கள் நடைபெறும்.

மூன்று தினங்கள் இடம்பெறும் ஆடிவேல் விழாவில் ஞானவேல், யானை ஐராவதத்தில் ஊர்வலமாக யாழ் நகரின் முக்கிய வீதிகள் வழியாக எடுத்துச் செல்லப்படும். இந்து கலாசார முறைப்படி காளை மாடுகளால் இழுத்துச் செல்லப்படும் ஊர்திகளில் ஐராவதம் முன் செல்ல அதைத் தொடர்ந்து நாதஸ்வரம், நவ வீரர்கள் எனத் தொடரும் ஊர்வலம் முதலில் வீரமாகாளி அம்மன் கோயிலில் தரித்து நின்று அங்கிருந்து புறப்படும். இரண்டாவது நாளில் வண்ணை நாச்சியம்மன் ஆலயத்தில் தங்கி நின்று, மறுநாள் ஆடியபாதம் வீதி வழியாக கதிர்காமக் கோயிலைச் சென்றடையும். இந்த ஊர்வலத்தில் பறைமேளம், நாதஸ்வரம், மேளம், கரகாட்டம், குதிரையாட்டம், காவடி, தீப்பந்த சிலம்பம் போன்ற தமிழர்களின் பாரம்பரிய கலை நிகழ்வுகளும் இடம்பெறுகின்றன. மூன்று நாள்கள் இடம் பெறும் ஆடிவேல் உற்சவம் சிறப்பாக நிகழ யாழ்ப்பாணம் மற்றும் கோப்பாய் பொலிசார் தமது முழு ஒத்துழைப்பையும் வழங்குவதாக ஆலயக் குரு பிரம்மஸ்ரீ குமாரக்குருக்கள் தெரிவிக்கிறார்.

பரம்பரை பரம்பரையாக பூசைகளைச் செய்து வந்தவர்கள் வழியில் 1984 இற்கு முன்னர் பிரம்ம ஸ்ரீ குமாரசாமிக் குருக்கள் அர்ச்சகராக இருந்துள்ளார். 1984 இல் தற்போது ஆலய பொறுப்பாளராக வுள்ள பிரம்ம ஸ்ரீ குமாரக்குருக்கள் பூசையைத் தொடர்ந்து கொண்டுள்ளார்.

ஆடிவேல் ஊர் வலத்தின் போது பொதுமக்கள் வீதிகள் தோறும் பூரணகும்பம் வைத்து வழிபடுவதுடன் யாழ் மக்களின் சார்பில் யாழ். மாநகர சபையும் தனது பணிமனை முன்பாக பூரண கும்பம் வைத்து விசேட வழிபாடுகளை நடத்துகின்றது.

அடுத்த ஆண்டில், முருக பக்தரான அருணகிரிநாதருக்கு ஏழு அடி உயரமுள்ள முழு உருவச் சிலை ஒன்றை ஆலயத்தில் அமைப்பதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றது. ஆலயத்தை விஸ்தரிக்கக் கூடியதாக இடவசதிகள் இல்லை.

எனினும் முருகப்பெருமான் தொடர்பான ஒவ்வொரு நிகழ்வுகளையும் அங்கே காணக் கூடியதாக உள்ளது. ஆலயத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்வதிலும், அதனைப் பராமரிப்பதிலும் ஏற்படக் கூடிய செலவினங்களை குருக்கள் தமது சொந்த நிதியூடாகவே மேற்கொள்கிறார்.

(முற்றும்)



வடமத்திய மாகாணத்தில் குறைந்த வருமானம் பெறும் 250 விவசாயிகளுக்கு நீரிறைக்கும் இயந்திரங்களை மாகாண முதலமைச்சர் எஸ்.எம்.ரஞ்சித் சமரக்கோன் வழங்கினார்.

# வலி நிவாரண மருந்துகள் அனுமதியின்றி விற்பனை

## விசாரணைகள் ஆரம்பம்

கொழும்பு,பெப்.27

வலி நிவாரண மருந்து வகைகளை அனுமதியின்றி விற்பனை செய்வது குறித்து தேசிய ஔடதங்கள் அதிகார சபை விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

இளைஞர்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் இத்தகைய மருந்து வகைகளை போதையூட்டும் மாத்திரைகளாக உட்கொள்வதற்குப் பழகியுள்ளனர் என்று அதிகாரசபையின் பணிப்பாளர் ஹேமந்த பெனரக்ம தெரிவித்தார்.

நீர்கொழும்பு பகுதியிலேயே வலி நிவாரண மாத்திரைகள் அதிகளவில் அனுமதியின்றி விற்கப்படுகின்றமை தெரியவந்துள்ளது என்றும் அவர் கூறினார்.

இவ்வாறான மருந்து வகைகளை விற்பனை செய்கின்றவர்களைக் கண்டுபிடிப்பதற்கான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று அவர் குறிப்பிட்டார்.

**நீர்கொழும்பு பகுதியிலேயே வலி நிவாரண மாத்திரைகள் அதிகளவில் அனுமதியின்றி விற்கப்படுகின்றமை தெரியவந்துள்ளது.**

வலி நிவாரண மருந்து வகைகளை விற்பதற்கான அனுமதி, மருந்து விற்பனை நிலையங்களுக்கு மாத்திரமே வழங்கப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (ச)

# மின்சார உற்பத்தியில் ஏற்படும் நட்டத்தை ஈடுசெய்ய அரசின் வருமானத்தில் செலவு

## மின்சக்தி எரிபொருள்துறை அமைச்சர் கூறுகிறார்



கொழும்பு,பெப்.27

மின்சார உற்பத்தியில் ஏற்படும் நட்டத்தை ஈடு செய்ய அரசின் வருமானத்தில் பெருமளவான தொகையைச் செலவு செய்யும் நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு மின்சக்தி எரிபொருள்துறை அமைச்சர் திருமதி பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்தார்.

நுரைச்சோலையில் அமைக்கப்பட்டுள்ள அனல் மின் நிலையத்திலிருந்து அநுராதபுரம் மாவட்டத்துக்கு மின்சாரத்தை விநியோகிக்கும் திட்டத்தின் கீழ், புத்தளம் களப்பின் ஊடாக மின்கம்பங்கள் நாட்டப்பட்டு மின் கம்பிகள் இணைக்கப்படவுள்ளன. இதன் காரணமாக மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயும் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

மின்சார உற்பத்தியில் அலகு ஒன்றினை உற்பத்தி செய்வதற்கு சுமார் 23 ரூபா 50 சதம் செலவாகின்றது. சுமார் பத்து இலட்சம் பாவனையாளர்களிடமிருந்து ஒரு அலகுக்கு 3 ரூபாவையே அறவிடுகின்றோம்.

நுரைச்சோலை அனல் மின் நிலையத்தில் இருந்து வெளிமாவட்டங்களுக்கு மின்சாரத்தைக் கொண்டு செல்வதில் புத்தளம் மீனவர்கள் காட்டும் எதிர்ப்பில் நியாயமுள்ளது. எனினும் நாம் மாற்று வழிகளைச் செய்வதற்கு முயற்சித்தோம். ஆனால் அவை சாத்தியமற்றதாகவே உள்ளன. நாம் இனங்கண்ட மாற்று வழிகள் வேறு பல பிரச்சினைகளுக்கு வழி வகுப்பதாய் உள்ளன.

எனவே நாட்டின் நலன் கருதி இந்தத் திட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டியுள்ளது. அதுதொடர்பில் விரிவாக ஆராய்ந்து மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை இனங்கண்டு, அறிக்கையை எனக்குச் சமர்ப்பித்தால் அதற்கு வேண்டிய நிதிஒதுக்கீடுகளை செய்து தர முடியும். -என்றார். (ச)

# வெளியுறவுக் கொள்கையில் திருப்தி அடைய முடியாது

## அரசு சர்வதேசத்துக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை என்கிறார் ரவி கருணாநாயக்க



கொழும்பு,பெப்.27

அரசின் வெளியுறவுக் கொள்கைகள் தொடர்பில் திருப்தி அடைய முடியாது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கூறியதாவது:-

சர்வதேச நாடுகளுடன் உறவுகளைப் பேணும்போது சில நியதிகள் மற்றும் கோட்பாடுகளைப் பின்பற்ற வேண்டும்.

சரியான கொள்கைகளைப் பின்பற்றாது சர்வதேச நாடுகளின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ள முடியாது.

சர்வதேச சமூகத்துக்கு அரசால் அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் இதுவரையில் நிறை வேற்றப்படவில்லை.

**சர்வதேச நாடுகளுடன் உறவுகளைப் பேணும்போது சில நியதிகள் மற்றும் கோட்பாடுகளைப்பின் பற்ற வேண்டும்.**

சர்வதேச அழுத்தங்களிலிருந்து மீளக்கூடிய ஆற்றல் இலங்கை அரசுக்கு இல்லை.

அரசு தேர்தல்களை முன்னிலைப்படுத்தி செயற்பட்டு வருகின்றது. அடுத்த தேர்தலை வெற்றிகொண்டு ஆட்சியை நீடிப்பதே அரசின் இலக்காக அமைந்துள்ளது.-என்றார். (ச)

# போதைப்பொருளை வாங்கிய இராணுவச் சிப்பாய் மாட்டினார்

கொழும்பு,பெப்.27

கடமை நேரத்தில் போதைப் பொருள் கொள்வனவு செய்த இராணுவச் சிப்பாய் கைது செய்யப்பட்டுள்ளார். சீருடையுடன் கடமையில் ஈடு பட்டிருந்தபோது குறித்த சிப்பாய் போதைப் பொருளைக் கொள்வனவு செய்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, கண்டிக்குச் சென்றபோது விசேட பாதுகாப்புப் பணிகளுக்காக குறித்த இராணுவச் சிப்பாய் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தார்.

கடமை நேரத்தில் அவர் கண்டி, மஹிய்யாவ பிரதேசத்தில் போதைப்பொருளைக் கொள்வனவு செய்துள்ளார்.

போதைப் பொருளை விற்பனை செய்தவரும், அதனைக் கொள்வனவு செய்த சிப்பாயும் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முன்னிலை செய்யப்பட்டபோது, சந்தேக நபர்களை இன்று புதன்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு கண்டி நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (ச)

# உலக சுகாதார ஸ்தாபனத்தின் ஆலோசனையை பின்பற்ற தவறியுள்ளது இலங்கை

கொழும்பு,பெப்.27

உலக சுகாதார ஸ்தாபனத்தின் ஆலோசனைகளை இலங்கை அரசு பின்பற்றத் தவறியுள்ளது என்று குற்றஞ் சுமத்தப்பட்டுள்ளது.

இலங்கையின் சில பகுதிகளில் காணப்படும் சிறுநீரக நோய் தொடர்பில் உலக சுகாதார ஸ்தாபனம் சில ஆலோசனைகளை வழங்கியிருந்தது. எனினும், அந்த ஆலோசனைகளை சுகாதார அமைச்சு ஏற்றுக்கொள்ளத் தவறியுள்ளது. சிறுநீரக நோயால் அநுராதபுரம், பொலனறுவை மற்றும் பதுளை மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் பரிந்துரைகளைப் பின்பற்றத் தவறிய காரணத்தால் இந்த நோய் ஏனைய பகுதிகளுக்கும் பரவக் கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளது.

இந்த நோய் இரசாயனப் பொருள்களைப் பயன்படுத்தி விவசாயம் செய்வதனால் ஏற்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

# கஞ்சா சிக்கியது

கொழும்பு,பெப்.27

தனமல்வில, இதிகொல ஆர பிரதேசத்தில் விசேட அதிரடிப் படையினரால் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

86 கிலோ கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைப்பற்றப்பட்டுள்ள கஞ்சாவின் பெறுமதி 38 இலட்சம் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ச)

# கார் வீட்டுடன் மோதியதில் பெண் சாவு


கொழும்பு,பெப்.27

கொள்ளுப்பிட்டி, கடற்கரை வீதியில் கார் ஒன்று வீதியை விட்டு விலகி வீடொன்றின் மீது மோதுண்டதில் அக்காரில் பயணித்த பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது.

# இன, மத நல்லுறவை ஏற்படுத்தும் பொறுப்பு அனைவருக்கும் உள்ளது

## ஜனாதிபதி தெரிவிப்பு



கொழும்பு,பெப்.27

இன, மத நல்லுறவை ஏற்படுத்தும் பொறுப்பு நாட்டின் சகல மக்களுக்கும் உள்ளது என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

எஹலியகொட தொகுதியில் உள்ள ஸ்ரீ ஆனந்த ராம விகாரையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட தாது கோபுரத்தைத் திறந்துவைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

மக்களிடையே இன, மத பேதமின்றி நல்லுறவை ஏற்படுத்துவதற்கு தடையாக இருந்த சகல வேற்றுமைகளையும் நாம் தூக்கியெறிந்து விட வேண்டிய வேளை இன்று உருவாகியுள்ளது.

அபிவிருத்தியால் ஏற்படும் நன்மைகள் பின்தங்கிய கிராமங்களைச் சென்றடைய வேண்டும்.

ஒவ்வொரு கிராமத்துக்கும் அரசு, குடிதண்ணீர், தொலைத்தொடர்பு வசதிகள் போன்றவற்றை ஏற்படுத்திக் கொடுத்து வருகிறது.

போர் முடிவடைந்த பின்னர் வடபகுதியில் அதிகளவு அபிவிருத்தி ஏற்பட்டுள்ளது.

கிராமப் பாடசாலைகளில் நல்ல ஆசிரியர்களோ, வசதிகளோ இல்லாவிட்டால் அந்தப் பாடசாலைகளில் இருந்து மாணவர்கள் விலகிச் செல்வதை எவரும் தடுக்கமுடியாது.

**இளம் சந்ததியினர் நற் பண்புகளைக் கடைப்பிடிக்கா விட்டால் அந்த அபிவிருத்தி எவருக்கும் பயனளிக்காது.**

நாடு எவ்வளவு தூரம் அபிவிருத்தி அடைந்தாலும் இளம் சந்ததியினர்கள் நற்பண்புகளை கடைப்பிடிக்காவிட்டால் அந்த அபிவிருத்தி எவருக்கும் பயனளிக்காது.

கிராமப்புறப் பாடசாலைகளின் வசதிகளை அதிகரித்து அங்கு நல்ல ஆசிரியர்களை நியமித்து அந்தப் பாடசாலைகளுக்கு வலுவூட்ட வேண்டும்.-என்றார். (ச)

# உயர் மனிதனை உருவாக்கும் குணங்கள்

(20)

சிந்தனையையும் கனவையும் சோம்பேறித்தனத்தின் புகலிடமாக மாற்றாதீர்கள். உற்றாருக்கு ஒரு கடிதம் எழுதுங்கள். உங்கள் மனைவிக்கு உதவியாக வீட்டு வேலை செய்யுங்கள். தோட்டத்தில் சென்று ஒரு செடியை நடுங்கள். ஏழைச் சிறுவனுக்கு, ஒரு முதியவருக்கு சிறிய உதவி செய்ய முடியுமானால் செய்து பாருங்கள்.

செயல், செயல், செயல். அது ஆக்க சக்தி படைத்தது. பயத்தைப் போக்கும் சக்தி கொண்டது. அது கொடுக்கும். நிறைவு அபாரமானது. செயல்-நீங்கள் விரும்பும் இலட்சியத்தை நோக்கி உலகின் எல்லா சக்திகளையும் ஓடவைக்கும் தன்மை கொண்டது.

தெளிவான இலட்சியம், சளைக்காத மனம், உருப்படியான செயல்-இவை மூன்றும் உங்கள் சொந்த வாழ்க்கையையும், நாட்டு வாழ்க்கையையும், நல்லபடியாக அமைக்கும்.

உங்களது லட்சியங்களுடன் இந்த மூன்று விடயங்களையும் பொருத்திப் பாருங்கள். நீங்கள் எங்கே இருக்கிறீர்கள் என்பது புரியும். நீங்கள் உயர்வதற்கு என்ன செய்ய வேண்டும் என்பது புரியும்.

**வியூகம்**

தொழிலிலும், அரசியலிலும் இன்று அதிகமாகப் பேசப்படும் ஒரு வார்த்தை strategy என்பதுதான். அது என்ன வியூகம்? வாழ்க்கைக்கு எவ்வளவு தூரம் இது அவசியம்? எத்தகைய பலனை அது அளிக்கும்?

''வச்சகுறி தப்பாது'' என்ற பழமொழியைக் கேட்டிருப்பீர்கள். இலக்கை-இலட்சியத்தை அடைய நாம் போடும் திட்டங்களின் உயர் தன்மைதான் வியூகம். ''அபிமன்யுவின் வியூகம்'' என்பதைப் பற்றி மகாபாரதத்தில் படித்திருக்கிறோம். வெற்றியடைய ஓர் அருமையான திட்டத்தை வகுக்கிறோம். அதைத்தான் வியூகம் என்கிறோம்.

தொழில் துறையில் வரவு செலவுக்கணக்கு, 'அடுத்த இரண்டாண்டுகளுக்கு எப்படி இருக்கும்?' எனத் திட்டமிடுவதை பட்ஜெட் என்கிறோம். பட்ஜெட்டிலிருந்து ஒரு மேல்படியில் உள்ள கணிப்பைத் திட்டம் என்று கூறுகிறோம். திட்டத்துக்கு ஒரு மேல்படி உயர் நிலையிலுள்ள ஒரு மனக் கணிப்பை வியூகம் என்கிறோம்.

இதைத் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டுமானால் இதன் பல்வேறு நடைமுறைப் பிரயோகங்களைக் கவனிக்க வேண்டும். அவை: அரசியல் வியூகம்; தொழில் வியூகம்; போர் வியூகம்; விளையாட்டு வியூகம்.

நம் வாழ்வே சில சமயம் தொழில் போலவும், போர் போலவும் விளையாட்டு போலவும் அரசியல் போலவும் அவ்வப்போது உரு எடுக்கிறது. ஆகவே வாழ்க்கைக்கு எல்லா வகை வியூகங்களும் தேவை. வியூகத்தின் வெவ்வேறு நிலைகளை யுக்தி என்றும், தந்திரம் என்றும், சாகசம் என்றும் அழைக்கிறோம். மிக அழகான, வலுவான வார்த்தையில் கூறவேண்டுமானால் இதனைச் சாணக்கியம் என்றும் கூறலாம். மேனாட்டு அரசியல் அறிஞர்கள் இதை 'மாக்கிய வல்லியம்' என்று இத்தாலிய நாட்டு அரசியல் அறிஞரின் பெயரால் அழைப்பதுமுண்டு.

புதுடில்லியில் சாணக்கியபுரி என்ற ஒரு நகர்ப் பகுதி இருக்கிறது. வெளிநாட்டுத் தூதுவர்கள் வசிக்கும் பகுதி அது. வெளிநாட்டுத் தூதுவர்களை ராஜதந்திரிகள் என்று பொதுப் படையாக அழைப்பதுண்டு. எவ்வளவு பெரிய சாணக்கியபுரி இருந்தாலும் டில்லித் தலைவர்கள் சாணக்கியம்-ராஜதந்திரம் என்ற ஏதுமின்றி முடிவெடுப்பதுண்டு. அதன் பலனை அனுபவிப்பதுமுண்டு.

பாகிஸ்தானின் கிழக்குப் பகுதியை பங்களாதேஷ் என்ற ஒரு தனி நாடாக்கினாரே திருமதி இந்திராகாந்தி அது அரசியல் சாணக்கியம். எந்த ஒரு வல்லரசும் வாலாட்ட முடியாதவாறு செய்து, எந்தவிதமான பயன்களையும் ஏற்றுக்கொள்ளும் துணிவுடன் இந்தியப் படைகளை அனுப்பினார் நமது முன்னாள் பிரதமர். அகதிகள், இராணுவ அடாவடித்தனம் என்றெல்லாம் நடந்தும், சில ஆண்டுகள் காத்திருந்து, உலகின் அனுதாபத்தைப் பெற்று, பாகிஸ்தானை இரு கூறாக்கியது திருமதி காந்தியின் சாணக்கியம்-அரசியல் வியூகம்.

ஓர் உணவுக் கம்பெனி ஒரு கேக் மாவை விற்பனைக்குக் கொண்டு வந்தது. கேக் மாவுடன் தண்ணீர் கலந்து ஊற்றி அடுப்பில் வைத்துச் சுட்டால் கேக் கிடைக்கும். இது நல்ல கேக்தான். எளிதான முறை; நயமான விலையும் கூட; எனினும் பெண்மணிகள் விரும்பி இந்த 'கேக் மிக்சை' வாங்கவில்லை. காரணம் கண்டுபிடித்த போது, இப்படித் தங்களுடைய சாமர்த்தியமின்றி ஓர் உணவுப் பொருள்களைத் தயார் செய்வதில் வெட்கப்பட்டார்களாம் பெண்கள். ஏதோ தாங்கள் அதில் ஈடுபடுவதான பெருமை இல்லையாம். என்ன செய்தனர் நமது கம்பனிக்காரர்? கேக் மாவில் போட்டிருந்த ஒரு மூன்று பொருள்களை (திராட்சை, சீனி, முந்திரிப்பருப்பு) எடுத்துவிட்டு, பெண்மணிகளை, கேக் தயார் செய்யும் போது இவற்றை அவர்களையே போட்டுக் கொள்ளுமாறு கூறினார். அவ்வளவு தான் பெண்கள் பெருமைப் பட்டார்கள். ஏதோ கேக்கைத் தாங்களே தங்கள் திறமையால் செய்வது போல் எண்ணிப் பெருமைப்பட்டார்கள். கேக் மாவின் விற்பனை கிடுகிடுவென்று ஏறியது.

நமது உணவுக் கம்பெனிக்காரர் செய்தது தொழில் வியூகம்.

மௌண்ட் பேட்டன் தளபதியாயிருந்த போது கூறுவாராம்; ''துருப்புக்களைச் சரியான இடத்தில் சரியான சமயத்தில் நிறுத்திவிட்டால் துப்பாக்கியைத் தூக்கவும் வேண்டுமா?'' என்று. இதுதான் போர் வியூகம்.

ஓர் இளைஞன் ஒரு கடைக்குச் சென்று காசு கொடுத்துவிட்டு அவர்கள் டெலிபோனை உபயோகித்து ஒரு நிறுவனத்தின் தலைவரைக் கூப்பிட்டான். அவரிடம் தன் படிப்பையும், திறமையையும் கூறி வேலை கேட்டான். அவர் கூறினார்; ''என்னிடம் உதவியாளராக ஒருவர் வேலை பார்க்கிறார்'' என்றார்.

***எம்.எஸ்.உதயமூர்த்தி*** (தொடரும்)

# கல்வியின் ஊடாக சிறந்த விழுமியங்களைப் பெறலாம்

## வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

சமூகத்தில் சிறந்த பண்புள்ள ஒழுக்க விழுமியங்களைப் பின்பற்ற வேண்டுமாயின் கல்வியைக் கற்று சிறந்த பெறுபேறுகளைப் பெறுதல் வேண்டும் என்று வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் தெரிவித்தார்.

யாழ்.சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய போதே சத்தியசீலன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

மேடையில் விருந்தினர்களாக அமர்ந்திருக்கும் கரவெட்டி பிரதேச செயலர் எஸ். சிவஸ்ரீ, மாந்தை மேற்கு உதவி அரச அதிபர் த.பிருந்தாகரன் மற்றும் யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை விரிவுரையாளர் எஸ்.ரமணராஜ் ஆகியோர் உட்பட பலர் இந்தப் பாடசாலையில் கல்வி கற்றே இன்று உயர் பதவிகளை வகிக்கின்றார்கள்.

இவர்களைப் போல் இந்தப் பாடசாலை மாணவ, மாணவிகளும் தமது திறமையை கல்வியின் ஊடாக நிலைநாட்டி உயர்வு பெறவேண்டும்.

யாழ்.மாவட்டத்தில் இந்தமுறை க.பொ.த.(உயர்தரம்) பரீட்சைப் பெறுபேறுகள் சிறப்பாக அமைந்துள்ளன.

இந்தப் பாடசாலை 1000 பாடசாலைத் திட்டத்தின் கீழ் இணைக்கப்பட்டுள்ளதால் ஆண்டு 01 முதல் ஆண்டு 05 வரை இங்கு கல்வி பயில முடியாத நிலை ஏற்பட்டது. பின்னர் இந்தப்பகுதி பொது மக்கள், சமூக நலன் விரும்பிகள், அதிபர், ஆசிரியர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க ஆரம்பப் பாடசாலை வேறோர் இடத்தில் ஆரம்பிக்கப்படும் வரை தொடர்ந்து இங்கு இயங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கல்வி எமது வாழ்க்கைக்கு மிக அத்தியாவசியமானதாகும். சமூகத்திற்கு நல்ல பண்புள்ள ஒழுக்க விழுமியங்களை வழங்க வேண்டுமாயின் திறமையுடன் கல்வியைக் கற்று சிறந்த பெறுபேறுகளைப் பெறுதல் வேண்டும்.

பெற்றோரை, ஆசிரியரை, முதியோரை மதிக்கத்தக்க வகையில், கல்வி அறிவுடையவர்களாக, பண்பாடு உடையவர்களாக வாழக் கற்றுக்கொள்ள வேண்டும். மாணவர்களின் கல்விச் செயற்பாட்டுக்கு பெற்றோர்கள், சமூகத்தினர் போன்றோரின் ஒத்துழைப்பும் மிகவும் அவசியமானது.- என்றார். (எ-9)



அல்வாய் வேவிலந்தை முத்துமாரி அம்மன் ஆலயத்தில் மாசி மகத்தை முன்னிட்டு கடந்த இரு வாரங்களாக நடைபெற்ற சத சண்டி யாகப் பூர்த்தியன்று, அதனை நடத்திய சிவாச்சாரியார்கள் மூவர் பட்டங்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.
''சர்வசாதக சிரோண்மணி'' என்று பட்டம் வழங்கப் பெற்ற லண்டனில் இருந்து வருகை தந்த சிவஸ்ரீ ராஜசேகரக் குருக்களையும்.
''வேதாகம போதகரத்தினம்'' என்ற பட்டம் வழங்கப்பெற்ற சிவப்பிரம்மஸ்ரீ அ.வை.சுவாமிநாத சிவாச்சாரியாரையும், சிவாகம பிரதிஷ்டா ஞானபானு என்ற பட்டம் வழங்கப்பெற்ற சிவப்பிரம்மஸ்ரீ சுரேஷ்வரக் குருக்களையும் மேலே உள்ள படங்களில் காணலாம். (படங்கள்: நிமல்சன்)

# பிறரை நன்றி பாராட்டும் தன்மை வெகுவாக வழக்கிழந்து மறைந்து செல்கிறது

## தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் விசாகரூபன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.27

சமூக மதிப்புகளில் ஒன்றாகக் கருதக்கூடிய பிறரை நன்றி பாராட்டும் தன்மை வெகுவாக வழக்கிழந்து மறைந்து செல்கிறது. இது துரதிஷ்டமானதொரு விடயம் என்று யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் கி.விசாகரூபன் தெரிவித்தார்.

**ஒரு சமயம் வத்திக்கானில் சொற்பொழிவாற்றக் கிடைத்த சந்தர்ப்பத்தில் பாரதி கூறியது போல ''தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை'' செய்துவிட்ட சந்தோசத்தை எடுத்துக் கூறியதாக பிறிதொரு இடத்திலே தனிநாயகம் அடிகளார் சுட்டிக்காட்டியிருந்தார்.**

தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டு விழா அண்மையில் நடைபெற்றது. அந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே விசாகரூபன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ்ச் சங்க இலக்குகளில் ஒன்று தமிழுக்கு தன்னலம் இன்றி பணி செய்த சான்றோரை நன்றியோடு நினைவிற் கொள்ளலாகும். இன்று தமிழ்ச் சமூகத்திலே பார்க்கும்போது சமூக மதிப்புக்களில் ஒன்றாகக் கருதக்கூடிய நன்றி பாராட்டும் தன்மை வெகுவாக வழக்கிழந்து வருகிறது.

20 ஆம் நூற்றாண்டைப் பொறுத்த வரையில் எத்தனையோ தமிழ்த் தலைவர்களைக் காலம் கண்டிருக்கிறது. ஆனால் தனிநாயகம் அடிகளைப் போல ஒரு பரந்த ஆற்றல் கொண்ட புகழ் பெற்ற ஆராய்ச்சியாளர், பேச்சாளரை நாம் பார்க்கவில்லை.

புகழ்ச்சிக்காகவோ, ஏனையவர்கள் போற்றுவதற்காகவோ, பதவியுயர்வுக்காகவோ அன்றி தமிழின் மீது கொண்ட பற்றினால் அன்பினால் தமிழ் வளர்த்தார். தமிழ் மீது காதல் கொண்டிருந்தார். தமிழர்கள் சாதாரணமானவர்களாக இருக்காது அனைத்துத் துறைகளிலும் கோலோச்ச வேண்டும் என்பது அவரது எதிர்பார்ப்பு.

தமிழின் தொன்மையை, பெருமையை பிறரும் படிக்கத்தக்க வகையிலே ஆதாரத்தோடு வெளிக்கொணர வேண்டும்.

ஒரு சமயம் வத்திக்கானில் சொற்பொழிவாற்றக் கிடைத்த சந்தர்ப்பத்தில் பாரதி கூறியது போல ''தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை'' செய்துவிட்ட சந்தோசத்தை எடுத்துக் கூறியதாக பிறிதொரு இடத்திலே தனிநாயகம் அடிகளார் சுட்டிக்காட்டியிருந்தார். தமிழின், தமிழர்களின் அத்தனை விடயங்களையும் மேல்நாட்டாருக்கு எடுத்துச் சொல்ல வேண்டும் என்று குறியாக இருந்தவர்.

1956 இல் இங்கு தனிச்சிங்களச் சட்டம் வந்தபொழுது அதற்கு எதிராக காலிமுகத்திடலில் மேற்கொள்ளப்பட்ட போராட்டத்தில் தனிநாயகம் அடிகளும் கலந்து கொண்டார். பின்னர் 1980 களில் அவசரகாலச் சட்டநிலை நடைமுறைப்படுத்தப்பட்ட போது அதற்கெதிராகவும் குரலெழுப்பியிருந்தார்.

அந்தளவுக்கு நெருக்கமான உறவைக் கொண்டிருந்தார். அதன் மூலமாக அவர் அரசியலிலும் ஈடுபட்டு அதன் மூலமாக தமிழை வளர்க்கப் பாடுபட்டிருந்தார். -என்றார். (எ-4)

# முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரிப்பு

## கட்டுக்கடங்காது போனால் தீர்க்கமான முடிவு எடுக்கவேண்டி வரலாம் என்கிறார் ஹமீட்

அம்பாறை,பெப்.27

முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரித்துள்ளன. அவை கட்டுக் கடங்காது போகுமானால் முஸ்லிம் தலைமைத்துவங்கள் தீர்க்கமான முடிவை எடுக்க வேண்டிவரலாம்.

இவ்வாறு அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் செயலர் வை.எல்.எஸ். ஹமீட் எச்சரித்துள்ளார்

அண்மைக்காலமாக முஸ்லிம்களுக்கு எதிராக தீய சக்திகளால் கட்டவிழ்த்து விடப்பட்டுவரும் அநியாயங்களைக் கண்டித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கடந்த வருடம் அநுராதபுரம் பள்ளிவாசலோடு ஆரம்பித்த தாக்குதல்கள் இன்னமும் தொடர்கின்றன.

முஸ்லிம்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கின்ற பலவிதமான துவேஷ முன்னெடுப்புகள், சதித்திட்டத்தின் அங்கங்களாகவே அரங்கேறிக் கொண்டிருக்கின்றன.

அநுராதபுரம், தம்புள்ள பள்ளிவாசல்கள் மீதான தாக்குதல்கள் மற்றும் தெஹிவளை மத்ரஸா மீதான தாக்குதல்கள் தொடர்ந்தபோதும் முஸ்லிம்களின் பொறுமை காரணமாக அது ஓர் இனக் கலவரமாக மாறவில்லை. அதனால் ஏமாற்றமடைந்த அந்தத் தீய சக்திகள் இரு சமூகங்களையும் மோத விடுவதற்குத் தேடிய ஒரு துருப்புச்சீட்டுத்தான் ஹலால் சான்றிதழ் விவகாரமாகும்.

இறைவனின் உதவியால் இன்றுவரை ஓர் இனமோதல் ஏற்படாமல் பாதுகாக்கப்பட்டிருக்கின்றது. அதற்கு நாம் இறைவனுக்கு நன்றி கூற வேண்டும். அதேநேரம் நிலைமை கட்டுக் கடங்காமல் செல்லுமாயின் முஸ்லிம் தலைமைத்துவங்கள் தீர்க்கமான முடிவுகளை எடுக்க வேண்டி வரலாம்.- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.(ச)



இளைஞர் விவகார திறன் அபிவிருத்தி அமைச்சின் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் இனங்களுக்கிடையிலான ஒற்றுமை வேலைத்திட்டத்தின் ஊர்வலம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மட்டக்களப்பில் நடைபெற்றது. இந்த ஊர்வலத்தில் இந்து, இஸ்லாமிய, கிறிஸ்தவ, பௌத்த சமயங்களைச் சேர்ந்த மதப்பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

# ஊஞ்சல் சேலை உயிரைப் பறித்தது

## 12வயதுச் சிறுமி பரிதாபமாகச் சாவு

மட்டக்களப்பு,பெப்.27

மட்டக்களப்பு மாவட்டத்தில் வீட்டில் ஊஞ்சல் கட்டி விளையாடிக்கொண்டிருந்த சிறுமி ஒருவர் அதன் சேலை கழுத்தில் இறுக்கியதால் உயிரிழந்துள்ளார்.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட விநாயகபுரம் கிராமத்தைச் சேர்ந்த பாக்கியராஜா சவுமியா (வயது 12 ) என்ற சிறுமியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் வாழைச்சேனை, விநாயகபுரம் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது.

வாழைச்சேனை இந்துக் கல்லூரியில் தரம் 7இல் கல்வி கற்றுவந்த குறித்த சிறுமி, நேற்றுமுன்தினம் பாடசாலை விடுமுறை என்பதனால், வீட்டின் வளையில் சேலை ஒன்றினைக்கட்டி ஊஞ்சல் விளையாடியுள்ளார்.

அவர் ஊஞ்சல் விளையாடிக்கொண்டிருந்தபோது, ஊஞ்சலுக்காக கட்டப்பட்டிருந்த சேலை கழுத்தில் இறுக்கியதால் அவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸாரின் விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளது.

அவர் தனியாக விளையாடிக் கொண்டிருந்தபோதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணையை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

# புதையல் தோண்டிய நால்வர் கைது

திருகோணமலை,பெப்.27

திருகோணமலை, புல்மோட்டை கிராமத்தில் புதையல் தோண்டுவதில் ஈடுபட்டதாகக் கூறப்படும் நான்கு சந்தேகநபர்களை குச்சவெளி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொதுமக்கள் வழங்கிய தகவலைத் தொடர்ந்து குறித்த பகுதிக்கு விரைந்த பொலிஸ் குழுவினர், சந்தேகநபர்களை கைது செய்ததுடன், அவர்கள் வைத்திருந்த உபகரணங்களையும் கைப்பற்றியுள்ளனர்.

சந்தேகநபர்களை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகப் பொலிஸார் கூறினர்.

# கல்முனைக்குடி பள்ளிவாசல் வீதி 39 மில்.ரூபா செலவில் புனரமைப்பு

## இன்று அங்குரார்ப்பண வைபவம்

கல்முனை,பெப்.27

கல்முனைக்குடி கடற்கரைப் பள்ளிவாசல் வீதி 39 மில்லியன் ரூபா செலவில் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது.

இதற்கான அங்குரார்ப்பண வைபவம் இன்று புதன்கிழமை மாலை 4 மணிக்கு கல்முனைக்குடி கடற்கரைப் பள்ளிவாசல் வீதியில் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஆரிப் சம்சுடீன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தநிகழ்வில் கிழக்கு மாகாண சபை அமைச்சரவைப் பேச்சாளர் எம்.எஸ். உதுமாலெவ்வை பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

இந்த வீதி அரசியல் தலையீடுகள் காரணமாக கடந்த ஒரு தசாப்த காலத்துக்கும் மேலாக புனரமைப்புச் செய்யப்படாமல், குன்றும் குழியுமாகக் காணப்பட்டது.

அதனால் இந்த வீதியைப் போக்குவரத்துக்காகப் பயன்படுத்தும் மக்கள் சிரமத்தை எதிர்நோக்கியுள்ளனர்.

கடற்கரைப் பள்ளிவாசல் கொடியேற்ற விழாக் காலங்களின்போது இந்த வீதியினூடாக நாட்டின் பல பிரதேசங்களிலிருந்தும் வரும் ஆயிரக்கணக்கான பொது மக்கள் அசௌகரியத்துடனேயே பயணித்து வருகின்றனர்.

இந்நிலையில் கல்முனைக்குடி, கடற்கரைப் பள்ளிவாசல் வீதி கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சர் எம்.எஸ் உதுமாலெவ்வையின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 11ஆம் திகதி கடற்கரைப் பள்ளிவாசல் கொடியேற்ற விழா ஆரம்பிக்கவுள்ள நிலையில், அதற்கு முன்னர் குறித்த வீதியை அபிவிருத்தி செய்து முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் அதிகாரியொருவர் குறிப்பிட்டார்.(ச)

# திடீரென தீப்பற்றியது வான்



நுவரெலியா,பெப்.27

கினிகத்தேனை பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை வான் ஒன்று திடீரென தீப்பற்றி எரிந்துள்ளது.

இந்த வான் இரத்மலானையிலிருந்து சிவனொளிபாதமலைக்கு யாத்திரிகர்களை ஏற்றி வந்துள்ளது. பின்னர் அங்கிருந்து குறித்த வான் திரும்புகையிலேயே தீப்பிடித்துள்ளது என்று கினிகத்தேனை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக கினிகத்தேனை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(ச)

### பொதுத்துவில் அல் அக்ஷாவுக்கு நேற்று

# மாணவர்கள் செல்லாததால் வெறிச்சோடியது பாடசாலை

மட்டக்களப்பு,பெப்.27

மாணவர்கள் பாடசாலைக்குச் சமுகமளிக்காமையால் நேற்றுச் செவ்வாய்க்கிழமை பொத்துவில்,சின்ன உல்லை அல் அக்ஷா வித்தியாலயம் வெறிச்சோடியது.

தமது பாடசாலையிலிருந்து இடமாற்றப்பட்ட 15 ஆசிரியர்களுக்கான வெற்றிடங்களை உடனடியாக நிரப்புமாறுகோரி பெற்றோர்கள் கடந்த வியாழக்கிழமை கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை மேற்கொண்டனர்.

அத்தோடு தமது கோரிக்கை நிறைவேற்றப்படும் வரை பாடசாலைக்குப் பிள்ளைகளை அனுப்புவதில்லை என்றும் அவர்கள் முடிவு செய்துள்ளனர்.

பெற்றோர்களின் தீர்மானத்துக்கமைய அல் அக்ஷா வித்தியாலயத்துக்கு கடந்த வெள்ளிக்கிழமை முதல் மாணவர்கள் எவரும் சமுகமளிக்கவில்லை. எனினும் வழமைபோல் அதிபர் மற்றும் ஆசிரியர்கள் பாடசாலைக்கு வருகை தந்திருந்தனர்.

**எனினும் வழமை போல் அதிபர் மற்றும் ஆசிரியர்கள் பாடசாலைக்கு வருகை தந்திருந் தனர்.**

இதேவேளை, நேற்று செவ்வாய்க்கிழமை அறுகம்பை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் புலானாய்வுப் பிரிவினர் பாடசாலை அதிபரைச் சந்தித்து, மாணவர்கள் சமுகமளிக்காமைக்கான காரணங்களை கேட்டறிந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

(ச)

# தமிழர் இருப்பை தக்கவைக்க கல்வியில் முன்னேற வேண்டும்

## மட்டக்களப்பில் கல்விக்கான அனைத்து வளங்களும் உள்ளன என்கிறார் கருணா

மட்டக்களப்பு,பெப்.27

தமிழர்கள் தமது இருப்பைத் தக்க வைத்துக்கொள்ள கல்வியிலும், பொருளாதாரத்திலும் அபிவிருத்தி அடைய வேண்டும். இழந்தவற்றை மனதில் கொண்டு எதிர் காலத்தில் வெற்றி நடை போட வேண்டியவர்களாக நாம் மாற வேண்டும்.

இவ்வாறு மீள்குடியேற்ற பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு சிவானந்தா தேசிய பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டியில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மாணவர்கள் பெற்றோரின் கனவை நிறைவேற்றுபவர்களாக இருக்க வேண்டும்.

நாங்கள் தற்போது ஒரு சுதந்திரமான சூழலில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். மாணவர்கள் ஆசிரியர்களை மதித்து நடக்கும் பண்பு குறைவடைந்து வருகின்றது.

மாணவர்கள் ஆசிரியர்களை மதிக்கின்றபோதுதான் அவர்கள் சமூகத்தில் சிறந்தவர்களாக ஒருவராக உருவாக முடியும்.

இந்தப் பாடசாலை 1925ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. அந்தக் காலகட்டத்தில் ஆங்கிலம் கற்கக் கூடிய ஒரேயொரு பாடசாலையாக இந்தப் பாடசாலை விளங்கியது. படுவான்கரைப் பிரதேசத்தில் பல கல்விமான்களை உருவாக்கிய பெருமை இந்தப் பாடசாலைக்கு உண்டு.

எனவே மாணவர்கள் தேவையற்ற விடயங்களை தவிர்த்து மனதை ஒரு



நிலைப்படுத்தி கல்வியில் கவனம் செலுத்தி சாதனைகளைப் படைக்க வேண்டும்.

மட்டக்களப்பில் கிழக்குப் பல்கலைக்கழகம், திறந்த பல் கலைக்கழகம், தொழிற் பயிற்சி மையம், தொழில் நுட்பக் கல்லூரி போன்ற கல்விக்கான அனைத்து வளங்களும் காணப்படுகின்றன- என்றார். (ச)

# வவுணதீவில் விழிப்புணர்வு வேலைத் திட்டம்

மட்டக்களப்பு,பெப்.27

மட்டக்களப்பு, வவுணதீவு பிரதேச சபையின் ஏற்பாட்டில் பிரதேச சம்மேளன அங்கத்தவர்களுக்கான விழிப்புணர்வு வேலைத் திட்டம் இடம்பெற்றது.

நாட்டில் நல்லாட்சியை உருவாக்கும் நோக்கில் அனைத்து மாவட்டங்களிலும் பிரதேச மட்டத்தில் விழிப்புணர்வு வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்த நிகழ்வில் மெய்யறிவு, பொருளாதாரம், அதிகாரம் போன்ற தலைப்புக்களில் விரிவுரைகள் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் சர்வோதய இயக்கத்தின் கிழக்கு மாகாண இணைப் பாளர் கரீம் மற்றும் மதத் தலைவர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ச)

தருவது
வித்தியா

# இன்றைய நாள்

## உங்களுக்கு எப்படி?

**மேடம்:** ஆரவாரமின்றி சில வேலைகளை முடிப்பீர்கள். வெளியூர் பயணங்களால் ஆதாயம் உண்டு. வியாபார ரீதியாக முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். தன்னம்பிக்கை துளிர்விடும். அரச வேலைகளில் இருந்து வந்த தடைகள் நீங்கும்.

**இடபம்:** மனக்குழப்பங்கள் நீங்கும். நம்பிக்கைக்குரியவர்களின் ஆதரவு கிட்டும். பணவரவு திருப்திகரமாக இருக்கும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். கோபம் குறையும். வெளியூர் பயணங்கள் மகிழ்ச்சி தரும்.

**மிதுனம்:** அதிரடியாகச் செயற்பட்டு சில காரியங்களை விரைந்து முடிப்பீர்கள். பணவரவு உண்டு. வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். அரசாங்கக் காரியங்களில் வெற்றியுண்டு. மாணவர்களின் சிந்தனைத்திறன் அதிகரிக்கும்.

**கடகம்:** நீண்ட நாள்களாக முடியாமல் இழுபறிப்பட்டு காரியங்களெல்லாம் இனிமேல் முடிவுக்கு வரும். அரச வேலைகளில் அனுகூலமான நிலை காணப்படும். வெளிவட்டாரத்தொடர்பு அதிகரிக்கும். பயணங்கள் மகிழ்ச்சி தரும்.

**சிங்கம்:** தெளிவான முடிவுகள் எடுக்க முடியாமல் திணறுவீர்கள். அயலில் இருப்பவர்களை அனுசரித்துப் போங்கள். உங்கள் மீது சிலர் வீண் பழி சுமத்துவார்கள். யாரையும் தூக்கி எறிந்து பேசாதீர்கள். சிறுசிறு ஏமாற்றங்கள் வரக்கூடும்.

**கன்னி:** எதிர்பார்த்த காரியங்கள் தாமதமாக முடியும். குடும்பத்தில் விட்டுக் கொடுத்துப்போவது நல்லது. யாருக்காகவும் சாட்சிக் கையெழுத்திட வேண்டாம். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் சங்கடங்கள் வரும்.

**நாளை**

மாசி- 16 வியாழக்கிழமை 28.02.2013
திதி: திருதியை பி.இ. 12.39 வரை
நட்சத்திரம்: அத்தம் பி.இ. 02.25 வரை
சுபநேரம்: 07.58- 09.28 வரை
இராகுகாலம்: 01.58- 03.28 வரை

**துலாம்:** மன உளைச்சல் நீங்கும். கலகலப்பாக சிரித்துப்பேசும் சூழல் அமையும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். நட்பு வட்டம் விரிவடையும். ஆடம்பரச் செலவுகளைக் குறைப்பீர்கள். முன்கோபம் விலகும்.

**விருச்சிகம்:** வியாபார ரீதியாக முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். குடும்பத்தினரின் எண்ணங்களைப் பூர்த்தி செய்வீர்கள். நண்பர்கள், உறவினர்களின் உதவி கிட்டும். மனக் குழப்பங்கள் நீங்கும். சகோதரவகையில் மகிழ்ச்சியுண்டு. அயல் வீட்டாரின் ஆதரவு அதிகரிக்கும்.

**தனுசு:** சோர்வு, அலைச்சல் நீங்கி ஆனந்தமாகக் காணப்படுவீர்கள். பணம் தேவையான அளவு இருக்கும். பழைய நண்பர்களைச் சந்திப்பீர்கள். அரசியல் வாதிகளின் ஆதரவு கிடைக்கும். உறவினர்களால் பாராட்டப்படுவீர்கள்.

**மகரம்:** உணர்ச்சிவசப்படாமல் அறிவுபூர்வமாக முடிவெடுக்கப்பாருங்கள். அவசரப்பட்டு அடுத்தவர்களை விமர்சிக்க வேண்டாம். சிலரின் தவறான செயல்களை எண்ணி வருந்துவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளால் அலைக்கழிக்கப்படுவீர்கள்.

**கும்பம்:** நீண்ட நாள் எண்ணங்கள் பூர்த்தியாக முயற்சிப்பீர்கள். பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். உத்தியோகத்தில் மன உளைச்சல் நீங்கும். பணிகளை விரைந்து முடிப்பீர்கள். பெற்றோரின் ஆதரவு உண்டு.

**மீனம்:** மன உறுதியுடன் செயற்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். உறவினர்கள், நண்பர்களின் வருகையால் மகிழ்ச்சியுண்டு. வேலையாள்களின் ஆதரவு கிடைக்கும். மாணவர்கள் உற்சாகத்துடன் காணப்படுவார்கள்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | | 8 | 3 | 4 | 7 | | 1 | |
| | | | 8 | | | | | 7 |
| 3 | | 5 | | 9 | 6 | | 4 | |
| | | | 5 | 1 | | 7 | | 4 |
| | | | 6 | | 2 | | | |
| 5 | | 7 | | 8 | 4 | | | |
| | 9 | | 4 | 3 | | 8 | | 2 |
| 1 | | | | | 8 | | | |
| | 4 | | 7 | 5 | 9 | 3 | | 1 |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 8 | 6 | 1 | 3 | 5 | 2 | 4 | 7 |
| 4 | 3 | 2 | 7 | 9 | 6 | 8 | 1 | 5 |
| 1 | 7 | 5 | 2 | 4 | 8 | 9 | 6 | 3 |
| 7 | 9 | 4 | 6 | 5 | 3 | 1 | 8 | 2 |
| 5 | 6 | 3 | 8 | 2 | 1 | 7 | 9 | 4 |
| 8 | 2 | 1 | 4 | 7 | 9 | 5 | 3 | 6 |
| 2 | 5 | 8 | 9 | 6 | 4 | 3 | 7 | 1 |
| 6 | 1 | 7 | 3 | 8 | 2 | 4 | 5 | 9 |
| 3 | 4 | 9 | 5 | 1 | 7 | 6 | 2 | 8 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1—9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1—9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1—9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப் படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# வீட்டுக்குள் நுழைந்த திருடர் கத்தி முனையில் கொள்ளை

## சாவகச்சேரியில் நேற்றுமுன்தினம் இரவு சம்பவம்

தென்மராட்சி,பெப்.27

குடும்பப் பெண்ணொருவர், தமது குழந்தைகளுடன் கணவரின் வரவை எதிர்பார்த்திருந்த வேளை யில் வீட்டினுள் நுழைந்த 10 பேர் அடங்கிய குழுவினர் பெண்ணின் கழுத்தில் கத்தியை வைத்துப் பயமுறுத்தி அவர் அணிந்திருந்த நகைகளையும், அங்கிருந்த பொருள் களையும் அபகரித்துச் சென் றுள்ளனர். இந்தச் சம்பவம் நேற்று முன் தினம் இரவு சாவகச்சேரி நுணாவில் மத்தி வேலாயுதம் வீதியில் இடம்பெற்றது.

சந்தை வியாபாரியான கணவர் பொருள்களை வாகனத்தில் தென்னிலங்கைக்கு அனுப்பிவிட்டு வீட்டுக்குச் செல்வதற்குத் தாமதமாகியது. அந்தச் சம்பவத்திலேயே தாமதமாகிய வேளையில் 10 பேர் அடங்கிய குழுவினர் வீட்டுக் குச் சென்றனர். அங்கிருந்த பெண்ணை சத்தம் போட வேண்டாம் என்று கத்தியைக் கழுத்தில் வைத்துப் பயமுறுத்தி அவர் அணிந்திருந்த நகைகள் மற்றும் கையடக்கத் தொலைபேசி, மோட்டார் சைக்கிள் உட்பட பல பெறுமதிமிக்க பொருள்களை அபகரித்துச் சென்றுள்ளார்கள். இந்தச் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.(வ-9)

# அளவெட்டி வைத்தியசாலையில் கடந்த வருடத்தில் 32 ஆயிரம் பேருக்கு சிகிச்சை

**கடந்த வருடம் வெளிநோயாளர் பிரிவு உட்பட கிளினிக் பிரிவுகளிலும் 32 ஆயிரத்து 693 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர்.**

யாழ்ப்பாணம்,பெப்.27

அளவெட்டிப் பிரதேச வைத்தியசாலையில் கடந்த வருடம் 32 ஆயிரத்து 693 பேர் பல்வேறு நோய்களுக்காக சிகிச்சை பெற்றுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தகவல் தெரிவித்துள்ளன.

மேற்படி வைத்தியசாலையில் கடந்த வருடம் வெளிநோயாளர் பிரிவு உட்பட கிளினிக் பிரிவுகளிலும் 32 ஆயிரத்து 693 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர்.

சிகிச்சை பெற்றவர்களில் வெளி நோயாளர் பிரிவில் 29 ஆயிரத்து 240 பேரும், கிளினிக் பிரிவில் 2 ஆயிரத்து 866 பேரும் , கர்ப்பவதிகள் கிளினிக் பிரிவில் 487 பேரும் சிகிச்சை பெற்று ள்ளனர்.

வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்றவர்களில் காய்ச்சலால் பீடிக்கப்பட்ட 3 ஆயிரத்து 308 பேர் சிகிச்சை பெற்றிருப்பதுடன் நாய்க்கடிக்கு இலக் கான 89 பேரும் சிகிச்சை பெற்று ள்ளனர்.

இதனை விட தடிமன், இருமல் உட் பட குழந்தைகளுக்கு ஏற்படக் கூடிய நோய்கள், தொற்று நோய்கள் போன்ற வற்றால் பீடிக்கப் பட்டவர்களும் சிகிச்சை பெற்றுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-14,36)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

**காணி விற்பனைக்கு**

பலாலி வீதி, கோண்டாவில் சந்தியில் இருந்து 200m தூரத்தில் 2ஆவது காணியாக உள்ள 10 பரப்பு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:-0775086894 (33844)(3.6.7)

## மக்கள் வங்கி அறிவித்தல்

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளிலும் சேவை நிலையங்களிலும் 31.12.2011 வரையும் அடகு வைத்து (மீட்புக் காலம் ஒரு வருடத்திற்கானது) மீட்கப்படாத நகைகளும், 30.06.2012 வரையும் அடகு வைத்து (மீட்புக்காலம் ஆறு மாதத்துக்கானது) மீட்கப்படாத நகைகளும் - 16.03.2013, 17.03.2013 ஆகிய தினங்களில் காலை 8.30 மணிக்கு மக்கள் வங்கி யாழ். பிராந்திய தலைமையகத்தில் வைத்துப் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| கிளைகள் | சேவை நிலையம் |
|---|---|
| யாழ். ஸ்ரான்லி வீதி | நாவலர் வீதி |
| | மானிப்பாய் |
| காங்கேசன்துறை | மல்லாகம் |
| யாழ். பிரதான வீதி | உரும்பிராய் |
| ஊர்காவற்றுறை | - |
| நெல்லியடி | - |
| அச்சுவேலி | புத்தூர் |
| சங்கானை | பண்டத்தரிப்பு |
| சுன்னாகம் | கோப்பாய் |
| | அளவெட்டி |
| சாவகச்சேரி | கொடிகாமம் |
| வல்வெட்டித்துறை | உடுப்பிட்டி |
| யாழ். பல்கலைக்கழகம் | திருநெல்வேலி |
| | கல்வியங்காடு |
| யாழ். கன்னாதிட்டி | இணுவில் |
| பருத்தித்துறை | புலோலி |

அறிவித்தலின்றி திகதியை ஒத்திப் போடுவதற்கும் ஏலம் விடப்படும் இடத்தை மாற்றுவதற்கும் வங்கிக்கு உரிமை உள்ளது.

பிராந்திய முகாமையாளர்,
மக்கள் வங்கி, பிராந்திய தலைமையகம்,
கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
(சி/6687)
(2-6-7)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்
**கந்தையா சொர்ணலிங்கம்**
(M.K.S)

தோற்றம்
23.10.1927

மறைவு
28.01.2013

கடந்த 28.01.2013 திங்கட்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் மறைவுச்செய்தி அறிந்து ஓடோடி வந்து உதவிகள், ஒத்தாசைகள் புரிந்த அஞ்சலிகள் தெரிவித்த உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைத்து அன்பு நெஞ்சங்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகளைத்தெரிவித்துக் கொள்வதோடு, இன்று (27.02.2013) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

439, இராமலிங்கம் வீதி,
திருநெல்வேலி கிழக்கு, திருநெல்வேலி.

குடும்பத்தினர்.




பெரும்பாலும் மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்

# பெண்கள், சிறுவர் மீதான வன்முறைகளில் வெளியே வருபவை 50 வீதம் மட்டுமே

## ஏனையவை மறைக்கப்பட்டு விடுகின்றன என்கிறார் பெண்கள் உரிமை ஆலோசகர்

யாழ்ப்பாணம், பெப்.27

பெண்கள், சிறுவர்கள் மீது இடம்பெறுகின்ற வன்முறைச் சம்பவங்களில் 50 வீதமானவையே வெளியில் வருகின்றன.

ஏனைய வன்முறைச் சம்பவங்கள் மறைக்கப்படுகின்றன என்று பெண்கள் உரிமை மற்றும் பால்நிலை தொடர்பு ஆலோசகர் எஸ். காயத்திரி தெரிவித்தார்.

சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சின் இலங்கைப் பெண்கள் பணியகத்தின் ஏற்பாட்டில் வட மாகாணத்தில் பெண்கள் மற்றும் சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாத்தல் தொடர்பான கலந்துரையாடல் கடந்த 21 ஆம் திகதி யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் ''பெண்கள், சிறுவர் தொடர்பான பாதுகாப்பு'' எனும் தலைப்பில் கருத்துரை நிகழ்த்தும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சமூகத்தின் மத்தியில் ஏற்றத் தாழ்வு, மதிப்பு, பாகுபாடு போன்றவற்றை ஆராயத் தொடங்கும் போதே பெண்களுக்கும் உரிமைகள் தேவை எனும் நிலை உருவானது. இதனை விட சமூகத்தில் ஆண், பெண் வேறுபாடு காணப்பட்டபோது பால்நிலை எனும் கோட்பாடு கொண்டு வரப்பட்டது.

நாம் முன்னேற்றகரமான பாதைக்குச் செல்லவேண்டும் என்றால் சமூகத்தில் ஆண், பெண் ரீதியான வளர்ச்சி காணவேண்டும். குறிப்பாக பெண்கள் அபிவிருத்தி கட்டாயம் இருத்தல் வேண்டும். சமத்துவ ரீதியில் பெண்கள் அபிவிருத்தி காண வேண்டும்.

யாழ்ப்பாண சமூகத்தில் பெண்கள், சிறுவர்கள் உரிமைகள் மதிக்கப்படுகின்றனவா? பாரபட்சமான சமூகம் உள்ளதா? என்ற கேள்வி உள்ளது.

பெண்கள் மற்றும் சிறுவர்கள் தொடர்பாக இடம்பெறும் வன்முறைச் சம்பவங்கள் 50 வீதமானவையே ஊடகங்களில் வாயிலாக வெளிப்படுத்தப்படுகின்றன.

வன்முறைகள் ஊடகங்களில் வெளிப்படுத்தப்படுவது மிகக் குறைவு. குறிப்பாக வீட்டு வன்முறைகள் வெளிப்படுத்தப்படுவதில்லை. இதனை அடையாளப்படுத்த ஆண்களும், பெண்களும் இணைந்த பரிணாம வளர்ச்சி, ஆதிக்க முறைமை உருவாகக் காரணமாக உள்ளது. அதேசமயம் கௌரவத்தைக் காரணம் காட்டி வன்முறைகள் மறைக்கப்படுகின்றன.

வன்முறைகள் இடம்பெற்றால் அதனை உரிய துறை சார்ந்த அதிகாரிகள் ஊடாக வெளிப்படுத்தவேண்டும். உரிமைகளை மதிக்கப் பழக வேண்டும். சமூகம் அதற்கு முன்மாதிரியாக செயற்பட வேண்டும்-என்றார். (3-14)

## கண்கொள்ளாக் காட்சியானது இன்பருட்டித் தீர்த்தக்கரை

வடமராட்சி, பெப்.27

மாசி மகத்தை ஒட்டி இன்பருட்டி சமுத்திரத் தீர்த்தக் கரையில் மூன்றுக்கு மேற்பட்ட கோயில்களில் இருந்து சுவாமிகள் எழுந்தருளி பக்தர்கள் புடை சூழ தீர்த்தமாடியமை கண்கொள்ளாக் காட்சியாக அமைந்திருந்தது. அல்வாய் வேவிலந்தை முத்துமாரி அம்மன் கோயில், தம்பசிட்டி பண்டாரி அம்மன் கோயில், வியாபாரிமூலை தெணியம்மன் கோயில் ஆகிய கோயில்களிலிருந்து சுவாமிகள் எழுந்தருளி இன்பருட்டி சமுத்திரத்தில் தீர்த்தமாடியமை பக்தர்களை பரவசப்படுத்தியது. (3-8)

## கலந்துரையாடல்

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு விசேட கலந்துரையாடல் ஒன்று நாளை வியாழக்கிழமை யாழ். பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. கலந்துரையாடலை யாழ்ப்பாண பிரதேச கிராம மாதர் அபிவிருத்திச் சங்கங்களின் சமாசத்தினர் ஒழுங்கமைப்புச் செய்துள்ளனர்.

இதில் அனைத்து மாதர் அபிவிருத்திச் சங்கத்தினரையும் கலந்து கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (3)

# மெய்வன்மைப் போட்டிகள்

அளவெட்டி, பெப்.27

அளவெட்டி தெற்கு அருணாசலம் வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அதிபர் கு.ஜெகநாதன் தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடை பெறும்.

நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வலிகாமவலய, வலயக் கல்விப் பணிப்பாளர் செ.சந்திரராசாவும், சிறப்பு விருந்தினராக தெல்லிப்பழை கோட்டக் கல்விப் பணிப்பாளர் சு.சண்முககுலகுமாரனும், கௌரவ விருந்தினர்களாக ஓய்வு நிலை மாகாண பொது நிர்வாகப் பிரிவின் நிர்வாக உத்தியோகத்தர் ப.இராஜகோபாலனும் கலந்து கொள்வர். (3-36)

★ ★ ★

தென்மராட்சி, பெப்.27

சாவகச்சேரி கல்வயல் சண்முகானந்தா வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் இடம்பெறும்.

அதிபர் இ.இரவீந்திரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் சில்வேஸ் திரி அலென்ரினும், சிறப்பு விருந்தினராக வித்தியாலய பழைய மாணவன் கந்தசாமி கமலேந்திரனும் கலந்து கொள்வர். (3-9)

★ ★ ★

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியின் இல்ல மெய்வன்மைப்போட்டி இன்று பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் இடம் பெறும்.

பாடசாலை அதிபர் செ.பத்மநாதன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்ப்பாண வலயக் கல்வி அலுவலக பிரதிக் கல்விப் பணிப்பாளர் கோ.வரதராஜமூர்த்தியும், சிறப்பு விருந்தினராக கோப்பாய் ஆசிரியகலாசாலை விரிவுரையாளர் பொ.சற்குணநாதனும், கௌரவ விருந்தினராக தொழிலதிபர் வ.துரைராஜசிங்கமும் கலந்துகொள்வர். (3)

## "காலமே எமக்கு கற்றுத் தரும் நல்ல ஆசான்"

காலத்தே பயிர் செய்ய வேண்டும் என்பார்கள், காலத்தே கற்றுயர் என்பதும் முதுமொழியாகும். விதைப்பதற்கு, அறுப்பதற்கு, கட்டுவதற்கு, இடிப்பதற்கு, சேர்ப்பதற்கு, இழப்பதற்கு காலம் கனிந்தே தீரும். எனவே எமக்குக் கிடைக்கும் வாய்ப்புகளை, சந்தர்ப்பங்களைச் சரியான முறையிலே நாம் பயன்படுத்தினால் வெற்றியை அடைந்து கொள்ளலாம், என்பது காலம் எமக்கு கற்றுத் தரும் பாடமாகும்.

ஆன்மிக வாழ்விலும் எமக்கு இறைவன் பல காலங்களையும், சந்தர்ப்பங்களையும் தந்து கொண்டே இருக்கின்றார். அவற்றை இனம் கண்டு பயன்படுத்திக் கொள்ளும் போது இறைவனின் அருளும் ஆசீர்வாதங்களும் எம் மீதும் எமது குடும்பங்கள் மீதும் பொழியப்படும். இயேசு எம்மோடு இருக்கும் போது நாம் நோன்பு இருக்கவேண்டிய அவசியமில்லை. நாம் அவரைவிட்டுப் பிரிந்து இருக்கும்போது தான் நோன்பு இருக்கவேண்டும். காரணம் இறை அருளை பெறுவதற்காக, இதனையே இயேசு தம் சீடர்களுக்கும் கூறினார். நோன்பு என்பது இறைவனின் பார்வை எம் பக்கமாகத் திரும்ப வேண்டும் என்பதற்காக நாம் செய்யும் பரிகாரச் செயலாகும். இறைவனுக்கு எதிராகக் குற்றம் செய்து இறை அருளைப் பெற்றுக் கொள்ளமுடியாமல், மனமாற்றமடையாமல் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். திருச்சபையானது எம்மை இறைவனை நோக்கித் திரும்பும்படி இத்தவக்காலத்தை அளித்திருக்கின்றது.




''ஆடையற்றவர், பசித்தவர், இல்லிடமற்றவர் இவர்களுக்கு செய்யும் உதவியே உண்மை நோன்பு என்று இறைவன் ஏசாயா 58:7 மூலம் எமக்குக் கூறுகின்றார். அடுத்தவர்க்கு செய்யும் உதவிதான் இறைவனுக்குச் செய்யும் உதவியாகும். இதையே இயேசுவும் ''சின்னஞ் சிறியவர்களுக்குச் செய்ததெல்லாம் எனக்கே செய்தீர்கள் என்று கூறுகின்றார். தவக்காலத்திலே உண்மையான உண்ணாநோன்பிருந்து இறையருளை மன்றாடுவோம். உலகத்தின் பாவங்கள், அக்கிரமங்களைப் பார்க்கும் இறைவன் தண்டனைத் தீர்ப்பை வழங்காது இரக்கம் பொழிய வேண்டும், மன்னிக்க வேண்டும் என்று குடும்பங்களாக, பங்காக இணைந்து ஒரு மனப்பட்டவர்களாக இறை இரக்கத்தை வேண்டும் ஏற்புடைய காலமான தவக்காலத்திலே மன வைராக்கியங்களைக் கைவிட்டு மன்னித்து, மறந்து ஒப்புரவாகி, விண்ணக வாழ்வுப் பயணத்துக்கு எம்மை தகுதி உடையவர்களாக மாற்றுவோம்.

-அன்ரனிபீற்றர், ஆசிரிய ஆலோசகர்

# ஞாயிறன்று கடைகளை மூடி ஒத்துழைக்குமாறு அறிவுறுத்தல்

## சாவகச்சேரி வணிகர் மன்றம் விடுத்தது

தென்மராட்சி, பெப்.27

அத்தியாவசிய வணிகம் தவிர்ந்த ஏனைய வணிக நிலையங்கள் ஞாயிற்றுக் கிழமைகளில் மூடப்பட வேண்டுமென வணிகர் மன்றத்தினர் அறிவித்துள்ளனர்.

சாவகச்சேரி கைத் தொழில் வணிகர் மன்ற எல்லைக்குட்பட்ட பகுதியில் இயங்கும் வணிக நிலையங்களில் பணிபுரிவோரின் நலன் கருதியே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அந்த நடைமுறை, மன்றத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற போதிலும் ஓரிரு வணிகர்கள் நடைமுறையை மீறுவது ஏனைய வணிகர்கள் மத்தியில் அதிருப்தியை உருவாக்கியுள்ளது. சங்க நிர்வாகத்தினால் காலத் துக்கு காலம் பண்டிகை வேளைகளை அண்டிய இரு ஞாயிற்றுக்கிழமைகளில் கடைகள் திறக்க அனுமதி வழங்கப்பட்டு வருகின்றது. எனினும் ஓரிரு வணிகர்கள் ஞாயிற்றுக்கிழமைகளில் தமது வணிக நிலையங்களை திறந்து வியாபாரம் செய்வது மன்ற நடவடிக்கைக்கு எதிரானது எனக் கருத முடிகிறது.

மன்ற எல்லைப் பரப்பில் உள்ள அனைத்து வணிக நிலையங்களும் மன்றின் நடைமுறைகளைத் தொடர்ந்து கடைப்பிடிக்குமாறு மன்ற நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (3-9)

# திருப்பி அனுப்பப்பட்டனர் சிங்கள யாத்திரிகர்கள்

## திருச்சியில் இருந்து சென்னைக்கு

சென்னை, பெப்.27

நாகை மாவட்டம், வேளாங்கண்ணிக்குச் சுற்றுலாச் சென்ற இலங்கையைச் சேர்ந்த 70 சிங்கள யாத்திரிகர்களை நீடாமங்கலம் பொலிஸார் திருப்பி அனுப்பியுள்ளனர். சென்னையிலிருந்து விமானம் மூலம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இலங்கைப் பயணிகள் 70 பேர் திருச்சிக்குச் சென்றனர். அவர்கள் அங்கிருந்து 2 பஸ்களை வாடகைக்கு அமர்த்திக் கொண்டு, வேளாங் கண்ணிக்குச் சென்று கொண்டிருந்தனர். இவர்களின் வருகை குறித்து விமான நிலைய குடியேற்றப் பிரிவு அதிகாரிகள், அனைத்துக் காவல் நிலையங்களுக்கும் தகவல் அளித்தனர்.

அதனைத் தொடர்ந்து, நீடாமங்கலம் பொலிஸ் ஆய்வாளர் முருகேசன், அவர்கள் சென்ற 2 பஸ்களையும் தடுத்து நிறுத்தி, திருச்சிக்கு திருப்பி அனுப்பினார். அவர்கள், திருச்சியிலிருந்து சென்னைக்குப் புறப்பட்டுச் சென்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

**அண்மையில் நாகை மாவட்டத்துக்குச் சென்ற இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் கரு ஜயசூரியவின் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து போராட்டங்கள் நடைபெற்றன.**

அண்மையில் நாகை மாவட்டத்துக்குச் சென்ற இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் கரு ஜயசூரியவின் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து போராட்டங்கள் நடைபெற்றன. இதன் காரணமாகவே, இலங்கை நாட்டின் சிங்கள யாத்திரிகர்கள் திருப்பி அனுப்பப்பட்டதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. (3)

### பருத்தித்துறை-நெல்லியடி பிரதான வீதி

## புனரமைப்புப் பணிகள் துரித கதியில் ஆரம்பம்

வடமராட்சி, பெப்.27

பருத்தித்துறை- நெல்லியடி பிரதான வீதி அகலிப்புப் பணி திட்டமிடப்பட்ட காலத்துக்கு முன்னதாக ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றது.

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை பிரதான வீதி அகலிப்புப் பணியில், அகலிப்பு வேலைகள் பருத்தித்துறை-நெல்லியடி வீதியில் முழுமைப்படுத்தப்படவில்லை. அதனைத் தொடர்ந்து இதற்கான வேலைகள் மார்ச் மாதத்தில் ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டிருந்தது. இருந்தும் இரு வாரங்களுக்கு முன்னதாகவே நெல்லியடியில் இருந்து பருத்தித்துறை நோக்கி அகலிப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தற்போது நெல்லியடி தொடக்கம் மாலு சந்தி வரை வீதி அகலிப்புப் பணிகள் நடைபெறுகின்றன. மாலு சந்தி தொடக்கம் பருத்தித்துறை வரையான வீதி அகலிப்புக்கு முன்னதாக மதகுகள் உடைக்கப்பட்டு அகலமாக்கப்பட்டன.

பருத்தித்துறைக்கும் ஓராங்கட்டைச் சந்திக்கும் இடையிலான நகரப்பகுதியில் அகலிக்கும் பிரதான வீதியில் சில புதிய மதகுகளும் கட்டப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (3-8)

# வளக்குறைபாடுகளுடன் இயங்கும் அளவெட்டி வைத்தியசாலை

யாழ்ப்பாணம், பெப்.27

அளவெட்டிப் பிரதேச வைத்தியசாலையில் ஆளணி மற்றும் அடிப்படை வசதிகள் பற்றாக்குறை இருந்தபோதும், நாளாந்தம் அதிகளவிலான நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்கப்பட்டு வருகின்றது.

குறித்த வைத்தியசாலையில் ஒரு வைத்தியர் மட்டும் கடமையில் உள்ளார். நோயாளர்களின் வருகைக்கு ஏற்ப விடுமுறை நாள்களிலும் சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

அளவெட்டிப் பிரதேச மக்கள் பயன் பெறக்கூடிய வகையில் பொதுமக்களின் சுகாதார நலன் கருதி தகுந்த சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு நோயாளர்களை அனுப்புவதற்கு அம்புலன்ஸ் உள்ள போதும் சாரதி இல்லாத காரணத்தால் இரவில் மட்டுமே அது பயன்படுத்தப்படுகிறது.

அதனால் அவசர மற்றும் திடீர் நோயாளர்கள், பகல் நேரங்களில் பல்வேறு சிரமங்களை எதிர் கொள்கின்றனர் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (3-14-36)

# ஒரு கிலோமீற்றர் தூரம் டீசலை சிந்திய வாகனம்

தென்மராட்சி, பெப்.27

வாகனத்திலிருந்து ஒரு கிலோமீற்றர் தூரத்துக்கு வீதியில் சிந்தப்பட்டிருந்த டீசலால் மக்களுக்கு பாதிப்பு ஏற்படாதிருக்க சாவகச்சேரி நகர சபையினர் அதனை மண்போட்டு மறைத்தனர்.

நேற்றுக் காலை சாவகச்சேரி நகர்ப் பகுதியிலிருந்து கச்சாய் வீதியில் சென்ற வாகனத்திலிருந்து டீசல் சிந்தியதரால் வீதியில் வாகனங்கள் செல்ல முடியாத நிலை காணப்பட்டது. இது தொடர்பாக பொதுமக்களால் டீசல் ஊற்றிய பகுதிக்கு மணல் போட்டு விபத்து ஏற்படாமல் தடுக்கப்பட்டது. (த-9)

# வாணவேடிக்கையில் தீ; ஆறு பேருக்குக் காயம்

கொழும்பு,பெப்.27

வாணவேடிக்கை வெடிக்கப்பட்டபோது ஏற்பட்ட தீயால் காயமடைந்த இளைஞர்கள் ஆறு பேர் மாத்தளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மாத்தளை விஜய வித்தியாலயத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடத்தப்பட்ட இசைக் கச்சேரியின்போது வெடிக்கப்பட்ட வாணவேடிக்கையின்போதே 6 இளைஞர்கள் காயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்களில் ஒருவருக்கு கடுமையான எரிகாயங்கள் ஏற்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## கண்ணீர் அஞ்சலி



நல்லூர் பிரதேச செயலக உத்தியோகத்தர் நலன் புரிசங்கத்தின் பொருளாளராகவும் நிர்வாகக்கிளையில் முகாமைத்துவ உதவியாளராகவும் கடமையாற்றும்

**கந்தசாமி முரளிதரன்**

அவர்களின்

அன்புத்தாயார்

**பராசக்தி கந்தசாமி**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலகம்,நல்லூர். (சி/6885)(3.6.7)

நல்லூர்ப் பிரதேச செயலக உத்தியோகத்தர் நலன்புரி சங்கம்

## கண்ணீர்அஞ்சலி



எமது நிறுவனங்களில் நீண்ட காலம் அர்ப்பணிப்புடன் பணியாற்றி கடந்த 25.02.2013 இல் அகால மரணமடைந்த

**சுப்பிரமணியம் லோகநாதன்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(c/6212)(6.7.11)

டச்சு வீதி, சாவகச்சேரி.

உரிமையாளர்களும், ஊழியர்களும்
ஸ்ரீஜங்கரன் மணி மண்டபம்
ஸ்ரீஜங்கரன் வெதுப்பகம்
சிவகாமி நெற்கடை.

## மரண அறிவித்தல்



**சுவாமிரத்தினசர்மா திரிபுரேஸ்வரி**

தாவடி அம்பலவாண வேத விநாயகர் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுவாமிரத்தினசர்மா திரிபுரேஸ்வரி அம்மா நேற்று முன்தினம் திங்கட்கிழமை (25.02.2013) மாலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுவாமி ரத்தினசர்மா அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்க ளான முத்துக்குமாரசாமிக்குருக்கள்- துளசியம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான பாலசுப்பிரமணியக் குருக்கள் - சாரதாம் பாள் தம்பதியரின் பாசமிகு மருமகளும், சாந்திமதி, ஹரிகேசன், காலஞ்சென்ற சுந்தரேசக் குருக்கள், ரமணேசன், புவனேசன், பானுமதி, குமரேசசர்மா ஆகியோரின் அன்புத் தாயாரும், ரவிச்சந்திர ஐயர், செந்திரு, சீதாலட்சுமி, சாந்தி, சுபாசினி, நரேந்திரன், ஸ்ரீவித்யா ஆகியோரின் அன்பு மாமியாரும், ஜெனந்தினி, சாளினி, நிசேவிதா, ராகுல், வைஷ்ணவி, வைகரி, வைசாளி, விஷ்ணுவர்த்தன், கோவர்த்தன, ஹரிணி, ஹர்ஷி, ஹரிணி, அக்ஷயா, ஆகாஷ், வசுதா, சுபேக்சனன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.02.2013) புதன் கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்ய ப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

"சாந்தி " தாவடி, கொக்குவில்.
தொ.பே .இல:0212226072 (33846)(6.7.11)

தகவல்: குடும்பத்தினர்.

## வீடு வாடகைக்கு தேவை

யாழ்.நகருக்கும் கச்சேரிக்கும் இடைப்பட்ட பிரதேசத்தில் 03 அறைகள் கொண்ட நல்ல நிலையிலுள்ள வீடு வாடகைக்குத் தேவை.

(33853)(3.6.7) தொடர்புகளுக்கு :-0774336778

## தையல் ஆசிரியர் தேவை

திருநகர் தெற்கு, மாதர்கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு ஒரு தகுதி வாய்ந்த தையல் ஆசிரியர் தேவை. தொலைவில் வசிப்பவர்களும் விண்ணப்பிக்கலாம். சகல வசதிகளும் செய்து கொடுக்கப்படும். வேதனம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். தொடர்பு:- 0773763417

(24269)(2.6.7)

## வீடு வாடகைக்கு உண்டு

மூளாய் தெற்கு, தொல்புரம், காரைநகர் பிரதான வீதியில் விவசாயத் திணைக் களத்துக்கு முன்னால் 7 ½ பரப்புக் காணியில் ஐந்து அறைகளுடன் கூடிய வீடு மாபிள் பதிக்கப்பட்டது. வாடகைக்குக் கொடுக்கப்படும். அரச, தனியார் நிறுவனங்கள் விரும்பத்தக்கது. தொடர்பு:- 0777534249

(33550)(2.6.7)

## வீடு விற்பனை

அச்சுவேலி ஜோன் ராஜ வீதியில் 4 பரப்புடன் கூடிய வீடு உடன் விற்பனைக்கு உண்டு

தொடர்பு :
0777 144 204
0773 028 402

## முதலாம் ஆண்டு நிறைவஞ்சலி



திருமதி
**புனிதவதி குகநாதன்**

(ஆசிரியை, பூநகரி
அ.த.க.பாடசாலை, புலோலி மேற்கு)

தோற்றம் 07.04.1975
மறைவு 10.03.2012

எங்கள் குடும்ப விளக்கே
நீ எங்களை விட்டுப் பிரிந்து
ஆண்டொன்று போனாலும்
உன் பிரிவால்
நம விழிகள் நனைகின்றன
உன் ஆத்மா
சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனை வேண்டுகின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

குடும்பத்தினர்.

கூவில், புலோலி மேற்கு, புலோலி.

(C/6632)(2.6.7)


## COMPANY VACANCIES IN
### சவுதி அரேபியா/கட்டார் உடனடி வேலைவாய்ப்பு

| S/N | CATEGORY | | NOS | SALARY(SR) | SALARY (SL) |
|---|---|---|---|---|---|
| 01 | HELPERS | உதவியாளர் | 40 | 900 | 32400 |

நிபந்தனைகள் (முன்னனுபவம் தேவையில்லை)

★ இலவச தங்குமிடவசதி. ★ வைத்திய வசதி
★ மேலதிக வேலை நேர கொடுப்பனவுகள்
★ இரண்டு வருடஒப்பந்தகாலம்.

உடனடிப் பயணம். 5 நாள்களில் விசா செய்து தரப்படும்

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி :
**Mantek Enterprises**
சுதாகரன் 0727287374
No:535/2/1, Galle Road, Wellawatte,Colombo-06
T.P No: 011-4375911 Fax:011-4510549
E-Mail: mantek.enterprises@yahoo.coin
Labour LIC No: 1449


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை,
## வெளிவாரிப் பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகு

**வெளிவாரிப் பரீட்சைகள்-2010**
பொது மற்றும் சிறப்பு கலைமாணித் தேர்வு பகுதி -II-2009&2010
சிறப்பு கலைமாணித் தேர்வு பகுதி -III- 2009
(வெளிவாரி)

மேற்படி பரீட்சைகளை 15.03.2013 (வெள்ளிக்கிழமை) தொடக்கம் 30.03.2013 (சனிக்கிழமை) வரை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலும், வவுனியா வளாகத்திலும் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பரீட்சை தொடர்பான நேர அட்டவணைகளையும், பரீட்சை அனுமதி அட்டைகளையும் 12.03.2013 (செவ்வாய்க்கிழமை) தொடக்கம் வெளிவாரிப் பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகிலும் வவுனியா வளாகத்திலும், அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விவரங்களுக்கு 021 222 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்.

பதிவாளர்.


## இலங்கையில் இடம்பெறும் மிகப்பெரிய இந்தியக் கல்விக் கண்காட்சி

THE LARGEST INDIAN EDUCATION FAIR IN SRI LANKA

பிரவேசம் இலவசம்

edCIL

# INDIAN Education Fair

2013 மார்ச் மாதம்
5 மு.ப. 10.30 – பி.ப. 6.30
6 மு.ப. 10.30 – ந.ப. 12.00

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில்

ORGANISED BY: EdCIL (India) Limited, A GOVERNMENT OF INDIA ENTERPRISE
SUPPORTED BY: HIGH COMMISSION OF INDIA IN SRI LANKA
PROFESSIONAL EXHIBITION ORGANISER: LECS LANKA EXHIBITION & CONFERENCE SERVICES (PVT) LIMITED
OFFICIAL TV

(சி/6576)(2.6.7)

## மூன்றாம் வருட நினைவஞ்சலி

தாய் மகிழ
30
07
1939



தமர் நெகிழ
27
02
2010

### திருமதி வசந்தாதேவி தண்டாயுதபாணி

**அன்பு உள்ளங்களில் என் றென்றும் நிறைந்திருக்கும் தேவி.......**

நுணாவில் மேற்கு,சாவகச்சேரி. (27867)(3.6.7)

நீங்கா நினைவுடன்
கணவர்,உறவினர்கள்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



பிறப்பு
14.11.1914

இறப்பு
28.01.2013

அமரர்

### இளையதம்பி இலட்சுமி

நந்தன வருடம் 28.01.2013 அன்று சிவபதமெய்திய அமரர் இளையதம்பி இலட்சுமி அவர்களது 31 ஆம் நாள் நினை வஞ்சலியும் அந்தியேட்டிக் கிரியைகளும் 26.02.2013 கீரிமலை புனித தீர்த்தத் தலத்திலும் வீட்டுக் கிரியைகள் இன்று (27.02.2013) புதன்கிழமை ந.ப. 12 மணியளவில் நெல்லியடி முருகன் வீதியில் அமைந்துள்ள இளையதம்பி தர்மலிங்கம் அவர்களின் இல்லத்திலும் நடைபெறவுள்ளது. இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து

சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் நேரில் கலந்து கொண்டும் தொலை பேசி மூலமாகவும் அஞ்சல் மூலமாகவும், அனுதாபம் தெரிவித்தவர் களுக்கும், ஆறுதல் கூறியவர்களுக்கும் மற்றும் அனைத்து வழிகளிலும் உதவி புரிந்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியறிதல்களைத்

நெல்லியடி முருகன் வீதி.
மீசாலை கிழக்கு மீசாலை.

இ.திருமேனி (மகன்).

## வான் விற்பனைக்கு

Toyoto Dolphin LH113 96 model 6 Nuts GQ--xxxx தொடர் இலக்கமுடைய வான் விற்பனைக்கு.

(33860)(3.7) தொடர்பு:0773034467, 0776075520

## வான் விற்பனைக்கு

58xxxx
தொடரிலக்கமுடைய
டுவல் A/C வான்
விற்பனைக்குண்டு.
தொடர்பு:-0774735228

(சி/6690)(3.6.7)

## கொக்குவில் நந்தாவில் மனோன்மணி அம்பாள் ஆலயத்திற்கு

## குருக்கள் தேவை

- குருக்கள்
- உதவிப் பூசகர் தேவை
- குருக்கள், ஆலயத்தின் பூசைகள், அபிடேகம், மகோற்சவம், திருமண வைபவங்கள் போன்றவற்றை பொறுப் பேற்று நடத்தக்கூடியவராக இருக்க வேண்டும்.
- உதவிப் பூசகர், குருக்களுக்கு உதவியாக ஆலயத்தில் கடமையாற்ற வேண்டும்.
- கடமையாற்றும் காலத்தில் வசிப் பதற்குவசதியான,தனித்தனி அமைக் கப்பட்ட வீடுகள் வழங்கப்படும்.
- சம்பளமும் ஏனைய விடயங்களும் நேரில் பேசித்தீர்மானிக்கப் படும்.

நேரடியாக தொடர்பு கொள்ளவும்.
தலைவர்/ செயலாளர்
பரிபாலன சபை,
கொக்குவில் நந்தாவில்
மனோன்மணி அம்பாள் ஆலயம்.
கொக்குவில்.

தொலைபேசி இல:
021 222 3003
0770388421

(33849)(6.7.11)

## கோல்டன் ஈகிள் பாதுகாப்பு சேவை

### பாதுகாப்பு பதவி வெற்றிடங்கள்: சங்கானை, தெல்லிப்பழை, சாவகச்சேரி, யாழ்ப்பாணம்.

★ கனிஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்

1. தகைமைகள்: க.பொ.த. (சா/த)

(a) பாதுகாப்பு சேவை அனுபவம் இருந்தால் முன்னுரிமை வழங்கப்படும்.

(b) சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

குறிப்பு: மேற்கூறப்பட்ட தகைமையில் a+b உள்ளவர்களுக்கு கல்வி தகைமையில் விலகல் அளிக்கப்படும்.

2. நல்ல தேகாரோக்கியமும், நல்ல கண்பார்வையும் இருத்தல் வேண்டும்.

உயரம் 5' 4"

18 வயதுக்கு மேற்பட்டோர்

சம்பளம்:

முதல் மூன்று மாதங்கள் : 14250/= +EPF + ETF (தகுதி காண் நிலை I)

நான்கு முதல் ஆறு மாதங்கள் : 14700/= +EPF + ETF (தகுதிகாண் நிலை II)

ஆறு மாதங்கள் பின்னர் : 15000/= + EPF + ETF

★ இத்துடன் வேலைக்கு வருகைக்கு மாதாந்தம் ரூபா 300/= மிகை ஊதியமாக வழங்கப்படும்

★ நேர்முகப் பரீட்சை 04.03.2013, 05.03.2013 (திங்கள், செவ்வாய்) ஆகிய நாள்களில் மு.ப. 10.30 மணி முதல் 16.00 மணிவரை கீழ் குறிப்பிட்ட அலுவலகத்தில் நடைபெறும்.

கோல்டன் ஈகிள் பாதுகாப்பு சேவை
337 1/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

கீழ்க் குறிப்பிட்ட ஆவணங்களுடன் சமுகமளிக்கவும்

(i) கிராம சேவகர் நற்சான்றுப்பத்திரம் (06 மாதங்களுக்கு உட்பட்டது)
(ii) பிறப்பு அத்தாட்சிப்பத்திரம்
(iii) கல்வித்தராதரப்பத்திரங்கள்
(iv) தேசிய அடையாள அட்டை

இவை அனைத்தினதும் உண்மைப் பிரதியுடன் போட்டோ பிரதியும் கொண்டு வரவும்.

**பணிப்பாளர்**
**கோல்டன் ஈகிள் பாதுகாப்பு சேவை**
**337 1/1, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(c/6689) (10,6,7)

## மரண அறிவித்தல்

### சின்னர் சிதம்பரப்பிள்ளை



மீசாலை வடக்கு, சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் பெரிய பரந்தன் மற்றும் கற்குழி, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னர் சிதம்பரப்பிள்ளை (22.02.2013) வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மகளிர் கல்லூரி வீதி,
கல்வயல், சாவகச்சேரி. (33856)(2.6.7)

தகவல்:
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### ஐயம்பிள்ளை தங்கராசா

உரிமையாளர்-V.M.S நகை மாளிகை, வவுனியா



வேலணை மேற்கு, வேலணையைப் பிறப்பிடமாகவும், இல.63A, முதலாம் குறுக்குத்தெரு, வவுனியாவை வசிப்பிட மாகவும் கொண்ட ஐயம்பிள்ளை தங்கராசா (உரிமையாளர்-V.M.S நகை மாளிகை-மில் வீதி, வவுனியா) நேற்று (26.02.2013) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயம் பிள்ளை-பாக்கியலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மாணிக்கம்-நாகம்மா தம்பதியரின் அருமை மருமகனும், பரமேஸ்வரியின்(தேவி) அன்புக்கணவரும், புஸ்பகாந்தி, ரூபகாந்தி, ராஜேஸ்வரி, காலஞ்சென்றவர்களான கன கேஸ்வரி, ஞானேஸ்வரி மற்றும் ஆனந்த ராஜா ஆகியோரின் பாசமிகு சகோதரனும், இராசையா, சுப்பிரமணியம், காலஞ்சென்ற தர்மராஜா மற்றும் சிவஞானம், வட்சலா, காலஞ்சென்ற நகுலேஸ்வரி மற்றும் தன லட்சுமி, வசந்தநாதன், ரகுநாதன் ஆகி யோரின் மைத்துனரும் தட்சணாமூர்த்தி, சண்முக ரத்தினம், மணிமேகலை ஆகியோ ரின் உடன்பிறவாச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (27.02.2013) புதன்கிழமை காலை 7.00 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து வவுனியா பூந்தோட்டம் இந்துமயான மண்டபத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு அங்கு பி.ப.12.30 மணிக்கு இறுதிக் கிரியைகள் நடைபெற்று பி.ப.2.30 மணிக்கு பூந்தோட்டம் இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள் ளவும்.

63A, முதலாம் குறுக்குத்தெரு,
வவுனியா.
0775442587

(27698)(8.6)

தகவல்:
குடும்பத்தினர்.

# தர்சினி, சரண்யா அபாரம் கிண்ணம் விக்னேஸ்வராவுக்கு

## ஆட்டம் தொடங்கியதிலிருந்தே தமது கட்டுப்பாட்டுக்குள் பந்தை வைத்திருந்தது விக்னேஸ்வராக் கல்லூரி

யாழ்ப்பாணம், பெப்.27

வடமராட்சிக் கல்வி வலய பாடசாலைகளுக்கிடையிலான பெண்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதி ஆட்டத்தில் விக்னேஸ்வராக் கல்லூரி சம்பியனானது.

இதில் விக்னேஸ்வராக் கல்லூரியின் வீராங்கனைகள் ஈ.தர்சினி, உ.சரண்யா ஆகியோரின் விளையாட்டைக் கட்டுப்படுத்த முடியாமல் திணறியது வடஇந்து மகளிர் கல்லூரி.

19 வயதுப் பெண்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியை எதிர்த்து வட இந்து மகளிர் கல்லூரி அணி மோதியது.

ஆட்டம் தொடங்கியதிலிருந்தே தமதுகட்டுப்பாட்டுக்குள் பந்தை வைத்திருந்து விக்னேஸ்வராக் கல்லூரியின் முன்னணி வீராங்கனையானதர்சினி ஆட்டம்தொடங்கி 7 ஆவது நிமிடத்தில் ஒரு கோலைப் போட விக்கினேஸ்வரா அணியினர் புத்துணர்ச்சி பெற்றனர்.

தொடர்ந்து 13 ஆவது 15 ஆவது நிமிடங்களில் தர்சினி மேலும் இரு கோல்களை போட்டு எதிரணியை அதிர்ச்சிக் குள்ளாக்கினார். இதனால் இடைவேளைக்கு முன்னர் 3:0 என்ற கோல் கணக்கில் விக்னேஸ்வரா அணி முன்நிலை வகித்தது.

இடைவேளையின் பின்னர் ஆட்டம் தொடங்கிய போதும் மிகவும் உற்சாகத்துடன் இருந்த விக்னேஸ்வராக் கல்லூரியின் வீராங்கனை தர்சினியைக் கட்டுப்படுத்த முயன்றனர் வட இந்து மகளிர் அணியினர். இதனால் தர்சினியின் கோல் வாய்ப்புகள் நழுவவிடப்பட மற்றமொரு முன்னணி வீராங்கனையான சரண்யா வெற்றியை உறுதி செய்யும் வகையில் 10 ஆவது, 14ஆவது நிமிடங்களில் மேலும் இரு கோல்களைப் போட்டார். இதனால் விக்னேஸ்வராக் கல்லூரியின் பக்கம் வெற்றி சாய்ந்தது. விக்னேஸ்வராக் கல்லூரி அணி வட இந்து மகளிர் கல்லூரி அணியை 5:0 என்ற கோல் கணக்கில் அபார வெற்றி பெற்று சம்பியன் ஆனது.

(த-400-422)

# சென்.தோமஸ்,மெதடிஸ் பெண்கள் பிரிவில் வெற்றி

காரைநகர்,பெப்.27

வடமராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான வலய மட்ட கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் 15 வயதுப் பிரிவில் சென். தோமஸ் வித்தியாலயமும், 19 வயதுப் பிரிவில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையும் இந்த வருட சம்பியன்களாகத் தெரிவுசெய்யப்பட்டன.

வடமராட்சி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான பெண்களுக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

15 வயதுப் பிரிவினர்களுக்கிடையில் இடம் பெற்ற இறுதி ஆட்டத்தில் சென்.தோமஸ் வித்தியாலயமும், பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையும் மோதிக்கொண்டன.

மூன்று சுற்றுக்கள் கொண்ட இந்தச் சுற்றுப் போட்டியில் பலத்த போட்டியின் மத்தியில் 2:0 என்ற நேர் செற் கணக்கில் சென்.தோமஸ் வித்தியாலயம் வெற்றி கொண்டது.

முதலில் செற்றில் இரு அணிகளும் சமபலத்தோடு மோதிய போதும் 25:22 என்ற புள்ளிகள் அடிப்படையில் சென்.தோமஸ் வித்தியாலய அணி வெற்றி பெற்றுக் கொண்டதோடு இரண்டாவது செற்றை எந்தவித எதிர்ப்பும் இன்றி இலகுவாக 25:17 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்று சம்பியனானது.

இந்தப் பிரிவில் மூன்றாமிடத்தை வல்வை மகளிர் அணி பெற்றுக்கொண்டது.

அடுத்து இடம்பெற்ற 19 வயதுப் பிரிவினருக்கான ஆட்டத்தில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரியும், நெல்லியடி மத்திய கல்லூரி அணியும் மோதிக் கொண்டன.

மூன்று செற்களைக் கொண்ட இந்தச் சுற்றுப் போட்டியில் 25:23, 25:20 என்ற செற்கணக்கில் வென்று பருத்தித்துறை மெதடிஸ்த உயர்தரப் பாடசாலை அணி சம்பியனாகியது.

இந்தப் போட்டியில் மூன்றாமிடத்தினை சென்.தோமஸ் வித்தியாலய அணி பெற்றுக் கொண்டது.

(த-400)



இருபாலை எக்ஸ்பிரஸ் கல்வி நிறுவனம் நடத்திய மரதன் ஓட்டப் போட்டியில் மாணவர்கள் ஈடுபட்டுள்ளனர். (த-17)

# மரதன் ஓட்டத்தில் வென்றோர்



மானிப்பாய் மகளிர் கல்லூரியின் பொன் விழாவை முன்னிட்டு இடம் பெற்று வருகின்ற விளையாட்டு நிகழ்வுகளின் ஓர் அங்கமாக மரதனோட்ட நிகழ்வு கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. கல்லூரியின் முன்றிலில் கல்லூரி முதல்வர் திருமதி எஸ்.ஜெயவீரசிங்கத்தினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் 100 மாணவர்கள் பங்குபற்றியிருந்தனர். இவர்களில் சுமார் 70 மாணவர்கள் போட்டியை நிறைவு செய்தனர்.

இந்தப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசுகளை கல்லூரி முதல்வர் திருமதி எஸ். ஜெயவீரசிங்கம் வழங்கி கௌரவித்தார்.

இந்தப் போட்டியில் முதல் 3 இடங்களைப் பெற்ற மாணவர்களின் விவரம் பின்வருமாறு.

முதலாமிடம்- அன்ரன் யூபோட் மேரிவின்சியா

இரண்டாமிடம்- செல்வரத்தினம் சசிந்தா

மூன்றாமிடம்- சிவநேஸ்வரன் தாட்சாயினி

(த-16 )

# ஜொலிஸ்ரார் அபார வெற்றி

யாழ்ப்பாணம், பெப்.27

யாழ்.சென்றல் விளையாட்டுக்கழகம் 9ஆவது ஆண்டாக நடத்தும் வீ.டி.ஜெயரெட்ணசிங்கம் வெற்றிக் கிண்ணத்துக்கான 50 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டித் தொடரில் 7ஆவது போட்டி கடந்த வாரம் மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்றது. இதில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழக அணி ஒரு இலக்கினால் வெற்றிபெற்றது.

மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழக அணிமோதிக் கொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக்கழக அணி 44.3 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 179 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் நிதர்ஸன் 50ஓட்டங்களையும், துவர் 36 ஓட்டங்களையும், துஸ்யந்தன் 23 ஓட்டங்களையும், பிரதீபன் 17 ஓட்டங்களையும், திவாகராஜா் 16 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்

பந்துவீச்சில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழக அணி சார்பில் மதுஸன், ருக்மன், ஆகியோர் தலா 3 இலக்குகளையும், மணிவண்ணன் 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.


பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகஅணி 47.1 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 180 ஓட்டங்களைத் தமது அணிசார்பாகப் பெற்றனர்.

இதில் ருக்மன் ஆட்டம் இழக்கமால் 52 ஓட்டங்களையும், மதுஸன் 25 ஓட்டங்களையும், மணிவண்ணன் 24ஓட்டங்களையும் அருண்குமார் 21ஓட்டங்களையும் கலாகுகன் 15 ஓட்டங்களையும் தமது அணிசார்பாக பெற்றனர்.

பந்துவீச்சில் மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக்கழக அணி சார்பில் கரிகரன், யாழினியன்ஆகியோர் தலா 3 இலக்குகளையும், வினோத் 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக்கழகஅணி, ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழக அணிக்கும், சிறிகாமாட்சி விளையாட்டுக்கழக அணிக்கும் இடையில் இடம் பெறும் ஆட்டத்தில் வெற்றி பெறும் அணியுடன் மோத வுள்ளது. ஜொலிஸ்ரார் அணி, ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் சிறிகாமாட்சி விளையாட்டுக்கழக அணிக்கும் இடையில் இடம்பெறும் ஆட்டத்தில் தோல்வியடையும் அணியுடன் 2ஆவது சுற்றில் மோதவுள்ளது. (த-23)

# கிளிநொச்சி வலயத்தின் சதுரங்கப் போட்டி



கிளிநொச்சி கல்வி வலயத்தின் கரைச்சி கோட்டப் பாடசாலை அணிகளுக்கிடையிலான சதுரங்கப் போட்டிகள் கடந்த 18 ஆம் திகதி கிளிநொச்சி கனகபுரம் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றன.

இந்தப் போட்டிகளில்19 வயதுக்குட்பட்ட ஆண், பெண்,15 வயதுக்குட்பட்ட ஆண்,பெண் என நான்கு பிரிவுகளாக நடைபெற்றன. இந்தப் போட்டி முடிவுகள் வருமாறு:

**16 வயது ஆண்**

முதலாமிடம்- கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயம்
இரண்டாமிடம்-கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயம்,
மூன்றாமிடம்-வட்டக்கச்சி மத்திய மகாவித்தியாலயம்.

**15 வயதுப் பெண்**

முதலாமிடம்-கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயம்,
இரண்டாமிடம்-வட்டக்கச்சி மத்திய மகாவித்தியாலயம்,
மூன்றாமிடம்-கிளிநொச்சி மத்திய கல்லூரி.

**19 வயதுப் பெண்**

முதலாமிடம்-கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயம்,
இரண்டாமிடம்-கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயம்,
மூன்றாமிடம்-இராமநாதபுரம் மத்திய மகாவித்தியாலயம்.

(த-405)



நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியின் இல்லமெய்வன்மைப் போட்டியை முன்னிட்டு மரதன் ஓட்ட நிகழ்வு கடந்த சனிக்கிழமை கல்லூரி முன்றலில் இடம்பெற்றது. இதில் பங்குபற்றிய மாணவர்களையும் இதில் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்ட நிதர்சனையும் காணலாம்.

# வென்றது தீபஜோதி அணி

வடமராட்சி, பெப்.27

புலோலி குரும்பைகட்டி உதய சூரியன் விளையாட்டுக் கழகம் நடத்திய தபேந்திரன் ஞாபகார்த்த கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் கூவில் தீபஜோதி விளையாட்டுக்கழகம் அறிவகம் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து விளையாடி 47:7 என்ற புள்ளி அடிப்படையில் சாதனை வெற்றி பெற்றது.

குரும்பசிட்டி உதயசூரியன் விளையாட்டுக் கழக மைதனத்தில் 20 நிமிடங்கள் கொண்ட விலகல் முறையிலான ஓவர்கேம்சுற்றுப் போட்டியை நடத்தி வருகின்றது

இரண்டாம் கட்ட சுற்றுப் போட்டியில் கூவில் தீபஜோதி விளையாட்டுக் கழகம், அறிவகம் விளையாட்டுக் கழகமும் மோதிய போட்டியில் தீபஜோதி அணியைச் சேர்ந்த ரூபன், நகுலன், கபிலன் ஆகியோரின் அபார ஆட்டத்தின் மூலம் 47:7 என்ற புள்ளி அடிப்படையில் வென்று காலிறுதி ஆட்டத்துக்கு தகுதி பெற்றது

காலிறுதி ஆட்டத்துக்கு நவஜீவன்ஸ் அணி, மாதனை அணி, அல்வாய் நியூபவர் அணி, வெண்மதி அணி, கூவில் தீபஜோதி அணி, காமாட்சி அணி ஆகியவை தகுதி பெற்றன.


அதில் கூவில் தீபஜோதி அணி நியூபவர் அணியை எதிர்த்து விளையாடியது. ஆனாலும் நியூபவர் அணி தாமும் சளைத்தவர்கள் அல்ல என்ற நிலையில் கூவில் தீபஜோதி அணியை 22:17 என்ற ரீதியில் வெற்றி பெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.

மற்றைய காலிறுதி ஆட்டங்களும், அரையிறுதியாட்டங்களும் தொடர்ந்து இடம் பெற்று வருகின்றன.

(த-8)

# ஆஸியைத் தோற்கடித்தது இந்தியா

இந்தியாவுக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள ஆஸ்திரேலிய அணிக்கும், இந்திய அணிக்குமான 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது



போட்டியில் இந்திய அணி 8 இலக்குகளால் வெற்றிபெற்றுள்ளது.

சென்னையில் இடம்பெற்ற இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.


இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி மைக்கல் கிளார்க்கின் 130 ஓட்டங்கள், அறிமுக வீரர் மொய்ஸஸ் ஹென்றிக்கஸின் 68 ஓட்டங்கள், டேவிட் வோர்ணரின் 59 ஓட்டங்களின் துணையோடு 380 ஓட்டங்களைப் பெற்றது.

பந்துவீச்சில் இந்திய அணி சார்பாக இரவிச்சந்திரன் அஷ்வின் 7 இலக்குகளையும், ரவீந்திர ஜடேஜா 2 இலக்குகளையும், ஹர்பஜன் சிங் ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி மகேந்திரசிங் டோனியின் அதிரடியான 224 ஓட்டங்கள், விராத் கோஹ்லியின் 107 ஓட்டங்கள், சச்சின் டெண்டுல்கரின் 81 ஓட்டங்கள், செற்றேஸ்வர் புஜாராவின் 44 ஓட்டங்கள், புவனேஷ்வர் குமாரின் 38 ஓட்டங்களின் துணையோடு 572 ஓட்டங்களைக் குவித்தது.

பந்துவீச்சில் ஆஸ்திரேலிய அணி சார்பாக ஜேம்ஸ் பற்றின்சன் 5 இலக்குகளையும், நேதன் லையன் 3 இலக்குகளையும், பீற்றர் சிடில், மொய்ஸஸ் ஹென்றிக்கஸ் ஆகியோர் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

தனது இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி அறிமுக வீரர் மொய்ஸஸ் ஹென்றிக்கஸின் ஆட்ட





மிழக்காத 81 ஓட்டங்கள், எட் கொவானின் 32 ஓட்டங்கள், மைக்கல் கிளார்க்கின் 31 ஓட்டங்களின் துணையோடு மொத்தம் 241 ஓட்டங்களைப் பெற்றது.

பந்துவீச்சில் இந்திய அணி சார்பாக இரவிச்சந்திரன் அஷ்வின் 5 இலக்குகளையும், ரவீந்திர ஜடேஜா 3 இலக்குகளையும், ஹர்பஜன் சிங் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

50 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 2 இலக்குகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

விரேந்தர் செவாக் 19 ஓட்டங்களுடனும், முரளி விஜய் 6 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்திருந்தனர்.

பந்துவீச்சில் பீற்றர் சிடில், நெதன் லையன் இருவரும் தலா ஓர் இலக்கைக் கைப்பற்றினர்.

போட்டியின் நாயகனாக இந்திய அணித்தலைவர் மகேந்திரசிங் டோனி தெரிவானார்.

# தோல்வியைத் தழுவியது இலங்கை மகளிர் அணி

இலங்கைக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்தியத் தீவுகள் மகளிர் அணிக்கும், இலங்கை மகளிர் அணிக்குமிடையிலான 3 ஒருநாள் சர்வதேசப் போட்டிகள் கொண்ட தொடரின் 3 ஆவது போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணி வெற்றிபெற்றுள்ளது.

இதன் மூலம் 3 போட்டிகள் கொண்ட இந்தத் தொடரை அந்த அணி 2-1 என்ற கணக்கில் கைப்பற்றியுள்ளது.

தம்புள்ளையில் இடம்பெற்ற இந்தப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் மகளிர் அணி 50 பந்துப்பரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து 191 ஓட்டங்களைப் பெற்றது.

ஆரம்பம் முதலே இலக்குகளை இழந்த அந்த அணி, ஒரு கட்டத்தில் 6 இலக்குகளை இழந்து 106 ஓட்டங்களைப் பெற்றிருந்த போதிலும், தொடர்ந்து வந்த வீராங்கனைகள் சிறப்பாக ஆடியிருந்தனர்.

துடுப்பாட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பாக ஷமெய்ன் கம்ப்பெல் 44 பந்துகளில் 37 ஓட்டங்களையும், அணித்தலைவி மெரிஸா அகுய்லெய்ரா 63 பந்துகளில் 29 ஓட்டங்களையும், கைஷோனா நைற் 46 பந்துகளில் 24 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இலங்கை அணி சார்பாக சாமனி செனவிரத்ன 4 இலக்குகளையும், இனோக்கா ரணவீர, இஷானி கௌஷல்யா ஆகியோர் தலா 2 இலக்குகளையும், ஷஷிகலா சிறிவர்தன ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

192 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இலங்கை மகளிர் அணி 50 பந்துப்பரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து 158 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 33 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

முதலாவது இலக்குக்காக 31 ஓட்டங்கள் பகிரப்பட்ட போதிலும், 4 'ரண் அவுட்' முறையிலான ஆட்டமிழப்புக்கள் இலங்கையைப் பாதித்திருந்தன.

துடுப்பாட்டத்தில் இலங்கை அணி சார்பாக அணித்தலைவி ஷஷிகலா சிறிவர்தன 78 பந்துகளில் 29 ஓட்டங்களையும், சாமரி அத்தப்பத்து 27 பந்துகளில் 21 ஓட்டங்களையும் பெற்றனர்.



பந்துவீச்சில் மேற்கிந்தியத்தீவுகள் அணி சார்பாக ட்ரெமெயின் ஸ்மார்ட் 2 இலக்குகளையும், ஷெகெரா செல்மன், ஸ்ரபானி ரெய்லர், ஷமெய்ன் கம்ப்பெல் ஆகியோர் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

தொடரின் நாயகியாக ஷமெய்ன் கம்ப்பெல் தெரிவானார்.

## இங்கிலாந்து பிரிமியர் லீக் முடிவுகள்...

இங்கிலாந்தில் இடம்பெற்றுவரும் இங்கிலாந்துப் பிரிமியர் லீக் உதைபந்தாட்டத் தொடரின் நேற்றுமுன்தினம் நடைபெற்ற போட்டியில் வெஸ்ட் ஹாம் யுனைட்டட் அணியை, ரொட்டென்ஹம் ஹொட்ஸ்பர்ஸ் அணி வெற்றிகொண்டது.

இந்தப் போட்டியின் 13 ஆவது நிமிடத்திலேயே ரொட்டென்ஹம் ஹொட்ஸ்பர்ஸ் அணி சார்பாக கரத் பேல் கோலொன்றைப் பெற்றுக் கொடுக்க, அந்த அணி முன்னிலை பெற்றது. ஆனால் 25 ஆவது நிமிடத்தில் கிடைத்த பெனால்ட்டி வாய்ப்பொன்றை கரோல் பயன்படுத்திக் கோலொன்றைப் பெற்றுக்கொள்ள, வெஸ்ட் ஹாம் யுனைட்டட் அணியும் கோலைப் பெற்று 1:1 என்ற சமநிலை பெறப்பட்டது.

முதற்பாதியில் மேலதிக கோல்கள் பெற்றுக்கொள்ள முடியாது போக, முதற்பாதி 1:1 என்ற சமநிலையில் முடிவடைந்தது.

இரண்டாம் பாதி ஆரம்பித்த பின்னர், போட்டியின் 58 ஆவது நிமிடத்தில் வெஸ்ட் ஹாம் யுனைட்டட் அணி சார்பாக கோலே கோலொன்றைப் பெற்றுக்கொடுக்க, ஹெஸ்ட் ஹாம் யுனைட்டட் அணி 2:1 என்று முன்னிலையைப் பெற்றுக் கொண்டது.

ஆனால் 76 ஆவது நிமிடத்தில் சிகுர்ட்ஸன், 90 ஆவது நிமிடத்தில் கரத் பேல் மீண்டும் பெற்றுக் கொடுத்த கோல் ஆகியவற்றின் உதவியுடன் ரொட்டென்ஹம் ஹொட்ஸ்பர்ஸ் அணி வெற்றியைத் தழுவியது.

NALIN IT
புதிய வகை DELL LAPTOPS
மிக மிக குறைந்த விலையில்
DELL VOSTRO 1450 CI5(2ND GEN),4GB RAM, 500GB HDD.
Rs.69,000 only WITH 3 YEAR WARRANTY
மேலும்பல தெரிவுகள்...
www.facebook/nalinit.com
NALIN INFORMATION TECHNOLOGIES PVT. LTD TP-0212221121 0777667975
195/2, Palaly road, Parameswara Junction, Jaffna.

## விற்பனையாகிறது

கல்வியியற் கல்லூரிகளுக்கான விண்ணப்பப் படிவங்கள் - 2013

பூபாலசிங்கம் புத்தகசாலை
யாழ்ப்பாணம்

advt@uthayan.com
0215671111

## CHEMISTRY CENTRE

33, அரலி வீதி (ஓட்டுமடம் சந்தி அருகில்)

ஆண்டு ரீதியான 20 வருட வினாவிடை
Mon, Wed, Thurs- 6.30- 8.00Pm

Group Class முறையில்
01.Basic 02.அயன்சமநிலை
03.Inorganic 04.ORGANIC

ஆரம்பமாகவிருக்கும் CHEMISTRY CENTRE கிளைகள்
01.பழம் Road, கந்தர்மடச் சந்தி
02.மஞ்சவனப்பதி வடக்கு வீதி, கொக்குவில்.
03.மானிப்பாய் மகளிர் கல்லூரி முன்பாக

By- அன்பு (0775180217)

## டோஹா கட்டார் நாட்டில் உடனடி வேலைவாய்ப்பு
(DOHA QATAR) அரச அனுமதி இல L.L. NO:2490

இலங்கை அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப் பட்ட Air trust வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தினூடாக கீழ்க்காணும் வேலைவாய்ப்புக்கள் உடனடியாக காத்திருக் கின்றன.

* மேசன் (Mason)
* கார்பென்டர்
* House Painter
* கல் F லைசன் சாரதிகள்
* Welders
* கம்பி கூடு கட்டு பவர்கள்
* இலக்ரிஷியன் (அனுபவம் இல்லாதவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும்)
* பைப்லைன் பொருத்துனர் (அனுபவம் இல்லாதவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும்.)
* உதவியாளர்கள்
* சுத்திகரிப்பாளர்கள்

இன்னும் பல வாய்ப்புக்கள், அதிஉயர் சம்பளம், மிக குறைந்த கட்டணத்தில் பயணமாக விரையுங்கள்.
மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்:

கிளை-01 Jaffna. 0777929475.
கிளை-02 முல்லைத்தீவு Holly Wood City, Word No-02, Mulliyawalai, Mulliaitivu.0777929475, 0772393165.
கிளை-03 வவுனியா Lanka Voice, No.24, Station Road, 0777929475, 0772393165.
கிளை-04 கொழும்பு Air Trust, 945, Maradana Road, Borella, Colombo-8, 0112676777.
(27690)(10,6,7)

# மரண அறிவித்தல்



## சித்தன் சண்முகம்

அச்சுவேலி வடக்கை பிறப்பிடமாகவும் அச்சுவேலி மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சித்தன் சண்முகம் செவ்வாய்க்கிழமை (26.02.2013) நேற்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சித்தன் - நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும் சரஸ்வதியின் பாசமிகு கணவரும் செல்வக்குமார், பூபதி, உதயராணி (சுவிஸ்), உதயகுமார், ஜெயக்குமார், சந்திரகுமார், சிவகுமார், ஜீவகுமார், இந்திரகுமார் (மலேசியா), காலஞ்சென்ற விஜயகுமார் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆனந்தராஜா (சுவிஸ்), வடிவேலு, சிவசக்தி, சிவாஜினி, ரஞ்சினி, அசோதினி ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அச்சுவேலி மேற்கில் உள்ள இல்லத்தில் நடைபெற்று புதன்கிழமை (27.02.2013) இன்று நண்பகல் 2 மணிக்கு தகனக்கிரியைக்காக அச்சுவேலி வல்லை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அச்சுவேலி மேற்கு, அச்சுவேலி.

தகவல்
குடும்பத்தினர்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

## இராசையா ஜெயகோபால்

(யாழ். பல்கலைக் கழக பௌதீகவியற்துறை தொழில்நுட்ப உத்தியோகத்தர் தரம்I)

திதி: 16.02.2013

தோற்றம் 28.06.1961
மறைவு 27.02.2012

கருணையினை நெஞ்சில் வைத்து
எம்மையெல்லாம் ஆளாக்கிய
உயிர்த்தெய்வமே
ஓராண்டு ஆனதுவோ ஆறவில்லை எம் மனம்
காலங்கள் எத்தனை கடந்தாலும்
மாறாது உங்கள் நினைவு அலைகள்
என்றும் எம் இதயத்தில் சங்கமமாகிய
உங்கள் நினைவுகளுடன்
ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

தொல்புரம் மத்தி,
சுழிபுரம்.

என்றும் உங்கள்
நீங்கா நினைவுகளுடன்
அன்பு மனைவி.

# முக்கிய அறிவித்தல்

## எமது பீடி விற்பனையாளர்கள், பாவனையாளர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் ஆர்.வி.ஜி. நிறுவனத்தினரால் அறியத்தருவதாவது

எமது ஆர்.வி.ஜி. நிறுவனத்தின் தரமான பீடி உற்பத்திக்கு பங்கம் விளைவிக்கக் கூடியதாகவும், தரமற்ற முறையிலும், சட்டதிட்டங்களை மீறும் வகையிலும், எமது கட்டு, பண்டல் பீடி லேபல்களை போன்று போலியான லேபல்களை பயன்படுத்தி தரமற்ற பீடிகளை கடைகளுக்கு ஒரு சிலரால் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா ஆகிய பிரதேசங்களில் விநியோகம் செய்துவருவதாக நாம் ஆதாரபூர்வமாக அறிகின்றோம்.

எனவே எமது வாடிக்கையாளர்கள் தரமான ஆர்.வி.ஜி. பீடிகளை பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில் எமது ஸ்தாபனத்தின் விற்பனையாளர்களிடமோ மொத்த விற்பனையாளர்களிடமோ பெற்றுக்கொள்ளுமாறும் போலி பீடிகளை கொள்வனவு செய்வதனால் தங்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களை தவிர்த்துக்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கின்றோம்.

173, 1/1, ஆட்டுப்பட்டித்தெரு,
கொழும்பு - 13,
தொ.பே. 0112 335340

அப்பலோ என்ரபிறைசெஸ்
(ஆர்.வி.ஜி. பீடி நிர்வாகம்)

(33761)(6.7.45)

## இரண்டு வருட கால விசா ஆலோசனை வரலாற்றில் எம்மைப் பற்றிய சுயமதிப்பீடு (25.02.2011-25.02.2013)



| விசா ஆலோசனை வகை | ஆலோசனைக்கு கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்கள் | திசைகாட்டியின் ஆலோசனையைப் பெற்று விசா பெற்றவர்கள் | திசைகாட்டியில் ஆலோசனை பெற்று விசா நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் | நிராகரிக்கப்படாமலே மீளப்பெறப்பட்ட விண்ணப்பங்கள் |
|---|---|---|---|---|
| ஆஸ்திரேலியா 5 வருட குடும்ப விசா | 187 | 28 | - | 02 |
| ஆஸ்திரேலியா Student visa | 07 | 04 | 02 | - |
| Australia Skill migration | 09 | 03 | 01 | 02 |
| நியூசிலாந்து Student visa | 16 | 09 | 01 | - |
| நியூசிலாந்து Skill migration | 07 | 03 | 03 | - |
| சைப்பிரஸ் Student visa | 29 | 16 | 02 | 06 |
| மலேசியா Student visa | 13 | 07 | - | - |
| ஆஸ்திரேலியா தனியாள் விசா | 42 | 03 | - | 07 |

இதுவரை எம்மிடம் 7476 பேர் இலவச ஆலோசனை பெற்றுள்ளனர்.

## திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்

முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனம்.
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
021 221 9016, 021 568 9090
(எல்லா நாள்களும் காலை 8.30-மாலை 6.30 வரை)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27.02.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

சிறிதே உண்;
சிறிதே உறங்கு
பொறுமையும்
கருணையும் பூண்டு
கொள்.
—குருநானக்—


# புதன் பொய்கை

A

உதயன் | பெப்ரவரி 27 2013 புதன்கிழமை | பக்கங்கள்: எட்டு

(கடந்தவாரத் தொடர்ச்சி....)

# ஆரோக்கியம் என்பது உங்கள் கைகளில்



மனித உடலில் காணப்படுகின்ற உள்ளுறுப்புகளில் இருதயமும் ஒன்றாகும். இருதயம் நான்கு வெவ்வேறான அறைகளைக் கொண்டிருக்கும். மேல் அறைகளை 'ஓரிக்கல்' என்றும் கீழ் அறைகளை 'வென்ரிக்கல்' என்றும் அழைக்கின்றனர். குருதி (Blood) எல்லாப் பாகங்களுக்கும் தங்குதடையின்றிச் செல்வதற்கு இருதயத்தின் இயக்கம் வழிசமைக்கின்றது.

இருதயத்தின் தசைகள் சுருங்கி விரியும் தன்மை கொண்டவை. இருதயம் சுருங்குவதாலும் அதிலுள்ள வால்வுகள் மூடிக் கொள்வதாலும் ஏற்படுகின்ற ஒலியைத்தான் இருதய ஒலி என்கின்றோம். இருதய ஒலியில் இரண்டு விதமானவை உண்டாகின்றன. முதலில் ஏற்படும் ஒலி உண்மையில் இரண்டு ஒலி சேர்ந்தே உண்டாவதாகும். அதாவது ஓரிக்கல் என்னும் மேல் அறைகள் சுருங்குவதாலும் அதைத் தொடர்ந்து வென்ரிக்கல் என்னும் இருதயத்தின் கீழ் அறைகள் சுருங்குவதாலும் இடையே உள்ள வால்வுகள் மூடுவதாலும் ஏற்படுகின்ற ஒலிகள் தான் இவை என்பது கண்டறியப்பட்டுள்ளது. இந்த இரண்டு ஒலிகளுக்கும் இடைப்பட்ட நேரம் ஒரு விநாடியில் ஆறில் ஒரு பங்கை விடக் குறைவு. எமது காதுகள் அவ்வளவு குறைந்த நேரத்தில் தோன்றும் ஒலிகளை வேறுபடுத்தி உணரும் ஆற்றலற்றவையாகும். இந்த இருதயமானது நல்ல இரத்தம், அசுத்த இரத்தம் என்பவற்றை வெவ்வேறு அறைகள் மூலம் அடித்து அனுப்புவதை பிரதான பணியாக மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது.

மனிதன் உட்பட எல்லா உயிரினங்களுக்கும் உயிர் வாழ்வதற்கு சுத்தமான குடிதண்ணீர் அவசியம் என்பதை நாமறிவோம். நீரைப் பருகாமல் இருந்தால் பத்து நாள்களுக்குள் உயிர் பிரிவது நிச்சயம்.

உலகில் மூன்றில் இரண்டு பங்கு தண்ணீரால் சூழப்பட்டுள்ளதை நாம் புவியியல் பாடம் கற்கும் போது அறிந்து கொண்டோம். அதற்காக சமுத்திரத்திலோ, கடலிலோ தென்படும் தண்ணீரைப் பருகிவிட முடியாது. அவை கடின நீராகும். மனிதன் உயிர்வாழ்வதற்கு காற்றுக்கு அடுத்தபடியாக தண்ணீர் மிக அவசியம்.

மேலும் மது, போதைவஸ்து போன்றவற்றைத் தினமும் உட்கொள்பவர்களுக்கு பல்வேறு தரப்பட்ட நோய்கள் தோன்றுகின்றன.

அத்துடன் புகைப்பழக்கத்திற்கு அடிமையானவர்களுக்கு ஏற்படும் விபரீத நோய்கள் பற்றியும் தெரிந்து கொள்வோம். புகைக்கும் பொழுது சிகரெட்டிலுள்ள புகையிலைத் தூளுக்கு அமிலத்தன்மை ஊட்டப்படுவதின் மூலம் புகையிலையில் உள்ள 'நிக்கோட்டின்' (Nicotine) நுரையீரலில் உள்ள இரத்தோட்ட மண்டலத்தில் கலந்து பரவ வழியுண்டாகின்றது.

இவ்வுலகில் தினமும் ஐந்நூறு கோடி சிகரெட்டுக்கள் புகைக்கப் படுவதாக கணிப்பீட்டாளரது தரவுகள் மூலம் அறிய முடிகின்றது. புகையிலையில் உள்ள நச்சு எமது உடலில் புகுந்து பதினைந்து நொடியினுள் இரத்தத்தில் கலந்து மூளையைச் சென்றடைந்து விடும்.

புகைப்பிடிப்பதால் சில நோய்கள் எம்மை வந்தடைகின்றன என்பது யதார்த்தமாகும். புகைக்கும் பழக்கம் உடையோர் நுரையீரல் புற்று நோய்க்கு ஆளாக வேண்டி வரும். மேலும் இருதயத்திற்குச் செல்லும் இரத்த நாளமாகிய இருதயத்தமனி கொழுப்பினால் அடைபடும் நோய் இளம் வயதிலேயே உண்டாகக் காரணமாகின்றது.

இதனால் இளைஞர் யுவதிகளுக்கிடையே மாரடைப்பு, பக்கவாதம் திடீரென உண்டாகலாம். மேலும் நுரையீரலில் தீராத சளி, தொடர் இருமல்கைகால் களுக்குச் செல்லும் இரத்த நாளங்களில் அடைப்பு, ஆண்மைக்குறைவு என்பவற்றையும் ஏற்படுத்தி விடுகின்றது.

அடுத்ததாக ஆண்களில் சிலருக்கு உண்டாகும். பிரஸ்ரேற் சுரப்பி **வீக்கம்** பற்றி சிறிது ஆராய்வோம். ஆண் முதியோர் சிலருக்கும் **துரதிஷ்டவசமாக** ஏற்படுகின்ற **பிரஸ்ரேற்** சுரப்பி வீக்கம் (Prostate Gland Enlar gement) அவர்கள் இறக்கும் வரை உபாதையைக் கொடுக்கின்றது.

ஆணின் விந்து அணுக்களை மிதக்கச் **செய்கின்ற** ஒரு வித திரவத்தை மிதக்கச் செய்வது தான் இந்த பிரஸ்ரேற்சுரப்பியின் பணியாகும். ஐம்பது, அறுபது வயதைக் கடந்த ஆண்கள் சிலருக்கு அந்தத் திரவம் சுரப்பது குறைவடைந்து விடுகின்றது. அதன்பிறகு தான் உண்டு, தன் ஓய்வுண்டு! என்று சும்மா இருக்காமல் ஏககாலத்தில் பெருத்துக் கொண்டே போவதுதான் இது தருகின்ற பிரச்சினையாகும்.

> "மனிதன் உட்பட எல்லா உயிரினங்களுக்கும் உயிர் வாழ்வதற்கு சுத்தமான குடி தண்ணீர் அவசியம் என்பதை நாமறிவோம். குடிதண்ணீரைப் பருகாமல் இருந்தால் பத்து நாள்களுக்குள் உயிர் பிரிவது நிச்சயம்."

**● அருணா தர்மலிங்கம்**

வீங்கிக்கொண்டே போகின்ற இந்தச் சுரப்பி அவர்கள் சாகிறவரை சொல்லொணா உபத்திரவத்தைக் கொடுத்துக்கொண்டே இருக்கும். இந்த நோய் ஏன் ஏற்படுகின்றது? என்றால் முதுமையானதும் தலை நரைப்பது போல, தோல் சுருங்குவது போல ஞாபகமறதி உண்டாவது போன்று 'ஹார்மோன்' மாற்றங்களால் நிகழ்வது இயற்கையான விடயமாகும்.

இது வயதாக ஆக பருத்து மாங்காய் அளவிற்கு பெரிதாகி விடுகிறது. இரண்டு பிரஸ்ரேற் சுரப்பிகளுக்கும் நடுவே பயணிக்கின்ற சிறுநீர் வெளியேற்றும் குழாயை (Urethra) அழுத்தத் தொடங்குவதினால் சிறுநீர் வெளியேறுவதில் பெரும் சிரமம் ஏற்படுகின்றது.

சிறுநீர் வெளியேறாவிட்டால் என்ன ஆகும். சிறுநீரக வைத்திய நிபுணரை உடனடியாக அணுக வேண்டிய நிலைமை உண்டாகின்றது.

அண்மைக்காலமாக எமது அண்டை நாடான இந்தியாவில் எண்பது வீதமான பிரஸ்ரேற் நோயாளிகளுக்கு மருந்து மட்டுமே கொடுத்து குணப்படுத்தினார்கள். ஆனால் என்ன நிலையில் என்ன மாதிரியான சிகிச்சை தேவை என்பதை சம்பந்தப்பட்ட வைத்திய நிபுணரே முடிவுசெய்ய வேண்டும்.

அத்துடன் பிரஸ்ரேற் சுரப்பி வீக்கத்திற்கு சத்திரசிகிச்சை அவசியமா? அநாவசியமா? என்பதையும் சிறுநீரக வைத்திய நிபுணரே தீர்மானிக்க வேண்டும். இந்த நோய்க்கு ஆரம்பத்திலே சிகிச்சை பெற்றுக்கொண்டால் பாதிப்புக்கள் அதிகம் ஏற்பட வாய்ப்புக்கள் உண்டாகாது.

இன்றைய காலகட்டத்தில் மருத்துவத்துறை நவீனமயப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் பல தரப்பட்ட நோய்களுக்கும் மருத்துவமனைகள் மூலம் சிகிச்சை பெற்றுக் கொள்ள முடிகின்றது.

இவற்றை உகந்த முறையில் செயற்படுத்த வைத்தியர்களுடன் விசேட வைத்திய நிபுணர்களும் தயார் நிலையில் உள்ளனர்.

இருதயம் மற்றும் கிட்னி சம்பந்தமான சத்திரசிகிச்சைகள் கூட கொழும்பில் உள்ள வைத்திய சாலைகளில் மேற்கொள்ளப்படுகின்றன.

நோயாளரின் இன்னுயிரைக் காப்பாற்றுவதற்கு நவீன மருத்துவமனைகள் அளப்பரிய சேவையினை மேற்கொண்டு வருகின்றமை உள்ளங்கை நெல்லிக்கனியாகும்.

கொழும்பு, கண்டி போன்ற மாநகரங்களில் நவீன வசதிகளுடன் கூடிய சில தனியார் மருத்துவமனைகளும் நோயாளரின் உயிருக்கு உத்தரவாதம் அளித்து வருகின்றமை கண்கூடு.★







# சூழலைப் பாதுகாக்கும் தாவரங்கள்

அசுர வேகத்தில் அதிகரித்துவரும் உலகளாவிய சனத்தொகையால் இட நெருக்கடிகள் ஏற்பட்ட வண்ணமே காணப்படுகின்றன.அதன் காரணமாக பல இடங்கள் நகரமயமாக்கப்படுவதனால் சூழலில் உள்ள பச்சைத் தாவரங்கள் அழிக்கப்படுகின்றன. இதன் விளைவாக வளிமண்டலத்தில் ஒட்சிசன் மற்றும் காபனீரொட்சைட் வாயுக்களின் சமநிலை பாதிக்கப்படுவதோடு சூழல் வெப்பநிலையும் அதிகரித்துச் செல்கின்றது.

இதனைத் தவிர்க்க தற்போது புதிய தொழில்நுட்பம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அதாவது பச்சைத் தாவரங்களை வளர்க்கக்கூடிய விசேட டைல்ஸ்களைப் பெண் ஒருவர் உருவாக்கியுள்ளார்.

இந்த டைல்ஸ்களில் காணப்படும் துளைகளுள் உரமூட்டப்பட்ட மணலை நிரப்பி அவற்றுள் தாவரங்களை வளர்க்க முடிவதுடன், நகரப் புறங்களில் அமைக்கப்படும் வீடுகளைச் சூழ இந்த வகையான டைல்ஸ் களைப் பதிக்க முடியும். சுமார் 14 அமெரிக்க டொலர்கள் பெறுமதியான இந்தவகை டைல்ஸ்கள் மூலம் சூழலை எளிமையாகப் பாதுகாக்க முடியும்.





# குழந்தைகளின் அறிவுத்திறனை வளர்க்கும் காலை உணவு



காலை உணவு உண்ணும் குழந்தைகளின் பேச்சுத் திறன், செயற்பாட்டுத் திறன் அதிகரிக்கும் என்று ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரவு உணவுக்குப் பின்பு, நீண்ட நேரத்துக்கு பின்பு காலை உணவு உண்பது உடலுக்கு மட்டுமல்ல, மூளைச் செயற்பாட்டுக்கும் உதவுகிறது.காலை உணவு உண்ணாத குழந்தைகளுக்கும் தொடர்ந்து காலை உணவு உண்ணும் குழந்தைகளுக்கும் இடையே உள்ள வேறுபாட்டை அறிய அமெரிக்காவின் பென்சில்வேனியாவில் உள்ள ''ஸ்கூல் ஆப் நர்சிங்'' பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் ஆய்வு ஒன்றை மேற்கொண்டனர்.

சீனாவில் உள்ள 1,269 குழந்தைகளிடம் ஆறு ஆண்டுகளாக நடத்தப்பட்ட ஆய்வில் காலை உணவு உண்ணாத குழந்தைகளின் பேச்சுத் திறன் மற்றும் செயற்பாட்டுத் திறன் ஆகியவை குறைவாக இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. ஆனால், தினமும் காலை உணவு சாப்பிடும் குழந்தைகள் அறிவுத் திறன் கொண்டவர்களாக இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

குழந்தைகளின் அறிவுத் திறன் அதிகரிக்கப் போதுமான உணவு அவசியம். காலை உணவு உண்ணாத குழந்தைகளுக்கு உடனடி மற்றும் நீடித்த பாதிப்புகள் ஏற்படும் என்று ஆய்வின் தலைவர் ஜியாங்ஹாங் லியூ தெரிவித்தார்.

# வலி தராத புதிய ஊசி



உலகில் பல பேர் பயப்படுவது ஊசி போட்டுக் கொள்ளத்தான். ஏனென்றால் அதன் வலி கடுமையாக இருக்கும்.

அதனாலேயே சிலர் கையில் ஊசி போடத் தயங்கி இடுப்பில் போட்டுக் கொள்வார்கள். இருந்தும் பலர் எவ்வளவு மாத்திரை என்றாலும் கொடுங்க ஆனா ஊசி மட்டும் வேண்டாம் என்று சொல்வார்கள்.

ஊசி மருந்து உடம்பில் செலுத்திய சில நொடிகளில் உடம்பின் ஒவ்வொரு மூலைக்கும் சென்று, உடனே அதன் வேலையைக் காட்டத் தொடங்கும். தற்போது பிரிட்டன் கிங் பல்கலைக்கழகத்தில் ஒரு புது வகை ஊசியை உலர்ந்த சர்க்கரை மூலம் கண்டுபிடித்திருக்கின்றனர்.

இது ஒரு நெற்றிப் பொட்டு அளவுக்குதான் இருக்கும். கூடவே அதில் உங்கள் நோய்க்கேற்ற மருந்து இருக்கும். அதை அப்படியே உடம்பில் ஒட்டிவிட்டால் அதில் உள்ள உலர்ந்த சர்க்கரை உருகி உடம்போடு சென்று இந்த மருந்தை வலியில்லாமல் செலுத்த முடிகிறது.



# உதைபந்தாட்ட பயிற்சியை வழங்கும் புதிய இயந்திரம்

இளைஞர்கள், யுவதிகள் கால்பந்தாட்டத் துறையில் சிறந்த பயிற்சினைப் பெறுவதற்கு தொழில்நுட்ப உதவிகள் நாடப்படுவது வழமையான விடயமாகும். அதேபோன்றே உதைபந்தாட்ட பயிற்சியினை வழங்குவதற்கு சிறந்த பயிற்சியாளராக இயந்திரம் ஒன்று அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.

இந்த இயந்திரத்தின் மூலம் பாதம், கீழ் கால், முழங்கால், நெஞ்சுப்பகுதி மற்றும் நெற்றிப் பகுதி போன்றவற்றினால் கால்பந்தை இலகுவாகவும், சிறந்த முறையில் கையாளும் வகையிலும் பயிற்சியினை பெற்றுக்கொள்ளக்கூடியதாகக் காணப்படுகின்றது. இந்த இயந்திரத்தின் பெறுமதி சுமார் 140 அமெரிக்க டொலர்களாகும்.



# இன்னும் இப்படி எத்தனை பிரதிநிதிகளும், அதிகாரிகளுமோ...?

**கோப்பாய் சண்முகம்**

**கதையோடு செய்தி**

கண் தெரிந்தவன் தேவையற்று அதனை மூடமாட்டான். ஆனாலும் மக்களின் வயிற்றில் அடிக்கும் செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களை பார்த்துக் கொண்டுதான் மக்கள் இருக்கிறார்கள். பிரதேசம் பின்தங்கிப் போகும் என்பதை இவர்கள் நினைக்க வேண்டும். மக்கள் கேட்கும் கேள்விகளுக்கு பதில் சொல்ல வேண்டும். பொறுப்பு வாய்ந்த அதிகாரி என்றால் பொறுப்பற்ற விதத்தில் நடக்கலாமா?

போரினால் பாதிக்கப்பட்ட எமது பிரதேசத்தில் கட்டியெழுப்ப வேண்டிய வேலைத்திட்டங்கள் நிறைய இருக்கின்றன. இன்னும் எத்தனை தசாப்த காலம் பின்தங்கிய நிலையில் இருக்கப்போகிறோமோ என்பது தெரியாதுள்ளது. தமிழர் பிரதேச அபிவிருத்திகள் அரசினால் திட்டமிட்ட முறையில் தடுக்கப்படுகிறது. இதற்கு உடந்தையாக அதிகாரிகள் செயற்படுகின்றனர். அதிகாரிகள் சிந்திக்க வேண்டும். சுயபுத்தி கொண்டு செயற்பட வேண்டும். இல்லாது போயின் எமது பிரதேசம் பின்தங்கிப் போவதற்கு நீங்களும் ஒரு காரணமாக இருப்பீர்கள்.

கடந்த சனிக்கிழமை காலை 9 மணி இருக்கும். கோப்பாய்- மானிப்பாய் வீதியில் சூரியன் உதிக்கும் கிழக்குப் பக்கம் எனது மோட்டார் சைக்கிள் சென்றது. சூரியன் கண்ணை மறைப்பதால் வீதியைப் பார்த்துத் தான் நகர வேண்டியிருந்தது. கந்தசாமி கோயில் பக்கம் சென்றதும் யாரோ ஒருவர் கைதட்டும் சத்தம் எனது காதில் கேட்டது. கோயில் பக்கம் பார்க்கிறேன். வாயிலில் நின்று கும்பிட்டுக் கொண்டிருந்த எனது நண்பன் ஒருவன் கை காட்டி என்னை அழைத்தான். என்ன, ஏது என்று அறிவதற்காக அவன் பக்கம் சென்றேன். மோட்டார் சைக்கிளில் இருந்து இறங்கி வீதியின் ஓரமாக அதை நிறுத்தினேன். கோயில் முன் வாயிலுக்குச் சென்று நானும் கும்பிட்டு விட்டு அவனைப் பார்க்கிறேன்.

அவனோ "மூன்றெழுத்தில் ஒரு மூச்சிருக்கும், அது முடிந்துவிட்ட பின்னும் பேச்சிருக்கும்'' என்று கவிஞர் வாலி எழுதி எம்.ஜி.ஆர். நடித்த பாடலைப் பாடி முடித்துவிட்டான். நானோ "ஏன் இந்தப் பாட்டை இப்ப பாடினீ'' என்று அவனைக் கேட்டேன். அவனோ "கடமை, கண்ணியம், கட்டுப்பாடு இவை அனைத்தும் ஒரு மனிதனின் உடம்பில் இரத்தமாக இருக்க வேண்டும். இதனை விளக்கத்தான் கவிஞர் இப்படி எழுதியிருக்கிறார். ஆனால் குறைந்த எழுத்தில் பெயர் கொண்ட இந்த அதிகாரியின் உடம்பில் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு இருக்க வாய்ப்பில்லை என்பதை நிரூபித்துவிட்டார்'' என்றான்.

"யார் அந்த ஆள்'' என்று அவனைக் கேட்டேன். அவனோ நான் கேட்ட கேள்விக்குப் பதிலைச் சொல்லாமல்..... "உங்கால கிழக்குப் பக்கமாக எங்கேயாவது விவசாயப் பண்ணை இருக்குதா?'' என்று கேட்டான். நானோ "வலி.கிழக்குப் பக்கம் ஒரே விவசாயப் பண்ணைதானே இருக்குது. நீ எந்த விவசாயப் பண்ணையைக் கேட்கிறாய்'' என்றேன். அவனோ "ஒரு ரைக்ரர் ஒன்று அடிக்கடி கிழக்குப் பக்கம் பசளையை ஏற்றிக் கொண்டு போகுது'' என்றான். நானோ "எத்தனையோ ரைக்ரர் பசளையைக் கொண்டு போகுது. நீ எந்த ரைக்ரரைக் கேட்கிறாய்?'' என்றேன். அவனோ "கண்விழிக்கும் அதிகாலையிலும் கண்மயங்கும் மாலையிலும் பசளை ஏற்றிக் கொண்டு போகிற ரைக்ரரைப் பார்த்தனியா?'' என்றான்.

"யார் தான் பார்த்தது'' என்றேன். அவனோ "நான் பார்த்திருக்கிறேன்'' என்றான். "என்னத்தைப் பார்த்தனீ?'' என்றதும் அவன் சொல்லத் தொடங்கினான்.

போர் முடிவடைந்து மூன்று ஆண்டுகள் கடந்த நிலையில எங்கட மண்ணில நிறைய வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. அந்த ஒவ்வொரு வேலைத் திட்டங்களிலும் தனி மனிதன் மட்டும் இலாபத்தை அடைகிறான். மக்களுக்கு எந்த விதத்திலும் இதனால் இலாபம் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். இலாபத்தை ஈட்டும் தனி மனிதன் யாழ்.நகரை அண்டியும் கொழும்பிலும் ஒரு வீட்டினை வாங்கிவிடுகிறான். இதற்காகவே பலர் இப்பொழுது போட்டி போட்டுக் கொண்டு வெளிக்கிட்டிருக்கினம். இந்த மயக்கத்தில் அவர்களது தேவைகள் இருந்ததை விட அளவுக்கு அதிகமாக கூடிக் கொண்டு போகிறது. இதனால் மக்களைப் பற்றியோ இந்த மண்ணைப் பற்றியோ சிறிதளவு கூடச் சிந்திக்காமல் செயற்பட ஆரம்பித்து விடுகிறார்கள். இப்படிப்பட்டவர்களைப் பார்த்து எங்கட சனமும் தாமும் வரவேண்டும் என்ற கனவில் மிதக்கிறார்கள்.

நாடு போகிற போக்கைப் பார்த்தால் உயிரோடு இருக்கிறானா? இல்லையா? என்று கூட பார்க்காமல் விழுந்தவனின் மேல் ஏறியும் எங்கட சனம் வசதி வாய்ப்புக்களைத் தேடிப் போகும் போல இருக்கு. போவதற்குக் காரணமாக ஒரு சிலர் அரச மேல்மட்ட அதிகாரியாகவும் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட அதிகாரியின் உறவினர் ஒருவர் வலிகாமப் பகுதியொன்றில் பழத் தோட்டம் ஒன்றினை செய்கிறார். பல ஏக்கர் பரப்பளவு கொண்ட இந்த பழத் தோட்டத்தை உருவாக்குவதற்கு பலபேர் உதவி செய்து வருகினமாம். அந்த உதவி எப்படி என்றால் தெருவில் இருந்த தேங்காயை பிள்ளையாருக்கு அடிப்பது போன்றது.

அதிகார தரத்தில் இருப்பதால் எதனையும் இலகுவாகப் பெற்றுவிடலாம் என்ற நோக்கில் பழத் தோட்டத்தைச் செய்ய ஆரம்பித்தவர் அதற்கான தேவைகளை இலகுவாகப் பெற்று வருகிறாராம். இந்த மேலதிகாரி இரு இடங்களில் கால் வைத்து செயற்படுகிறாராம். ஆனாலும் தனது அரச வேலையை விட பண்ணை வேலையில் தான் அதிகமாக ஈடுபடுகிறாராம். இது இப்படியிருக்க இவருக்கு கீழே இருக்கும் பிரதேச சபை ஒன்றின் தலைவரும் அவருக்குத் துணை போகின்றாராம். தலைவர் என்னத்தை எதிர்பார்த்து அவருக்குத் துணை போகிறார் என்பது தெரியவில்லை. ஆனால் அவரும் ஏதோ ஒன்றை எதிர்பார்த்துத்தான் இந்த அதிகாரிக்கு உதவி செய்கிறார்.

அந்தப் பழத் தோட்டத்துக்குத் தேவையான பசளையை இலவசமாக ரைக்ரரில அனுப்பிக் கொண்டிருக்கிறாராம். தலைவரின் செயலை அறிந்து கொண்டு அந்தப் பிரதேச சபை உறுப்பினர்கள் அண்மையில் நடைபெற்ற கூட்டத்தில் தலைவரைக் கேட்ட போது ஏதோ எல்லாம் காரணம் கூறிப் பிடிபட்டுள்ளார். மக்கள் இவருக்கு வோட்டுப் போட்டுத்தான் இந்தப் பதவிக்கு வந்தவர்.

இப்படியாக வந்தவரும் அவருக்கு வாய்த்தவரும் ஒரேமாதிரி இருக்கிறார்கள் என்றால் பாருங்களேன். இந்த மேல் மட்ட அதிகாரியின் மேற்பார்வையிலுள்ள வலிகாமப் பகுதியிலுள்ள இன்னுமொரு பிரதேச சபையும் இவரைப் போன்று இன்னும் எத்தனை மக்கள் பிரதிநிதிகளும், அரச அதிகாரிகளும் இருக்கினமோ...? பாவம் மக்கள்...!!

# வாழ்க்கையை அதன் வடிவில் ஏற்றுக் கொள்!

**ஹைதர் அலி**

உலக இன்பம் அற்பமானது. உலகம் சுமைகள் நிறைந்தது. உலகம் கவலை மிகுந்தது. உலகம் பல நிறங்களைக் கொண்டது.

துக்கம்,துன்பம்,துயரம் ஆகியவற்றின் கலவைதான் உலகம். அதில் நீயும் ஒருவன்.

பிரச்சினைகள் இல்லாத இடமே இல்லை. உன் தந்தை , மனைவி , நண்பன் ஆகியோருக்கு வாழ்வில் நிச்சயமாகத் துயரங்கள் இருக்கும். உனது வீட்டிலும், தொழிலிலும் சிக்கல்கள் உருவாகும். எனவே, நன்மையின் குளிர்ச்சியால் தீமையின் வெப்பத்தை நீ தணித்துக் கொள்.

இறைவன் இந்த உலகத்தை முரண்பாடுகளால் அமைத்துள்ளான். நன்மை-தீமை, அமைதி-குழப்பம், மகிழ்ச்சி-கவலை என ஒவ்வொன்றிலும் இரு வேறு தன்மைகளை, நிலைகளை இறைவன் ஏற்படுத்தியுள்ளான்.

பசித்த பிறகு உண்கின்றாய், தாகத்துக்கு பிறகு நீர் அருந்துகின்றாய், களைப்புற்ற பிறகு உறங்குகின்றாய். நோயுற்ற பிறகு குணமடைகின்றாய். காணாமல் போனவன் விரைவில் வருவான். வழிதவறியவன் நேர்வழி பெறுவான்.

பரந்த பாலைவனத்தை நீ கண்டால், அதற்கப்பால் பசுமை நிறைந்த,மரங்கள் மிகுந்த அழகான தோட்டம் உண்டு என்பதைப் புரிந்து கொள்.


உறுதியான கயிற்றைக் கண்டால் அது ஒரு நாள் அறுந்து போகும் என்பதையும் நீ அறிந்துகொள்.

கண்ணீருக்குப் பிறகு புன்னகை உண்டு. அச்சத்திற்குப் பிறகு அமைதி உண்டு. அதிர்ச்சிக்கு பிறகு நிம்மதி உண்டு.

எனவே எதார்த்தமான வாழ்க்கையை மேற்கொள். கற்பனைகளில் மிதக்காதே! வாழ்க்கையை அதன் வடிவில் ஏற்றுக் கொள். வாழ்க்கையில் ஏற்படும் துன்பங்களைச் சகித்து வாழ்வதற்கு உனது ஆன்மாவைப் பக்குவப்படுத்து.

இந்த உலகில் காயங்கள் அற்ற மனிதனையும்,குறைகள் அற்ற பொருளையும் உன்னால் காண முடியாது. முழுநிறைவும்,கவலையின்மையும் வாழ்க்கையின் பண்புகள் அல்ல.

கீ போர்டில் இருந்து கையை எடுத்து இறங்கி நடந்து ஏழைகள் வாழும்



பகுதியில் நின்று கொண்டு உன்னைச் சுற்றிலும் பார். வலப்பக்கமும், இடப்பக்கமும் பார். துயரப்படுவோரும், துன்பப்படுவோரும் உனது கண்ணில் அகப்படுவர்.

ஒவ்வொரு வீட்டிலும் அழுகுரல். ஒவ்வொரு கன்னத்திலும் கண்ணீரின் அடையாளம் எல்லாத் திசைகளிலும் வலியின் ஓசை. உன்னைச் சுற்றி இதுதான் நடைபெறுகிறது.

இந்த உலகில் நீ மட்டும் சோதிக்கப்படவில்லை. மற்றவர்களை ஒப்பிட்டுப் பார்த்தால் உனக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் குறைவானவையே. பல ஆண்டுகளாக நோயால் பாதிக்கப்பட்டு, உறக்கமின்றி இங்கும் அங்குமாகப் புரண்டு புரண்டு அவதிப்படுவோர் பலர் இருக்கின்றனர். நோயின் வலி தாளாமல் துடிப்பவர்களும், கதறுபவர்களும் அதிகம் உள்ளனர்.

வருடக்கணக்காக சிறையில் வாடுவோர்தாம் எத்தனை பேர்! சிறைக் கூடத்தைத் தவிர வேறெதையும் அறிய முடியாமல், தமது கண்களால் சூரியனைக் கூட பார்க்க இயலாமல் சிறையில் வாடுவோர் ஏராளம் ஏராளம்.

இளம் வயதிலேயே தம் செல்லப் பிள்ளைகளைப் பறிகொடுத்த தாயும் தந்தையும் இந்த உலகில் அதிகம் உண்டு. கடன் பிரச்சினையால் நொந்து போனவர்களும், பல்வேறு இன்னல்களால் மூச்சுத் திணறிக் கொண்டிருப்பவர்களும் பலர் உண்டு.

**முடிந்தது முடிந்துவிட்டது**
**எதிர்பார்க்கப்படுவது மறைவானது**
**நீ வாழ்ந்து கொண்டிருக்கும்**
**இந்த நேரம் மட்டும் உனக்குரியது.**

நீ கவலைப்படாதே! ஏனெனில் உனது கவலையின் மூலம் சூரியனை, கால ஓட்டத்தை நிறுத்த நினைக்கிறாய். கடிகார முள்ளைப் பின்னோக்கி நகர்த்த முனைகிறாய். பின்னோக்கி நடக்க முயல்கிறாய். ஆற்றை அதன் பிறப்பிடத்தில் திருப்பியனுப்பத் துடிக்கிறாய்.

நீ கவலைப்படாதே! கவலை,புயல் போன்றது. அது காற்றை நாசமாக்கும். பேரலைகளை உருவாக்கும். வானிலையை மாற்றும். இசைக்கும் தோட்டத்தின் கண்கவர் மலர்களை அழிக்கும்.

நீ கவலைப்படாதே! ஏனெனில் கவலை கடலில் குதித்து கடலிலேயே ஓடும் அறிவற்ற ஆற்றைப் போன்றது. கவலைப்படுவது உடைந்த பானையில் தண்ணீரை நிரப்புவதற்கு ஒப்பானது.

இறைவா! உறங்காத கண்களில் உன்னிடமிருந்து நிம்மதியான உறக்கத்தைப் போடு. தடுமாறும் மனங்களில் அமைதியை ஏற்படுத்து. அவற்றிற்கு வெற்றியைப் பரிசாக வழங்கு. தடுமாறும் பார்வைகளுக்கு உன் ஒளியின்பால் வழிகாட்டு. வழிதவறியவர்களுக்கு நேர்வழி காட்டு.



■ அ. அஜந்தன்

> நாணயத்துக்கு இரு பக்கங்கள் இருப்பதைப் போல் எமக்குள் இருக்கின்ற உணர்வுகளிலும் நேரிய உணர்வுகள், எதிர்மறை உணர்வுகள் என்ற இருவகை உணர்வுகள் உள்ளன. அநேகமான சந்தர்ப்பங்களில் நாம் எமக்குள் இருக்கின்ற உணர்வுகளை அறிந்து கொள்ளாததாலும் அதன் தன்மை, அளவு, அவை வெளிப்படும் சந்தர்ப்பங்கள் என்பவற்றை புரிந்துகொள்ளாததினாலும் அவற்றை ஆரோக்கியமான முறையிலே கையாளத் தவறிவிடுகின்றோம்.

# மனித உணர்வுகளின் முக்கியத்துவங்கள்

அழகிய இவ் உலகு தாவரங்கள், பறவைகள், விலங்குகள் என பல்வேறுபட்ட உயிரினப் படைப்புக்களால் நிறைந்திருந்தாலும் உயிரோட்டமுள்ள உலகமாக மாற்றுவது உயிரினங்களில் காணப்படும் உணர்வுகள்தான். பூமி தனது பாதையில் இயங்குவதற்கும் தன்மீது வாழும் உயிரினங்களை தன்னகத்தே ஈர்த்து வைத்திருப்பதற்கும் அதன் புவியீர்ப்பு விசை எவ்வளவு அவசியமாகிறது. அதேபோல் ஒரு மனிதனின் நாளாந்த இயக்கத்திற்கு உணர்வுகளும் அதன் வெளிப்பாடுமே காரணமாகவுள்ளது.

மனிதன் பிறக்கும் போதே உணர்வுகளுடன் அவனது உறவு தொடர்கிறது. உதாரணமாக ஒரு குழந்தை கருவறையைவிட்டு வெளி உலகத்துக்கு வரும்பொழுதே அழத்தொடங்குகிறது. அதுபோல் இறுதியில் அவன் இறக்கும் போதும் துக்கத்தோடு அழுகையையும் உரிமையோடு விட்டுச்செல்கின்றான். அழுகை என்பது துக்கம், பயம், சந்தோசம் போன்ற சில உணர்வுகளின் ஒரு வெளிப்பாடாகும். அவ்வாறாகவே பிறப்பிலிருந்து உணர்வுகளின் ஊர்வலம் ஆரம்பமாகி படிப்படியாக விருத்தி அடைகின்றது. ஒரு மனிதனால் உடல் வளர்ச்சியிலும் அதன் நன்னிலையிலும் எந்த அளவிற்கு கவனம் செலுத்தப்படுகிறதோ அந்த அளவிற்கு உணர்வுகளின் நன்னிலையும் சிந்தனை வளர்ச்சியும் அவசியம்.

நாணயத்துக்கு இரு பக்கங்கள் இருப்பதைப் போல் எமக்குள் இருக்கின்ற உணர்வுகளிலும் நேரிய உணர்வுகள், எதிர்மறை உணர்வுகள் என்ற இருவகை உணர்வுகள் உள்ளன. அநேகமான சந்தர்ப்பங்களில் நாம் எமக்குள் இருக்கின்ற உணர்வுகளை அறிந்து கொள்ளாததாலும் அதன் தன்மை, அளவு அவை வெளிப்படும் சந்தர்ப்பங்கள் என்பவற்றை புரிந்துகொள்ளாததினாலும் அவற்றை ஆரோக்கியமான முறையிலே கையாளத் தவறிவிடுகின்றோம். இதன் விளைவாக எமது சிந்தனைகளும் நடத்தைகளும் சிதறடிக்கப்படுவதால் நாம் மற்றவர்களிடம் இருந்து விலக்கப்படுகின்றோம்.

உணர்வுகள் எமது வாழ்வை ஒரு பாதுகாப்பான நிலைக்கு கொண்டுவருவதற்கு பெருமளவில் பங்காற்றுகிறது. ஏனெனில் எம்மை ஒரு ஆபத்து நெருங்கும்பொழுது அல்லது எமக்கு அசௌகரியங்களை ஏற்படுத்தும் காரணிகள் எமக்கருகில் இருந்தாலோ எமது உணர்வுகள் எம்மை எச்சரித்து எம்மை அந்த ஆபத்தில் இருந்து அல்லது அசௌகரியங்களை விளைவிக்கும் காரணிகளிலிருந்து பாதுகாத்துவிடும். உதாரணமாக வீதியில் நடந்தால் உடனடியாக ''பயம்'' என்ற உணர்வு எம்மை எச்சரித்து அந்த இடத்திலிருந்து விரைவாக விலகச் செய்துவிடுகிறது.

மனிதனுக்கு பல்வேறுபட்ட தேவைகள் காணப்படுகின்றது. அடிப்படைத் தேவைகள், பணத்தேவை, பொருள் தேவை என அவர்களின் வாழ்வை மேம்படுத்த இந்தத் தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்றன. இவ்வாறான தேவைகளுக்கு அப்பால் ஒவ்வொரு மனிதனுக்கும் மிகவும் அவசியமான உணர்வுரீதியான தேவைகள் காணப்படுகின்றன. இவ்வாறான உணர்வு ரீதியான தேவைகள் புறக்கணிக்கப்படுவதால் ஒரு மனிதனின் நடத்தைப் பிறழ்வுகள், மதுவுக்கு அடிமையாதல், தற்கொலை போன்ற அசாதாரண நிலைக்கு தள்ளப்படுவான். எமது உணர்வுகளை நாம் அகற்றிவிடவோ அல்லது அதிலிருந்து அகன்றுவிடவோ முடியாது. ஆனால் சிலர் உணர்வுகளுக்கும் மன எழுச்சிக்கும் அடிமையாகி உள்ளனர்.

வேறு சிலர் சில உணர்வுகளை தவிர்ப்பதற்கு முயன்று தோற்றுவிடுகின்றனர். இன்னும் சிலர் தவறாக கையாள்வதால் பல பிரச்சினைகளை சந்திக்கின்றனர். எனவே உணர்வுகள் எம்மால் உணரப்படுவதும் அதன் விளைவுகள் உணரப்படுவதும் எமது நாளாந்த கடமைகளில் ஒன்றாகக் கருதி உணர்வுகளின் சமநிலையைப் பாதுகாத்து எம்மையும் நாம் சார்ந்த சமூகத்தையும் ஒரு ஆரோக்கியமான வாழ்வுக்கு இட்டுச் செல்வோம்.

## மனிதனால் உணரப்படும் சில உணர்வு ரீதியான தேவைகள்

மனிதனின் உணர்வு ரீதியான தேவைகள் ஆளுக்கு ஆள் இடத்துக்கு இடம் வேறுபடும். வயது, பால்நிலை, கலாசாரம், வாழும் சூழல் ஆகியவற்றினால் செல்வாக்குச் செலுத்தப்படுகிறது.

ஏற்றுக் கொள்ளல், சுதந்திரம், ஒப்புக்கொள்ளுதல், முழுநிறைவு, மெச்சுதல், பாராட்டுதல், அனுமதித்தல், நம்புதல், தகுதி, சவால்களை எதிர்கொள்ளல், தெளிவு, அதிகாரம், தன்னம்பிக்கை, மன்னித்தல், செவிமடுத்தல், உதவுதல், உதவியாக இருத்தல், முக்கியத்துவம், கட்டுப்பாட்டில் இருத்தல், அன்பு, உள்வாங்கல், கண்காணிப்பு, தனித்துவம், ஆதரிக்கப்படல், பாதுகாப்பு ஆதரவாக இருத்தல், நம்புதல், புரிந்துகொள்ளல், புரிந்துணர்வு, பெறுமதி, மதிப்புசுதந்திரமாய் நடத்தப்படல் போன்றன அடங்கும்.

## உணர்வுகளின் துஷ்பிரயோகம்



உணர்வுகளின் துஷ்பிரயோகமானது ஒரு வகை வன்முறையாகும். ஆயினும் இது எப்போதும் கவனிப்பாரற்றுப் போகிறது. இவை ஒருவரின் பெறுமதியை குறைப்பதோடு அவரை குடும்பத்திலிருந்தும், சமூகத்திலிருந்தும் தள்ளி வைக்கிறது. ஒருவரை தரக்குறைவாக மதிப்பது, பேசுவது எமது உணர்வுகளை தேவையற்ற முறையில் வெளிப்படுத்துவது யாவும் உணர்வு ரீதியான துஷ்பிரயோகம் என்றே கருதமுடியும். இதனால் எமக்குள் பல்வேறு உணர்வு ரீதியான உடலியல் ரீதியான பிரச்சினைகள் ஏற்படும் வாய்ப்புள்ளது.

உதாரணமாக:- பிறரை பயமுறுத்துவதற்கு அதீத கோபத்தை வெளிப்படுத்துவதால் உடலியல் பாதிப்பாக எமது சக்தி விரயமாவதுடன் முகத்தின் தசைகள் இறுக்கமடைந்து இதயத்துடிப்பு அதிகரிக்கும். உணர்வுரீதியான பாதிப்பாக தொடர்பாடலில் சிக்கல்நிலை ஏற்படும். மற்றவர்கள் எம்மீது வைத்திருக்கும் நம்பிக்கையை இழந்துவிடுவோம்.

சிறுவர் துஷ்பிரயோகத்தில் உணர்வு ரீதியான துஷ்பிரயோகம் அதிகளவில் நடைபெறுகின்றபோதிலும் அதே அளவுக்கு உணரப்படாமலும் உள்ளது. அவர்களின் உணர்வுகளைத் தூண்டுவது, மறுப்பது, முறையின்றி அதட்டுவது, அழவைப்பது, துன்புறுத்துவது போன்ற செயல்களின் மூலம் அவர்கள் உணர்வுரீதியாக துஷ்பிரயோகப்படுத்தப்படுகின்றனர்.

இதனால் அவர்கள் தமது சுய கணிப்பை குறைத்து எடைபோடுவதோடு மற்றவர்களுடனான உறவுச் சிக்கல், ஆளுமைக் குறைபாடு, தாழ்வுச் சிக்கல், மூர்க்கத்தனம் போன்ற விளைவுகளுக்கு உட்படுத்தப்படுகின்றனர். இந்த விளைவு அவர்களின் நடத்தைக் கோலங்களையும் மாற்றிவிடுகின்றது.

## நாம் எமது உணர்வுரீதியான ஆரோக்கியத்தை எப்படி முன்னேற்றலாம்

★எங்களது உணர்வுகளை தகுந்த முறையில் வெளிக்காட்ட வேண்டும். எங்களுக்கு பயம், துக்கம் போன்றவை இருந்தால் அவற்றை உள்ளே வைத்திருப்பது மேலும் உடலைப் பாதிக்கும். தகுந்த முறையில் அவற்றை, அதனை கையாள வேண்டும்.

★சமபல வாழ்க்கையை வாழவும்- உடலிலுள்ள எதிர்மறையான உணர்வுகளையிட்டு கவலை கொள்ளாது நேர்மறை உணர்வுகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தல் வேண்டும்.

★மீளெழும் தன்மையை அபிவிருத்தி செய்தல். இந்தத் தன்மையை கொண்ட மக்கள் ஆரோக்கியமான வழியில் மனஅழுத்தங்களுக்கு இணங்கிப் போவர்.

★எமது மனதையும், உடலையும் அமைதியாக வைத்திருக்க தியானிக்கும் போது எமது மனம் சமநிலையில் இருக்கும். இதை தேகப்பியாசம் மூலமும், நீண்ட குறுகிய மூச்சு விட்டு இழுப்பதன் மூலமும், வைத்தியரை அணுகி ஆலோசனை பெறுதலின் மூலமும் செய்து கொள்ளலாம்.

★நல்ல மன ஆரோக்கியத்துக்கு எமது உடலைப் பராமரிப்பது அவசியம். எமது ஒழுங்கான உணவுப் பழக்கம், போதிய நித்திரை பெறுதல் ஆகியன அவசியம். மது, போதைப் பொருள் பாவனைகள், குடும்பப் பிரச்சினைகள் எமது உடல்-உணர்வு ஆரோக்கியப் பிரச்சினைகளைக் கொண்டுவரும். ★

# மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம்...



**வாழ்வின் வளர்ச்சியில், நிம்மதியில், உயர்வில், மகிழ்வில், பின்நிற்பவள், தன்னையே அர்ப்பணித் திருப்பவள் மனைவியே ஆவாள். அவளைப் பொறுத்ததே மண வாழ்க் கையின் வளம். மனைவி அமைவதெல்லாம் இறை வன் கொடுத்த வரம் என்பது அதனாலேயே**

உலகில் பிறந்த நாம் உன்னத மனிதப்பிறவி எடுத்ததே மேன்மையானது. இந்த வாழ்க்கையை இன்பமாகவும், வளமாகவும் வாழ்வதிலேயே வாழ்க்கையின் பிறவிப் பயன் அடங்கியுள்ளது. வாழ்க்கையின் ஒரு படியாக அல்லது வாழ்வின் விஸ்தரிப்பாக மண வாழ்க்கை அமைகின்றது. வாழ்வின் வளர்ச்சியில், நிம்மதியில், உயர்வில், மகிழ்வில், பின்நிற்பவள், தன்னையே அர்ப்பணித்திருப்பவள் மனைவியே ஆவாள். அவளைப் பொறுத்ததே மணவாழ்க்கையின் வளம். மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம்.


மணவாழ்க்கையில் மனைவியால் சிலருக்கு வாழ்க்கை இனிக்கின்றது. சிலருக்கு வாழ்க்கை கசக்கின்றது. இது இறைவன் கொடுத்த வரத்தைப் பொறுத்ததேயாகும்.

கணவனுக்கு அடங்கிய, நம்பிக்கையானவளாக மனைவி அமைய வேண்டும். பருவம் தவறிய மழையும் நிதானம் தவறிய மனிதனும் பயனற்றுப்போவது உறுதி. எனவே செய்யப்போகும் விடயத்தில் எத்தகைய இடர்வரினும் அயராத உழைப்புடனும், விடாமுயற்சியுடனும் நம்பிக்கையுடனும், செயலாற்றக் கூடியவளாக அமைய வேண்டும்.

உறவினர்களின் நிகழ்வுகளில் பாச உணர்வுடன் கலந்துகொள்ளும் மனமுள்ளவளாகவும் , மனதை எப்போதும் உற்சாகத்தோடும் நட்புணர்வோடும் வைத்திருக்கப் பழகிக் கொண்டவளாகவும் சிக்கனமானவளாகவும் மனித உறவுகளை மேம்படுத்திக்கொள்பவளாகவும் அமைய வேண்டும்.

ஆரம்பகால மக்கள் வீடுகளில் பெட்டகம் என ஒருபொருள் வைத்திருப்பார்கள். அவற்றுள் பெறுமதிவாய்ந்த பொருள்களை வைத்து மூடிவைப்பர். தேவையேற்படும் போது மட்டும் மெதுவாகத் திறந்து பொருள்களை எடுப்பர். விலையுயர்ந்த பொருள்கள் இருப்பதால் நன்றாகத் திறக்கமாட்டார்கள். இப்பெட்டகம் போன்றதாக வாயைப் பயன்படுத்தி கொள்பவளாகவும், கணவனின் தேவையறிந்து நடந்து கொள்பவளாகவும், இருவரும் பிரச்சினை ஏற்பட்டால் யார் விட்டுக்கொடுப்பது எனப்போட்டி போடாது அவளே விட்டுக்கொடுக்கக் கூடியவளாகவும், அன்பை எந்நேரமும் பரிமாறுபவளாகவும் அமையவேண்டும்.

கணவனது வீட்டில் உள்ளோரையும் அவரது இனத்தவரையும் சமாளிக்கக் கூடியவளாகவும், அன்பால் வெல்லக்கூடியவளாகவும், மாமன், மாமியுடன் பொறுமையுடன் நடந்துகொள்பவளாகவும், கல்வியறிவு உடையவளாகவும் உடையில் கவனமுள்ளவளாகவும், துணிச்சலை துணையாகக் கொண்டவளாகவும், உயர்வைப் பற்றி சிந்திக்கக் கூடியவளாகவும் அமைய வேண்டும்.



குடும்ப உறவுக்கு பகையான சந்தேகத்தை கொண்டிருக்காதவளாகவும், திருமணத்திற்கு முன்பு நடந்த சில சம்பவங்களை பரிமாறிக்கொள்ளாத வளாகவும், மன அழுத்தம் தம்பதியினரிடையே நெருக்கத்தைப் பிரிக்கும் எதிரியாக உள்ளது. எனவே மன அழுத்தத்தை பொறுப்பவளாகவும், என்ன வேலைப்பளு இருந்தாலும் கணவனுடன் மனம் விட்டுப்பேச சிறிது நேரம் தானும் ஒவ்வொரு நாளும் ஒதுக்கக்கூடியவளாகவும், பிரச்சினை எனத் தோன்றும்போது பிரச்சினையின் உண்மைத் தன்மையை கணவனுடன் அன்பாகப் பேசி இருவருக்கிடையிலான இடைவெளியை குறைக்கக்கூடியவளாகவும் அமையவேண்டும்.

தாழ்வு மனப்பான்மையற்றவளாகவும், என்ன பிரச்சினை வந்தாலும் தற்கொலை பற்றிச் சிந்தியாது வாழ்க்கை வாழ்வதற்கே சாவதற்கல்ல என்ற மனோநிலை கொண்டவளாகவும் தோல்விகள் கிடைக்கும் போது சாந்தப்படுத்துபவளாகவும், வெற்றிகள் கிடைக்கும் போது உற்சாகப்படுத்துபவளாகவும், நல்ல எண்ணங்கள் வாழ்க்கைக்கு வலிமையானவை என்பதற்கு அமைய நல்லெண்ணங்களை கொண்டவளாகவும் அமைய வேண்டும்.

நீ சொல்லப்போகும் வார்த்தை மௌனத்தை விட சிறந்ததென்று திடமாகத் தெரியும்வரை வாயைத் திறவாதே என்பதை புரிந்து நடப்பவளாக, மற்றவர்களது உணர்வுக்கு மரியாதை செலுத்துவளாக, வாழ்வில் இலட்சியத்தை கொண்டவளாக, மன அழகுடையவளாகவும் காக்கையைப் போலவும்(ஒற்றுமை), தேனீயைப் போலவும்(உழைப்பு), எறும்பைப் போலவும் (சுறுசுறுப்பு), வாழையைப் போலவும் வாழக்கூடியவளாகவும் அமைதல் வேண்டும்.

இப்படியான வரம் கிடைத்தால் வாழ்க்கை பூப்பந்தல்கள் நிறைந்ததாகவும், சிங்காரத் தோப்பாகவும் மகிழ்ச்சி நிறைந்த வாழ்க்கையாக அமையும். இப்படியான வரம் கிடைக்காவிடின் மன இறுக்கத்துடனான பொறுப்பற்ற ஏனோதானோ என வாழ்க்கையை கொண்டு செல்ல வேண்டி ஏற்படும்.

எதுவுமே என்னுடையதல்ல எல்லாமே இறைவனுக்குச் சொந்தம். மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம். அதற்காக கணவன் எப்படியும் அமையலாம் என்பதல்ல.

**சி.நற்குணலிங்கம்,நெல்லியடி**

# கலைகள்



பயிற்சிகளின் பின் மூளை இயல்பூக்க மடைந்து அறிவின் கட்டளைகளுக்குக் காத்திராது செயற்படத் தொடங்கும். இவ்வாறு ஒவ்வொரு கட்டமாக முன்னேறி நாட்டியக்கலை கைவரப் பெறும்.

தவிர மனதில் சங்கடங்கள், கஷ்டங்கள், யோசனைகள் இருக்கின்ற காலத்தில் கூட குழம்பாது மூளை இவைகளை தனது இயல்பான இயக்கமாக்கிச் செயற்படும். இவ்வாறே நீச்சல் கலை, வாகனம் ஓட்டும்கலை என்பனவும் அடங்கும். எனவே கல்வி என்பது வேறு கலைகள் இல்லை. வேறு உதாரணமாக எவ்வாறு நீச்சல் அடிப்பது என்ற புத்தகத்தை வாங்கிப் படித்து விட்டு நடுக்கடலில் இறங்க முடியாது.

எவ்வாறாயினும் கல்வியின் தோற்றம் கலைகளை ஆவணப் படுத்தும் நோக்கங்களுக்காகவே உருவானது. எனவே கலை சம்பந்தமான வைகளைக் கலைக்கல்வி எனவும் அழைக்கப்படுகிறது. தவிர கல்வி கூட கற்றல் மற்றும் கற்பித்தலில் திறனாற்றல்களைச் செய்தால், அதாவது தண்ணிபட்ட பாடாக இருந்தால், கலையென்றும் அழைக்கலாம்.

**இராமஜெயபாலன்**

**இயற்கையின் (இறைவன்) படைப்புக்கலை**

வானில் தெரியும் முகில் கூட்டம், நகரும்போது பல்வேறு விதம் விதமான உருவங்கள் தோன்றி மறைகின்றது. இவைகள் எதிர்பாராத செயல் இதற்கு பின்புலம் இல்லை. தவிர ஒரே தன்மையுடைய பொருள் மூலத் தன்மையில் மாற்றமடையாது வடிவத்தில் மட்டும் மாறுதல்களை அடைகிறது.

(வளரும்)

# பறவைகள் ஏமாற்றும் திறன் கொண்டவை

**தாவ**ரங்களில் இருந்து பூச்சிகளை உதிர்த்துவிட்டு, அவற்றுக்கு அதிகமான இரை கிடைக்கும்படி செய்கின்றன. இப்படி இரு தரப்புப் பறவைகளும் பயனடைகின்றன.


காட்டின் வெவ்வேறு பகுதிகளில் காவல் பணியாற்றும் இரண்டு இனப் பறவைகளை சார்லஸ் ஆராய்ந்தார். 'டானேஜர்' என்ற பறவைகளும், உச்சாணிக் கொம்புகளில் நடமாடும் 'ஆன்ட்ஷ்ரைக்' என்ற பறவைகளும் தாழ்வான கிளைகளில் காவல் பணியாற்றுவது அவருக்குத் தெரிந்தது.

காவல் பறவைகள் இரையெடுக்கும்போது ஏனைய பறவைகளும் போட்டிக்கு வந்துவிடுகின்றன. பூச்சிகளைப் பிடிக்கும்போது துரத்தல்களும், சண்டைகளும் வழமையானவை. அதுபோன்ற போட்டிக் குழப்பங்களின்போது இரண்டு காவல் பறவைகளும் அபாய அறிவிப்புக் குரலை எழுப்பியதைக் கண்டு சார்லஸ் ஆச்சரியப்பட்டார்.

ஏனைய பறவைகளின் கவனத்தைத் திசை திருப்புவதற்காக அவை போலியான அபாய அறிவிப்பு ஒலியை எழுப்புகின்றனவோ என்று அவர் சந்தேகப்பட்டார். ஏனெனில் அப்போது அயலில் எதிரிகள் யாரும் இருக்கவில்லை. மேலும் காவல் பறவை தன்னை மறைத்துக் கொள்ளவும் முடியவில்லை.

காவல் பறவைகள் ஏன் இப்படி பொய்யான ஒலியை எழுப்பி ஏமாற்ற வேண்டும். ஏனைய பறவைகளை பயமுறுத்தி ஓட்டி விடுவதன் மூலம் தாம் நிறைய இரையைப் பிடிப்பதுதான் அவற்றின் நோக்கமாக இருக்க வேண்டும் என்று அவர் நினைத்தார். தொடர்ந்து அவர் பறவைகளைக் கண்காணித்து வந்தார்.

காவல் பறவைகள் தமது குஞ்சுகளுக்காக அதிக உணவு தேட வேண்டிய தேவை ஏற்படும்போது, அவை போலியான அபாய அறிவிப்பு ஒலியை எழுப்புவது அதிகமாகிறது. ஆனால் பொய்யோ, மெய்யோ, சத்தம் கேட்டதும் ஏனைய பறவைகள் கொஞ்சம் கூட தாமதிக்காது உடனே ஒளிர்ந்து கொள்வதையும் சார்லஸ் மன் கண்டுபிடித்தார். ★



-மிது-

# மரணத்தின் பின்னர்

*(சென்றவாரத் தொடர்ச்சி)*

இவற்றில் குறிப்பிட்ட அளவு நபர்களின் செய்திகள், அவர்களது அனுபவங்கள், தத்தமது மதம் சார்ந்த கதைகளாக வருவதனால், அவ்வாறானவற்றை பொய்யானது என்ற கண்ணோட்டத்தில் தவிர்த்து விட்டு, பொதுவான கருத்துக்களை இது தொடர்பாக ஆராய்பவர்கள் சேகரித்து வருகின்றார்கள்.விபத்துக்கள், கடுமையான நோய்வாய்ப்பட்டவர்கள், உயரமான இடங்களில் இருந்து தவறி விழுந்தவர்கள், தற்கொலை செய்யப்போய் ஆபத்தான கட்டத்தில் இருந்து காப்பாற்றப்பட்டவர்கள், இறந்ததாகக் கருதப்பட்டு, சற்று நேரத்தில் மீண்டும் இயல்பு நிலைக்கு வந்தவர்கள், எனப் பல்வேறு பட்டோரிடம் இந்த மாண்டு மீண்ட தகவல்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன.இதிலும் பலர், இறக்கும் நேரத்தில், முன்னர் இறந்துவிட்ட, தன் உறவினர்கள், நண்பர்கள் தம்மைப் பரிதாபத்துடன் பார்த்ததாகவும், அந்த நேரத்தில் நிகழ்காலத்தில் நிகழ்வதை, தம்முடன் வாழ்பவர்களைவிட, இறந்த அவர்களது நினைவுகளும், அவர்களது அன்பும் தமக்கு தேவையானதாக இருந்ததை உணர்ந்ததாகவும், அவர்களுடன் செல்லவே மனது ஆசைப்பட்டதாகவும் தெரிவிக்கின்றனர்.

வேறு சிலர், இறந்து சில செக்கன்களில் ஒரு கோணத்தில் மேல்நோக்கி நின்று தம் உடலைதாம் பார்த்து அதிசயித்ததாகவும், வலிகள், வேதனைகள், மறைந்து மிதக்கும் நிலையையும், தட்பவெப்பமான ஓர் அருமையான சூழலையும் உணர்ந்துகொண்டதாகவும் தெரிவித்துள்ளனர்.

ஆனால் இங்கு மிக முக்கியமான விடயம் என்னவென்றால், மாண்டு மீண்டவர்களாக பல்வேறு தரப்பினரிடமும், பல்வேறு பிரதேசத்தவரிடமும் பெறப்பட்ட தகவல்களில் பெரிய ஓர் ஒற்றுமைத் தன்மை காணப்படுவதே ஒரு திடுக்கிடும் கட்டமாக அமைந்துள்ளது.அதாவது அவர்களில் பெரும்பான்மையானவர்கள், தாம் மீண்டும் உயிர்பெறும் நிலை குறித்துக் கூறிய இறுதிக் கட்டங்கள் பெரும்பாலும் ஒத்து இருக்கின்றமையே அது.

அதாவது, இறுதியான பொழுதில், மிகவும் இருளாக காணப்படுவதாகவும், ஒளியின் எந்த அடையாளத்திற்கோ, எந்த அசைவுக்கோ வசதிகள் அற்றநிலையில் திடீர் என்று தோன்றும் பெரு ஒளி ஒன்று தம்மைப் பரவசத்தில் ஆழ்த்துவதாகவும், அதைக் காணும் கணமே எப்போதும் அனுபவித்திராத ஆனந்த அனுபவமாக இருப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.

இந்தக் கருத்து ஆச்சரியமானதாக இருந்தாலும்கூட, இதற்கும் விளக்கங்கள் உண்டு என்று ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். அதாவது, விமானப்படையினர், மிகை வேகங்கொண்ட போர் விமானப் பயிற்சிகளை ஆரம்பத்தில்மேற்கொள்ளும் போது, நன்றாகப் பழக்கப்படுவதன்முன்னர், அந்த வேகம்கண்ட பிரமிப்பிலும், வேகமான சுழற்சிகளிலும், தம்நிலை இழந்து, அந்த வேகம், நினைவலைகளைத் தடைப்படுத்தும்நேரம், இதுபோன்ற இருட்டு, பின்னர் ஒளி போன்ற காட்சிகளை நிறைய அனுபவித்துள்ள தாக ஆதாரங்களுடன் தெரிவிக்கின்றனர்.அதேபோல வேறு சில சந்தர்ப் பங்களிலும், திடீர் என நினைவு நிலை இழக்கப்பட்டு, மீண்டும் அது சுயநிலையை அடையும் சந்தர்ப்பங்களில் இதுபோன்ற சம்பவங்கள் அவர்களுக்கும் நிகழ்ந்துள்ளதாகக் கூறப்படுகின்றது.இது தவிர, மறு ஜென்ம அனுபவங்கள் கொண்ட சம்பவங்கள், நிறையவும் பதியப்பட்டு, எந்தத் தொடர்பும் இல்லாத இடமொன்றையும் நபர்களையும் கூறும் சிலர் பற்றியும், அவர்கள் கூறும் தகவல்கள் சரியாக இருப்பது பற்றியும் கண்டு மூளையைக் கசக்கிக்கொண்டுள்ளனர் ஆராய்வாளர்கள்.மறு ஜென்ம சம்பவங்கள், பலவும் அதிர்ச்சியையும் ஆச்சரியத்தையும் உண்டாக்குகின்றன. இது குறித்த டிஸ் கவரியின் 'டாக்குமென்றி' கூட இதை புரியாத கேள்வியுடனேயே முடித்தி ருப்பது குறிப்பிடத்தக்கது.மறு ஜென்மம் தொடர்பான சம்பவங்கள் உலகில் இலங்கையிலேயே அதிகமாக இடம் பெற்றுள்ளன.

ஆனால் இவற்றுக்கான விடைகள், எமக்கு என்றோ ஒருநாள் கிடைத்துவிடுவது மட்டும் உறுதி. கண்டிப்பாக நாம் சாகும் அந்த நேரத்தில் இந்த மர்மங்கள் துலங்கிவிடும். அல்லது அத்தகைய ஒன்று இல்லாமலே போய் விடவும் கூடும்.



"மறு ஜென்ம அனுபவங்கள் கொண்ட சம்பவங்கள், நிறையவும் பதியப்பட்டு, அதற்கு முன்னர் எந்தத் தொடர்பும் இல்லாத இடமொன்றையும் நபர்களையும் கூறும் சிலர் பற்றியும், அவர்கள் கூறும் தகவல்கள் சரியாக இருப்பது பற்றியும் கண்டு மூளையை கசக்கிக்கொண்டுள்ளனர் ஆராய்வாளர்கள்.மறு ஜென்ம சம்பவங்கள், பலவும் அதிர்ச்சியையும் ஆச்சரியத்தையும் உண்டாக்குகின்றன.

## இரா. ஜனார்த்தனன் உரை நிகழ்த்தவில்லை

தமிழ் இனப்பற்றாளரும் இலங்கை தமிழர் விடயங்களில் அக்கறை கொண்டிருந்தவருமான இரா. ஜனார்த்தனன் அண்மையில் காலமானார் என்பது இலங்கையில் உள்ள தமிழர்களுக்கு கவலைதரும் விடயம் தான்.

1974 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்ற தமிழாராய்ச்சி மாநாட்டை ஒட்டிய கூட்டத்தில் அவர் உரை நிகழ்த்தியதாக இங்கு சில ஊடகங்களும் கட்டுரையாளர்களும் எழுதுகிறார்கள். மாநாடு நடைபெற்ற சமயத்தில் அங்கு அவர் வந்திருந்தார் என்பதும் மண்டபத்துக்கு வெளியில் பத்திரிகையாளர்களைக் கூட அவர் சந்தித்திருந்தார் என்பதும் சரிதான். ஆனால் மாநாட்டில் அவர் உரை நிகழ்த்தவில்லை.அவர் எவ்வாறு இங்கு வந்தார் என்பதை அவரும் கூறவில்லை. வேறு எவரும் விளக்கவும் இல்லை.

ஜனார்த்தனன் வரப்போகிறார் என்ற செய்தி முன் கூட்டியே பரவியிருந்ததால் அதிகாரிகள் உஷார் அடைந்திருந்தனர். அவர் மகாநாட்டில் உரைநிகழ்த்தும் போது கைது செய்யப்படலாம் என்றும் எதிர்பார்க்கப்பட்டது.ஜனார்த்தனன் வந்திருந்த வேளையில் மாநாட்டில் இந்தியாவிலிருந்து வருகை தந்திருந்த இஸ்லாமியப் பேராசிரியர் நயினார் மொஹமட் அழகான அழமான தமிழ் நடையில் உரை நிகழ்த்திக் கொண்டிருந்தார். அவருடைய பேச்சில் மெய்மறந்து போன மக்கள் ஆரவாரம் செய்து வரவேற்றுக் கொண்டிருந்தார்கள். இந்த ஆரவாரத்தைக் கண்டு அவர்தான் ஜனார்த்தனனாக இருக்க வேண்டும் என்று அதிகாரிகள் அவசரப்பட்டு விட்டார்கள் என்று கூட கருதப்பட்டது. அதனால் கூட்டம் குழம்பியது. ஜனார்த்தனன் எப்படி வந்தாரோ அப்படியே மறைந்து விட்டார். பின்னர் அவர் இந்தியா திரும்பி விட்டதாக செய்தி வந்தது. அன்றைய நிகழ்வை அவதானித்துக் கொண்டிருந்த பத்திரிகையாளர்களில் நானும் ஒருவன்.

கூட்டம் குழம்புவதற்கு சற்று முன்னர்தான் நான் அங்கிருந்து வெளியேறியிருந்தேன்.

ஊர் சுத்தான்.

## புத்தகசாலை

### நூல்-"இந்துசமயம்: பண்பாடும் இலக்கியமும்"




அமரர் கலைமாமணி பொன்.தெய்வேந்திரனின் 31 ஆம் நாள் நினைவு வெளியீடாக "இந்து சமயம்: பண்பாடும் இலக்கியமும்" எனும் நூல் அவரது கட்டுரைகளைத் தாங்கி வெளி வந்துள்ளது.

வீரகேசரி பத்திரிகையில் அவர் எழுதிய இந்து சமயம் சார்ந்த 15 கட்டுரைகளைத் தொகுத்து இந்த நூல் வெளிவந்துள்ளது.

இந்தக் கட்டுரைகள் தமிழர் வாழ்வின் பண்பாடுகளோடும், இந்து சமயம் சார்ந்த பண்பாடுகள், ஆன்மிக வாழ்வு கலாசாரம், நம்பிக்கைகள் என்பவற்றோடும் தொடர்புடையவை. அதிகமான கட்டுரைகள் இந்துக்கள் கடைப்பிடிக்கும் விரதங்களுக்கு விளக்கமளிப்பனவாகவே உள்ளன.

இவற்றிலே விரதங்களோடு தமிழர் வாழ்க்கைப் பண்புகளும், பழக்க வழக்கங்களும் விழுமியங்களும் இயற்கையோடு தொடர்புபட்ட உணர்வுகளும் வெளிப்படுவதைக் காணலாம். இந்து தமிழ் உலகில் எதிர்காலச் சந்ததிக்கு பயன் தரும் நூலாக இது அமைகின்றது.

செல்வா

### நூல்: தமிழ்த் திருமணம்





தமிழ்த் திருமண நடைமுறைகள் தோன்றி வளர்ந்த விபரங்களையும் திருமண நிகழ்வுகள் பற்றிய விபரங்களைத் உள்ளடக்கி "தமிழ்த் திருமணம்" நூல் வெளிவந்துள்ளது.

தமிழ் நெறித்திருமணம், எம்மை இழிவுபடுத்தும் புரோகிதச் சடங்குகள், மணமக்களுக்கு அறிவுரை, தமிழ்த் திருமண முறை, திருமண அழைப்பிதழ்கள், நல்வாழ்வுக் குறிப்புகள் ஆகிய தலைப்புகளில் தமிழர்களது திருமண நடைமுறை களை இந்த நூல் இயல்கின்றது.

கடவுள், அருச்சனைகளால், வழிபாடுகளால், படையல்களால் திருப்தி செய்யத்தக்கவரல்லர் என்பது வள்ளுவத்தின் கொள்கை. வாழ்வாங்கு வாழ்தலே சிறந்த வழிபாடு என்பது வள்ளுவத்தின் சமய நெறி. திருக்குறள் உலக அறிஞர்களால் போற்றப் படும் உலகப் பொது மறை, அறநூல், அறிவு நூல்தமிழ் உயர்தனிச் செம்மொழி. எனவே மக்கள் திருக்குறள் ஓதித் தமிழிலே திருமணங்களைச் செய்ய முன்வர வேண்டும் என்று இந்த நூல் வற்புறுத்துகிறது. தமிழ்த் திருமணங்களை நடத்தும் திருமண முறையாகவும் திருமணப் பதிவு நூலாகவும் இந்த நூல் வெளி வந்துள்ளது.

உதயன்

### நூல்: 'Lame Love of Ramesh and Other Stories'




பத்து சிறுகதைகளைத் தாங்கி வெளியாகியுள்ளது 'Lame Love of Ramesh and Other Stories' என்ற ஆங்கில சிறு கதை தொகுப்பு நூல். அல்வாய் வடமேற்கைச் சேர்ந்தவரும் முன்னை நாள் பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபருமான மு.தம்பிப் பிள்ளையினால் இந்நூற்தொகுப்பு ஆக்கப்பட்டுள்ளது.

இந்தச் சிறு ஆங்கில சிறு கதைத் தொகுப்பு நூலானது எழுத்தாளரின் அனுபவப் பகிர்வாக அமைந்துள்ளமை குறிப்பிடத் தக்கதொன்றாகும்.

இதில் இடம்பெற்றுள்ள கதைகள் மிக எளிய நடையில் விரைவில் படித்து முடிக்கக் கூடிய சிறிய கதைகளாக உள்ளன. இது சகல வயதுப் பிரிவினருக்கும் பயன்மிக்கதாக அமையும் என்பது பெரிதும் வரவேற்கத்தக்க விடயமாக உள்ளது.

பிறைவாணன்

உங்கள் சிந்தனைக்காக ஓர் அனுபவப் பகிர்வு

# வாய்ச் சொல் செயலாகாது



■ சுபா, மானிப்பாய்

இன்று பெரும்பாலான மக்கள் இடம்பெயர்ந்து மீண்டும் தமது சொந்த இடங்களுக்கு மீள்குடியமர்த்தப்பட்டு வருகின்றனர்.

பொதுவாக எடுத்து நோக்கும் போது யாழ் மாவட்டத்தில் வலி. வடக்கு பிரதேசம், வலி. தென் மேற்கில் சில பிரதேசங்களும் வன்னிப் பிரதேசத்திலும் பலர் மீள் குடியமர்ந்துள்ள நிலையில் தமது வீடுகளைப் புனரமைத்து பிள்ளைகளுக்கான கல்வித் தேவைகளை நிவர்த்தி செய்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

அவர்களுக்கு இந்திய வீட்டுத்திட்டம், வேறு தொண்டு நிறுவனங்களால் அரை நிரந்தர வீட்டுத் திட்டம் என்பன வழங்கப்பட்டு வருகின்றன. அது மறுக்கவோ மறைக்கவோ முடியாத உண்மை.

அதே போல் வேறு சில தனியார் அமைப்புக்கள், கழகங்கள் போன்றன கல்வி நடவடிக்கைகளுக்கு கல்வி உபகரணங்களையும் வழங்குகின்றன. இந்த விடயங்கள் எல்லோரும் அறிந்ததே.

அடுத்து என் அனுபவ ரீதியான சில விடயங்களை இங்கு பகிர விரும்புகிறேன்.

இன்று மிகவும் வறுமைப்பட்ட நிலையில் இருக்கும் சில பிள்ளைகளைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கான கல்வி செலவுகளை பலர் வழங்கி வருகின்றனர்.

உதாரணமாக வெளிநாட்டில் வசிக்கும் ஒருவர் இங்குள்ள மாணவி ஒருவரை தேர்ந்தெடுத்து கிட்டத்தட்ட 04 வருடகாலமாக அந்த மாணவிக்கான கற்றல் தேவைகளை நிறைவேற்றி வருகிறார்.

இவ்வாறு பல பேர் பல செயற்பாடுகளை செய்கிறார்கள். அவர்களை வரவேற்கிறேன். உதவி செய்கிறார்கள் தானே. பின்னர் எதற்கு இந்த விளக்கங்கள் என்று கூடச் சிந்திக்கலாம்.

இன்று பலர் நல்ல வசதியாக இருக்கிறார்கள். இவ்வாறு உதவி செய்வதை பற்றிக் கதைத்தவுடன் ஓம் நல்ல விடயம்தானே இவ்வாறான நடவடிக்கைகள் இடம் பெறத்தான் வேண்டும். இவ்வாறான செயற்பாடுகளை நீங்கள் அனைவரும் முன்னெடுக்கவேண்டும். அவ்வாறு செய்தால் தான் எமது கிராமம் முன்னேறும் என்று பெரும் ஆதரவு தெரிவிப்பார்கள்.

இந்த வாய் வார்த்தையைக் கொண்டு ஏதாவது செயற்பாடுகளை முன்னெடுக்க முடியுமா? ஒரு செயற்பாட்டை செய்ய 50 பேர் கை கொடுக்கிறார்கள் என்றால் அதைவிட அதிகமாக வேறு முன்னேற்ற நடவடிக்கைகளை செயற்படுத்த இன்னும் 50 பேர் கை கொடுக்க முன்வரவேண்டும்.

நான் மீள் குடியமர்ந்தவர்களை கேட்கவில்லை. இன்று எத்தனையோ வசதி வாய்ப்புக்களுடன் ஆடம்பரமாக எத்தனையோ பேர் வசிக்கின்றனர்.

இந்த நிலையில் குடியிருக்க ஒரு கொட்டில் கூட இன்றி தறப்பாள்களைக் கட்டிக்கொண்டு அதற்குள் எத்தனையோ பேர் வசிக்கின்றனர்.

இந்த நிலையில் உள்ளவர்களுக்கு வசதி படைத்தவர்கள் ஏன் உதவ முன்வராது பின்வாங்குகின்றனர். அல்லது இந்த விடயம் குறித்துச் சிந்திக்கத்தவறுகின்றனர்?

வசதியாக இருங்கள், ஆடம்பரமாக இருங்கள். வேண்டாம் என்று சொல்லவில்லை. இந்த நிலையில் ஏன் ஏழை மாணவர்களுக்கு உதவ வேண்டும் என்ற சிந்தனை உங்களிடம் அற்றுப் போகிறது?

வசதியற்றவர்கள் என்றால் நாம் அவர்களிடத்தில் கேட்பது எந்த விதத்திலும்

> “ஒவ்வொருவரும் சிந்திக்கும் நல்ல விடயங்களை வாய்ப் பேச்சுடன் விட்டுவிடாது அதற்குச் செயல் வடிவம் கொடுத்து செயற்படுத்த வேண்டும்.”

நியாயமற்றது. திருமண வாழ்த்து பிரசுரிக்கிறார்கள், பிறந்த நாள் வாழ்த்து பிரசுரிக்கிறார்கள். ஆனால் உதவி கேட்கும் போது மட்டும் மறுக்கிறார்கள். ஒரு நாள் கொண்டாட்டத்துக்காக எத்தனையோ இலட்சம் ரூபாக்களைக் கொட்டிச் செலவு செய்யும் நீங்கள் ஏன் ஏழைக்கு ஒருவேளை உணவூட்ட முன்வரக் கூடாது.

இனி ஆலயங்களில் திருவிழாக்கள் ஆரம்பமாகும் சீசன் தொடங்குகிறது. அப்போது திருவிழாவை எவ்வாறு விமரிசையாகச் செய்யலாம் என்று சிந்திப்பார்கள்.

அதைச் சிந்திக்க தவறியவர்கள் யாராவது உண்டோ? உங்களை நீங்களே ஒரு தடவை கேட்டுக் கொள்ளுங்கள். ஆலயத் திருவிழாக்களுக்கு இந்த ஆடம்பரங்கள் அவசியம் தேவைதானா?

விமரிசையாக திருவிழா செய்கிறோம் என்று கச்சேரிகள் வைத்து நேரம்தான் வீணடிக்கப்படுகிறதே தவிர அதை மக்கள் முழு மனதுடன் ரசிக்கிறார்களா என்று முதலில் அவதானிக்க வேண்டும்.

சிலர் முன்னுதாரணமாகச் செயற்படுகிறார்கள். இன்னும் சில பேர் தம் பிள்ளைகளின் கொண்டாட்டங்களை மிக ஆடம்பரமாகச் செய்கின்றனர். மற்றும் சிலர் பிள்ளைகளின் கொண்டாட்டங்களைக் கூட மிகவும் பயன்மிக்கவையாகக் கொண்டாடுகின்றனர்.

சிலர், நாம் இவ்வளவும் செலவு செய்கிறோம் என்று எண்ணி அதில் ஒரு பகுதியை ஏழைகளுக்கு, முதியோருக்கு வழங்குகிறார்கள். இவர்கள் செய்வது நியாயமானது. தாம் செய்யும் ஆடம்பரச் செலவுக்கு ஏற்ப ஏழைகளையும் எவ்வித குறையும் இன்றி அரவணைக்கிறார்கள்.

ஒருவர் அப்படிச் செய்யலாம், இப்படிச் செய்யலாம் என்று அறிவுரை கூறுவதற்கு முன்னர், நான் இந்த நடவடிக்கைக்கு என்னால் ஆன என்ன பங்களிப்பை வழங்க முடியும் என்று முயற்சிக்க வேண்டும். அவர்களிடம் கேட்கலாம் என்று சொல்வதற்கு பதில் நான் ஏன் இவர்களுக்கு உதவக் கூடாது என்று சிந்திக்க வேண்டும்.

ஒவ்வொருவரும் தமது கிராமத்தில் உள்ளவர்களை முன்னேற்ற முயற்சித்தால் எமது நாடு முன்னேறும். ஒவ்வொருவரும் சிந்திக்கும் நல்ல விடயங்களை வாய்ப் பேச்சுடன் விட்டுவிடாது அதற்குச் செயல் வடிவம் கொடுத்து செயற்படுத்த வேண்டும்.

செயற்படுத்தினால் எத்தனையோ ஏழைகளுக்கு எழுத்தறிவித்த புண்ணியம் உங்களைச் சேரும். வாய்ச்சொல் செயலாகாது. அதனை செயற்படுத்த நாம் எல்லோரும் ஒன்றிணைவோம். ★

# கனியிருக்கக் காய் கவர்வது ஏன்?

■ இ.இராதாகிருஷ்ணன்

உலகுக்கு ஒளி போல், உடம்புக்கு உயிர் போல், பயிருக்கு மழை போல், வாழ்க்கைக்கு நாம் பேசும் வார்த்தைகள் முக்கியப் பங்காற்றுகின்றன.

அன்பு, அரவணைப்பு, ஆதரவு என்கிற வார்த்தைகள் பலரது வாழ்வில் மிக ஆச்சரியமான எதிர்பாராத மாற்றங்களை ஏற்படுத்தி வாழ்க்கைப் பாதையையே மாற்றியுள்ளன. அதே சமயத்தில், வெறுப்பு, வன்மம், காழ்ப் புணர்ச்சி காட்டும் வார்த்தைகள் பலரது வாழ்க்கையில் வன்முறையைத் தூண்டி வாழ்க்கையை அதல பாதாளத்தில் தள்ளி உள்ளன. மன்னியுங்கள், 'பரவாயில்லை, தயவு செய்து, நன்றி, வருக, நான் உங்களுக்கு உதவலாமா? போன்ற வார்த்தைகள் எமது அன்றாட வாழ்வில் பல அற்புதங்களைச் செய்யும். கொடூரமான, மரியாதையற்ற, மூர்க்கத்தனமாக வார்த்தைகளைப் பயன்படுத்துவதை எப்போதும் தவிர்க்க வேண்டும். அத்தகைய வார்த்தைகள் வயிற்றெரிச்சலையும், இதய எரிச்சலையும், பொறாமையையும் தூண்டும். வார்த்தைகளைப் பேசும்போது எச்சரிக்கையாக இருங்கள், நாம் பேசும் சொற்கள் மூலம் மற்றவர்களைக் காயப் படுத்தினால், அவர்கள் எம் மீது கொண்டுள்ள இணக்கமான உறவு பாதிப்படையும், அதனால் அவர் கள் நம் மீது கொண்டுள்ள நன்மதிப்பும், நல்லுறவும் அற்றுப்போகும். அந்த உறவு மீண்டும் புதுப்பிக்கப்பட்டாலும், அது மெல்லிய நூலில் எப்போதோ போடப்பட்ட முடிச்சுப் போல மனதை வருடிக் கொண்டேயிருக்கும்.

> “வார்த்தைகள் ஆயுதங்களை விடக் கூர்மையானவை. சரியாகப் பயன்படுத்தினால் வெல்வது நிச்சயம். தவறாகி விட்டதெனில் வீழ்வது உறுதி”

வார்த்தைகள் ஆயுதங்களை விடக் கூர்மையானவை. சரியாகப் பயன்படுத்தினால் வெல்வது நிச்சயம். தவறாகி விட்டதெனில் வீழ்வது உறுதி. கவலையற்ற, ஜாக்கிரதையான வார்த்தைகள் எமது இதயத்தைக் குத்தும். ஆனால், சான்றோர்களின் அறிவுள்ள நாக்கோ அதைக் குணப்படுத்தும். எம்மில் மூன்று வகையான மக்கள் இருக்கிறார்கள். ஒருவர் பேசுவதற்கு முன்பு யோசிப்பார், இன்னொருவர் பேசும்போது யோசித்துப் பேசுவார், மற்றொருவர் பேசிய பின் யோசித்து வருந்துவார். வதந்திகளைப் பரப்புவதும், பிறரைப் பற்றி குறை கூறுவதும் எம்மை திசைதிருப்ப நம் சக்தியை வீணாக்கும் கருவிகளாகும். நாம் பேசும் வார்த்தைகள் சூழ்நிலையைப் பற்றி விவரிக்காமல், சூழ்நிலையையே மாற்றி அமைக்கும் சக்தி வாய்ந்ததாக அமைய வேண்டும். நாம் பேசும் போது எதிரில் கடவுள் இருப்பதைப் போல் எண்ணிப் பேச வேண்டும். அந்த வார்த்தைகள் பிறரை வாழ்த்துவதாக அமைய வேண்டுமேயொழிய, சபிப்பதாக அமையக் கூடாது. ஏனெனில், வார்த்தைகள் 'பூமராங்' போன்று எம்மையே திருப்பித் தாக்கும் சக்தி வாய்ந்தவை.

அரண்மனையில் கண்ணாடியால் செய்யப்பட்ட பளிங்குத் தரையை, தண்ணீர் என்று நினைத்து மெதுவாக கால் வைத்து வழுக்கி கீழே விழுந்த துரியோதனனைப் பார்த்து திரௌபதி, ''குருடன் மகன் குருடனாகத்தானே இருப்பான்'' என்று சொல்லி நகைத்து பரிகாசத்துடன் அலட்சியமாகச் சிரித்தது தான் மகாபாரதப் போருக்கு வித்திட்டது. அதனால் தான் சான்றோர் ''தீமையை எதிர்த்து நில்'' என்கிறார்கள்.


ஒரு காட்டில் தவளைகள் குழுவாக பலதையும் பேசி நடந்து சென்று கொண்டிருந்தன. அப்போது இரண்டு தவளைகள் ஆழமுள்ள தரைக் கிணற்றில் தவறி விழுந்து விட்டன. மற்ற தவளைகள் அந்த பாழுங் கிணற்றை எட்டிப் பார்த்து, பயந்தன. '' எவ்வளவு ஆழமான கிணறு, எம் நண்பர்கள் மேலே வருவதே கடினம்'' என்று தங்களுக்குள் பேசிக் கொண்டன. பின்னர், கீழே விழுந்த இரு தவளைகளைப் பார்த்து, ''நீங்கள் காயப்பட்டு மேலே வருவதைவிட இறப்பதே மேல்'' என்று மேலிருந்து கத்தின. ஆனால், அந்த இரண்டு தவளைகளும் அவைகளின் பேச்சைக் கேட்காமல், தங்களின் முழு பலத்தையும் பயன்படுத்தி மேலே வர முயற்சித்தன. மீண்டும் மேலே இருந்த தவளைகள், ''நீங்கள் மேலே வர வேண்டாம், உங்கள் உடம்பில் காயங்கள் அதிகமாக இருப்பதால், நீங்கள் மேலே வந்தாலும் பிழைப்பது கடினம், பறவைகளுக்குத் தான் இரையாவீர்கள்'' என கத்தின. இதைக் கேட்ட ஒரு தவளை பயந்து கீழே விழுந்து இறந்தது. மற்றொரு தவளை, தன்னால் முடிந்த அனைத்து சக்தியையும் பயன்படுத்தி மீண்டும் மேல வர முயற்சித்தது. அப்போதும், மேலே உள்ள தவளைகள் கர்ணகடூரக் குரலால் கத்தின. ''மேலே வரவேண்டாம், நீ பிழைப்பது கடினம், இறந்து விடுவதே நல்லது'' என முழங்கின. ஆனாலும், தவளை ஒரே தாவாகத் தாவி மேலே வந்து அனைத்துத் தவளைகளையும் பார்த்து சிரித்தது. அப்போது மற்ற தவளைகள், ''நீ எப்படி மேலே வந்தாய்?'' என்று கேட்டன.

அதற்கு அந்தத் தவளை, ''எனக்குக் காது கேட்காது; நீங்கள் மேலிருந்து கத்தின உற்சாக வார்த்தைகளே என்னை மேலே வரத் தூண்டின. அதனால்தான் என்னால் மேலே வர முடிந்தது'' என்றது.

பார்வையற்றவர்களிடம் பேசும் போது உண்மையாகவே பார்வையற்றவர் போல் பேச வேண்டும். நோயுற்றவர்களிடம், நாமும் நோயுற்றவர்களாகித் தன்மையுடன் பேச வேண்டும். அவர்கள் மனதைப் பாதிக்காத வார்த்தைகளைப் பயன்படுத்த வேண்டும். பதினான்கு ஆண்டுகள் காட்டில் வனவாசம் அனுபவித்து விட்டு அயோத்தி நகரம் திரும்பிய இராமனைக் கண்டு கைகேயியும், மந்தரையும் (கூனி) பயந்தார்கள். இராமன் எம்மைக் கொன்று விடுவானோ, காட்டிற்கு அனுப்பி விடுவானோ என்றுகூட அச்சமுற்றார்கள். அவர்களது எண்ணவோட்டங்களை அறிந்த இராமன் அயோத்தி மாநகருக்குள் நுழைந்ததும் முதல் மரியாதையை கைகேயிக்கு அளித்து வணங்கினான். பின்னர் தான் தன் தாயான கௌசல்யாவைக் கண்டு வணங்கி நின்றான். பிறகு மந்தரையிடம் சென்று அவளை அணைத்து ஆதரவான, அன்பான, வார்த்தைகளைக் கூறி ஆறுதல்படுத்தி, முன்பிருந்ததைப் போலத் தொடர்ந்து அயோத்தி அரண்மனையிலேயே வாசம் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டான்.

நாம் பேசும் பேச்சுகள் மற்றவர்களின் துயரைப் போக்குவதாக அமைய வேண்டும். அவை பதறிய உள்ளங்களைச் சாந்தப்படுத்த வேண்டும். பின்னர் அதுவே எமது மனங்களைக் குளிர்ச்சியடையச் செய்து எண்ணத்தைத் தூய்மையாக்கி நல்வழி காட்டும். உள்ளத்தில் ஒளி உண்டானால் வாழ்க்கையில் இனிமை உண்டாகும். ★

# புலியைக்கொன்ற அதிசய பசுக்கள்!



முத்து ஓர் அநாதை வாலிபன். மாடு மேய்ப்பது ஒன்றுதான் அவனுக்குத் தெரிந்த தொழில். நான்கு பசுமாடுகளைத் தவிர வேறு எதுவும் அவனுக்குக் கிடையாது. தினமும் தன் கிராமத்தின் எல்லையில் இருந்த காட்டுக்குத் தன் மாடுகளை அழைத்துச் சென்றபின், அவற்றை மேய விட்டு விட்டு, முத்து ஒரு மரத்தடியில் அமர்ந்து குழல் ஊதிக் கொண்டே பொழுது போக்குவான்.

ஒருநாள் முத்து அவ்வாறு குழல் ஊதிக் கொண்டிருக்கையில்,திடீரென ஒரு புலியின் உறுமல் சத்தம் கேட்டது. தன் மாடுகளைப் புலி கொன்று விடுமே என்று பதறிக் கொண்டே எழுந்த போது, அவன் கண்களில் ஓர் அதிசயக் காட்சி தென்பட்டது. புலியைக் கண்டு பயந்து போய் தலைதெறிக்க ஓடாமல், அவனுடைய நான்கு மாடுகளும் புலியைச் சூழ்ந்து கொண்டு அதைத் தன் கொம்புகளால் தாக்கின. வாழ்வில் முதன்முறையாக தன்னைப் பசுமாடுகள் தாக்குவதைக் கண்டு அதிர்ச்சியுற்ற புலி தப்பித்து ஓட முயற்சித்தது. ஆனால் மாடுகள் அதைத் தப்பிக்க விடாமல் தன் கொம்புகளால் குத்திக் கிழித்துக் கொன்று விட்டன.

அன்று முதல், தன் மாடுகளின் மீது முத்துவுக்குப் பெருமதிப்பு ஏற்பட்டு விட்டது. அவற்றைப் பொக்கிஷம் போல், பத்திரமாகப் பாதுகாத்தான். அந்த ஆண்டு வானம் பொய்த்ததால், அவனுடைய மாடுகளுக்கு சரியானபடி தீவனம் கிடைக்கவில்லை. தன்னுடைய மாடுகள் அரை வயிற்றுக்கு உண்டு பட்டினி கிடப்பதைக் காண அவனால் முடியவில்லை. அதனால் அந்த கிராமத்தை விட்டுத் தன் பசுக்களுடன் வெகுதூரம் சென்று ஒரு மலைப்பிரதேசத்தை அடைந்தான். குன்றுகள் நிறைந்த அந்தப் பகுதியில் புல் செழிப்பாக வளர்ந்திருந்தும், அவற்றை மேய்வதற்கு மாடுகளே இருக்கவில்லை. அதனைக் கண்டு முத்து வியப்படைந்தான். அந்தப்பகுதியில் இருந்து சற்றுத் தொலைவிலிருந்த ஒரு கிராமத்தை அடைந்து அங்கு தன் குடிசையை அமைத்துக் கொண்டான்.

அந்தக் கிராமத்திலுள்ள ஏராளமான கால்நடைகள் எலும்பும், தோலுமாய் காணப்பட்டன. அருகிலேயே, குன்றுகளுக்கிடையே செழிப்பான புல்வெளி இருந்தும், கிராமத்தினர் தங்கள் மாடுகளை மேய்க்க அந்த இடத்திற்கு செல்லாமல் இருப்பது முத்துவிற்கு ஆச்சரியத்தை அளித்தது. உடனே அவன் கிராமத்து மக்களிடம் அதற்கான காரணத்தை கேட்டான்.அதற்கு அவர்கள், ''குன்றுகள் நிறைந்த அந்தப் பகுதியில் பல புலிகளும், சிங்கங்களும் எங்கிருந்தோ வந்து சேர்ந்து விட்டன. அங்கு மேயச் செல்லும் எங்கள் மாடுகள் காணாமற் போய் விட்டன. புலிகளும், சிங்கங்களும் எங்கள் மாடுகளை அடித்துத் தின்றுவிடுவதால், அங்கு நாங்கள் மாடுகளை அனுப்புவதே இல்லை. எல்லா மாடுகளும் கிராமத்திலேயே மேய்வதால், நாளடைவில் இங்கு புல் குறைந்து விட்டது. அதனால்தான் எங்களுடைய மாடுகள் வற்றிப் போய் காணப்படுகின்றன'' என்றனர்.

ஆனால் உண்மை என்னவென்றால், அந்தக் குன்றுப் பிரதேசத்தில் கஜராஜன் என்ற திருடன் வசித்து வந்தான். அவன் அங்கு மேய்வதற்கு வரும் பசுக்களைக் கண்டதும் அவற்றைத் திருடுவதற்கு ஒரு யோசனையைக் கையாண்டான். அதன்படி புதரில் மறைந்து கொண்டு, புலியைப் போலவும், சிங்கத்தைப் போலவும் ஒலி எழுப்புவான். மாடு மேய்ப்பவர்கள் அதைக்கேட்டு ஓடி விடுவார்கள். பிறகு பயந்து போனப் பசுக்களும் அந்தப் பகுதியை விட்டு ஓடிச் சென்று, எதிர் திசையை அடையும். வழிதவறிப்போன பசுக்களை அவன் அழைத்துச் சென்று வேறு கிராமங்களில் விற்று விடுவான். இப்படியே சில ஆண்டுகளில் அவன் நிறையப் பணம் சம்பாதித்து விட்டான்.

■ ஆகாஷ் ■

(அடுத்த வாரம் தொடரும்.........)



## உலகின் சில உச்சங்கள்

★ மிகப்பெரிய தேவாலயம் – சென்பீற்றர் – வத்திக்கான்
★ மிகப்பெரிய விமான நிலையம் – மன்னர் காலித் – சவூதி
★ மிகப் பெரிய இராணுவம் – மக்கள் இராணுவம் – சீனா
★ மிக உயர்ந்த பகுதி – எவரஸ்ட் சிகரம் – நேபாளம்
★ மிக தாழ்ந்த பகுதி – மரியானா
★ மிகப் பெரிய கடல் – தென்சீனக் கடல்
★ மிக நீளமான ஆறு – நைல் – ஆபிரிக்கா
★ மிகப் பெரிய பாலைவனம் – சஹாரா – வடஆபிரிக்கா
★ மிகப் பெரிய கண்டம் – ஆசியா
★ மிக வெப்பமான பகுதி – தலோல், டானகில்டிப் ரெஷன் எத்தியோப்பியா

நா.ஸ்ரீகிருஷ்ணா, தரம் 4ஏ,
யாழ்ப்பாணக் கல்லூரி.

## தடங்கள்

இது நீண்ட தூரப் பயணம்
சாதனைகளின் உச்சப்படியை
எட்டியவுடன் நினைவுக்கு வரும்
நீ முன்பதித்த தடங்கள்

இ.இளங்கீரன்
அச்சுவேலி.

## வாழ்க்கை ஒரு நாடக மேடை



அழுதுகொண்டே உலகத்திற்கு
வருகிறாய், ஆனால் சிரித்துக்கொண்டே
அதைவிட்டுச் செல்லும்படி வாழ்வாயாக.
பணக்காரர்களிடம் பணம் இருக்கிறது
ஏழைகளிடம் மன அமைதி இருக்கிறது
வாழ்க்கை ஒரு நாடக மேடை உங்கள்
பாகத்தை நடிக்க கற்றுக் கொள்ளுங்கள்

ந.திவ்யா, தரம் ஒப்,
யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி

## பொது அறிவு

★கரப்பான் பூச்சிக்கு முதுகெலும்பு இல்லை.
★நண்டுக்கு தலை இல்லை.
★தவளைக்கு கழுத்து இல்லை.
★மீன்கள் இல்லாத கடல்- சாக்கடல்
★மீன்கள் இல்லாத நதி- ஜோர்டான் நதி
★அரசாங்கமே வட்டிக் கடை நடத்தும் நாடு- மலேசியா
★ஆண்டுக்கு ஒரு முறை ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்கும் நாடு-சுவிற்சர்லாந்து
★பாம்புக்கு செவி இல்லை.
★சுண்டெலிக்கு வியர்ப்பதில்லை.
★பாம்பின் முட்டை கீழே விழுந்தாலும் உடைவதில்லை.

க.தர்ஷன்
தரம் 9 ஜி.
யாழ்.இந்துக்கல்லூரி

## உலகின் மிகப் பெரிய பல்கலைக்கழகங்கள்

ராஜஸ்தான் பல்கலைக்கழகம்-இந்தியா
பாம்பே பல்கலைக்கழகம்-இந்தியா
கல்கத்தா பல்கலைக்கழகம்-இந்தியா



அரச பல்கலைக்கழகம்-அமெரிக்கா



மெக்சிக்கோ பல்கலைக்கழகம்-மெக்சிக்கோ
ரோமன் பல்கலைக்கழகம்-இத்தாலி
கதவசாரா பல்கலைக்கழகம்-மெக்சிக்கோ
புவனஸ் அயர்ஸ் பல்கலைக்கழகம்-ஆஜென்டீனா

நா.ஸ்ரீவித்தியாதர், தரம்-7பி
யாழ்ப்பாணக்கல்லூரி

கலிபோர்னியா பல்கலைக்கழகம்-அமெரிக்கா



பாரிஸ் பல்கலைக்கழகம் பிரான்ஸ்

